சரிநிகர்
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**தாசிக்கும் அரசியல்வாதிக்கும் சிலேடை**

அன்றொருநாள் மேடையிலே அவர்களை நாம் ஏசியதை இன்று வந்தேன் சொல்லி இரைகின்றீர் - இன்றுவரை நடக்காத ஒன்றையும் நாம் செய்யவில்லை. காசுக்காய் படுக்காத தாசியெவள் பகர்.

– ஈழமோகம்

இதழ் 42 | மார்ச் 10-23, 1994 | விலை 7/=

## மட்டக்களப்பு மாநகரசபையும்

# ஐ. தே. கட்சியின் கையில்?

## பத்து லட்சத்திற்கும் பஜீரோ ஜீப்பிற்கும்

## விலைபோகும் மண்ணின் மைந்தர்கள்

(நமது நிருபர்)

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் மட்டக்களப்பு மாநகரசபையையும் தனது கையில் எடுத்துக் கொள்வதற்கான பேரம் பேசலில் வழமை போல ஐ.தே.க. தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் ஈரோஸ் இயக்கசார்பில் போட்டியிட்ட சுயேட்சைக்குழுவை ஐ.தே.க. விலைக்கு வாங்கியுள்ளதாகவும் நம்பகரமாகத் தெரிய வருகிறது. லட்சக்கணக்கான பணமும் பஜீரோ ஜீப்பும் வழங்கப்படுமெனக்கூறி தம்மை மண்ணின் மைந்தர்களென அழைத்துக் கொள்ளும் ஈரோஸ் குழுவை விலைக்கு வாங்கிய பின், ரெலோ, புளொட் சார்பில் போட்டியிட்ட செழியன் தலைமையிலான சில உறுப்பினர்களையும் விலைக்கு வாங்கி விடவும், அதன் பின் மாநகர சபை அதிகாரத்தைத் தமதாக்கி விடவும் ஐ.தே.க. முயன்று வருவதாக இங்குள்ள ஐ.தே.க. வட்டாரங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிரட்டல், ஆயுதமுனையில் கள்ள வோட்டு ஆகியவற்றால் ஜனநாயகம் நிலவுவதை நிலைநாட்டிய அரசினதும் ஆளும் கட்சியினதும் பேரம் பேசலுக்குப்பின் இலாபமடையப் போவது யு.என்.பியே என்று சரிநிகர் சென்ற இதழில் சுட்டிக்காட்டியது உறுதியாகிவருகிறது என்பதை இச்செய்திகள் நிரூபிக்கின்றன.

தேர்தல் முடிந்தபின் நடைபெறும் நிகழ்வுகள் மக்களை மேலும் அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளன. மட்டக்களப்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்ட ஈரோஸ் குழுவினர் தேர்தல் காலத்தில் வெளியிட்ட பிரசுரங்களும் கொடுத்த வாக்குறுதிகளும் சொல்லில் அடக்கி தாங்களே மண்ணின் மைந்தர்கள். அரசுக்கு எதிரான போராட்டத்தில் தாங்கள் மாத்திரமே உறுதியானவர்கள், தங்களை ஆதரிப்பதன் மூலமே தமிழ் மக்கள் விடுதலை பெற முடியும், என்றெல்லாம் தேர்தல் கூட்டங்களில் உரத்து முழங்கிய இவர்கள் தேர்தலில் பெற்ற இடங்கள் மூன்று.

ஆனால் இப்போ சுயேட்சைக்குழுவின் தலைமை வேட்பாளராகப் போட்டியிட்ட பிரபாகரன் அரச தரப்பினரின் 10 லட்சம் ரூபாய்க்கும் பஜீரோ ஜீப்பிற்கும் விலை போயுள்ளதாகத் தெரிய வருகிறது. அதனால் ஏற்கனவே ஐ.தே.க.வுக்கு கிடைத்த 5 ஆசனங்களும் மோகன் குழுவினர்க்குக் கிடைத்த 1 ஆசனமும் பிரபாகரன் தலைமையிலான ஈரோஸ் சுயேட்சைக்குழுவின் இணைவினால் கிடைத்த 3 ஆசனமும் சேர்த்து மொத்தம் 9 ஆசனங்களை ஐ.தே.க. தன்வசம் ஆக்கியுள்ளது.

மண்ணின் மைந்தர்களென தம்மை வர்ணித்த பிரபாகரன் குழுவினர் இப்போ எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையிலேயே ஐ.தே..வுடன் தாம் இணைந்ததாகக் கூறுகின்றனர்.

→15




## போடு புள்ளடி சாராயத்துக்காக

மட்டக்களப்பில் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்களைத் தேர்தல் திணைக்களம் நடத்தியது என்பதை விடவும் பொலிஸாரும், இராணுவத்தினரும் நடாத்தினார்கள் என்பதே பொருத்தமானது என்று மட்டு மக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

அரசபடையினர் தேர்தலில் சம்பந்தப்படமாட்டார்கள் என படை அதிகாரிகளும் அரசாங்க உயர்மட்டத்தினரும் கூறிய வார்த்தைகள் யாவும் காற்றில் பறந்தன. பொலிசாரும் அதிரடிப்படையினரும் வாக்குச்சாவடிகளில் தமது வழமையான காடைத்தனத்தை கட்டவிழ்த்து விட்டனர். குறிப்பாக கிராமப் புறங்களில் இருந்த வாக்குச்சாவடிகள் யாவற்றிலும் அரசபடையினரின் காடைத்தனத்திற்கு குறைவேயில்லை.

உன்னிச்சை கிராமத்தில் இருந்த வாக்குச்சாவடியில் புகுந்த அரசபடையினர் ஆகாயத்தில் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து தாமே வாக்குகளைச் செலுத்தியுள்ளனர். ஆறுமுகத்தான் குடியிருப்பு, ஏறாவூர், ஆயித்தியமலை, வாகரை, நாசிவன் தீவு ஆகிய இடங்களிலும் இதே மாதிரியான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

கிராமப்பகுதிகளை மட்டுமன்றி நகரப் பகுதிகளையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை. நகரின் மத்தியில் அமைந்துள்ள மெதடிஸ் மத்திய கல்லூரியில் நின்ற பொலிஸ் அதிகாரி வாக்களிக்க வந்தவர்களைப் பார்த்து உங்கள் வாக்குகளை நாமே போட்டுவிட்டோம் நீங்கள் வீடு செல்லுங்கள் எனக்கூறியுள்ளார்.

காத்தான்குடியில் இவ்வாறு நடந்ததன் விளைவாக இறுதியில் பொலிஸாருக்கும் முஸ்லீம் காங்கிரஸுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது. துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதற்கிடையில் கிரான்குள வாக்காளர் அனைவரும் ஐ.தே.கவுக்கே வாக்களிக்க வேண்டும் இல்லாவிட்டால் புலி

→15

## கடல் வலயத் தடைச் சட்டம் நீக்கப்படவுமில்லை நிவாரணமுமில்லை

மார்ச் முதலாம் திகதி தொடக்கம் வட பகுதியின் 'கடல் வலயத் தடைச் சட்டம் நீக்கப்படும்' என வெளியாகிய அரசாங்கத் தரப்புத் தகவல் வட பகுதி மீனவர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியையும் வரவேற்பையும் பெற்றிருந்தது. இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டு பேரிழப்புகளுக்கு ஆளாகியிருந்த அவர்கள் தமது கஷ்ட ஜீவனத்திற்கு விமோசனம் ஏற்பட்டதாகவே கருதி மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இந்த அறிவித்தல் பத்திரிகைகளில் வெளியாகியதும் கிளாலி கடலேரிப் பரப்பின் ஊடாக நடைபெறும் இரவு நேரப் படகுப் பயணமும் கூட ஆபத்து அற்றதாகவே அமையும் என எதிர் பார்த்து மகிழ்ந்திருந்தார்கள்.

வடபகுதியின் அதிமுக்கிய ஜீவனோபாயமாகிய மீன்பிடித் தொழிலும் அதனோடு இயைந்த வேறு தொழில்களும் இந்த கடல்வலயத் தடைச் சட்டத்தினால் வெகுவாகப் பாதிக்கபபட்டன. அன்றாட உணவுக்குரிய போஷாக்கு மிக்க மீன் கிடைக்காமையினால் வடபகுதி மக்களுக்கு உணவுப் பஞ்சமும், அதனோடு போஷாக்கின்மையும் ஏற்பட நேர்ந்தது.

மன்னார்த் தீவு தொடக்கம் முல்லைத் தீவு வரையிலான வடபகுதியின் கரையோரப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த 15ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இதனால் தொழில் இழந்திருந்தார்கள். தடைச் சட்டத்தையும் பொருட்படுத்தாமல் கரைவலை மீன்பிடியில் ஈடுபட்ட இந்த மீனவர்கள் கடந்த இரண்டு மாதங்களாக பல உயிராபத்துக்களை எதிர் கொண்டார்கள்.

ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் மாத்திரம் வடபகுதியைச் சேர்ந்த 45ற்கும் அதிகமான மீனவர்கள் கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிந்த வேளையில் கடற்படையினரது பீரங்கிப் படகுத் தாக்குதல், துப்பாக்கிப் பிரயோகம்

→15

# தேர்தலின் மறுபக்கம்


தினகரன்
The Thinakaran
Largest Circulation in Sri Lanka
கிழக்கு மாகாணத்தில்
ஐ. தே. க. சார்பில் போட்டியிடும்:
3 பெண் வேட்பாளர்களைக் காணவில்லை
வெளிநாட்டவரையும் இரு அதிகாரிகளையும் கைது செய்ய பொலிசார் நடவடிக்கை
ஜே. வி. பி. வங்கிக் கொள்ளை நடவடிக்கை பற்றிக் கண்டறிய புதிய முயற்சிகள்

**நடை பெற்று முடிந்த மாகாணசபைக்கான உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பு மனுத்தாக்கலின் போது படையினர் பலரிடம் பலாத்காரமாகக் கையொப்பம் பெற்றனர் என்பதும், அவர்களது விருப்புக்கு மாறாக தேர்தலில் போட்டியிடுமாறு படையினரால் அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்பதும் தொடர்பான செய்திகள் ஏற்கனவே வாசகர்கள் அறிந்ததே**

**விசேட அதிரடிப்படையினரால் பலாத்காரமாக வேட்புமனுவில் கையொப்பம் பெறப்பட்ட மண்டூரைச் சேர்ந்த மயில்வாகனம் கலாவதி, வேலப்போடி தங்கமலர், கணபதிப்பிள்ளை ராசம்மா ஆகியோரது வாக்குமூலங்கள் கீழே பிரசுரமாகிறது.**

**தேர்தலில் போட்டியிட விரும்பாத இவர்கள் தாம் பணிபுரியும் ரெட்பானா நிறுவனத்தின் உதவியுடன் கொழும்புக்கு வந்திருந்ததை அரச பத்திரிகைகள் 'இவர்கள் கடத்திச் செல்லப்பட்டார்கள்' என்ற பாணியில் செய்தி வெளியிட்டிருந்ததும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.**

---

**பெயர்-மயில்வாகனம் கலாவதி**
**வயது-25-இலங்கை தமிழ், இந்து**
**-ரெட்பானா சிறுவர் பாடசாலை ஆசிரியர் -**
**விலாசம் -காக்காச்சிவட்டை, மண்டூர்.**

### சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மட்டக்களப்பு

கடந்த 8/1/94 அன்று நான் 'ரெட்பானா' கிராம அபிவிருத்தி கூட்டம் முடிவடைய எங்கள் வீட்டுக்குச் சென்று நானும் தங்கமலரும் கூட்ட அறிக்கையை எழுதிக் கொண்டிருந்தோம். அப்போது படையினர் சிலர் எங்கள் வீட்டைச் சுற்றி வளைத்து, எங்கள் அடையாள அட்டைகளை பரிசோதித்ததன் பின் அடுத்தநாள் மாலை 4.00 மணிக்கு முகாமுக்கு வரும்படி கூறினர். அடுத்தநாள் மீண்டும் எங்கள் வீட்டுக்கு வந்து என்னைப் படையினர் விசாரித்ததன் பின்னர் விடுவித்தனர். மீண்டும் 10-1-94 அன்று ரெட்பானா சிறுவர் பாடசாலையில் நானும் தங்கமலரும் படிப்பித்துக் கொண்டிருந்த போது பாலையடிவட்டை இராணுவ முகாமின் அதிகாரிகள் எங்கள் விருப்பத்திற்கு மாறாக பலாத்காரமாக மட்டக்களப்பு உயர்நீதிமன்றத்திற்கு எங்களைக் கொண்டு சென்று அங்கு 3 தாள்களில் கையெழுத்து பெற்றுக் கொண்டனர். அத்தாளில் மேல்பக்கம் மடிக்கப்பட்டிருந்தது. நாங்கள் ஏன் கையெழுத்திட்டோம் என்பது பத்திரிகையில் வெளிவந்த வேட்பாளர் பட்டியலில் எங்கள் பெயரைக் கண்டதன் பின்பு தான் உணர்ந்தோம். 8-1-94 அன்று ரெட்பானா சிறுவர் பாடசாலையில் நான் படிப்பித்துக் கொண்டிருந்த போது எ.எஸ்.பி.யிடமிருந்து எங்களுக்கு அழைப்பு வந்தது. களுவாஞ்சிக்குடி ஏ.எஸ்.பி. காரியாலயத்திற்கு நாங்கள். கொண்டு செல்லப்பட்டோம். அங்கு ஏ.எஸ்.பி முன்னிலையில் எங்களுக்கு 5000 ரூபா பணம் வழங்கப்பட்டது. நாங்கள் இதனை எங்கள் தலைமைக் காரியாலயத்திற்கு தெரிவித்து எங்கள் வீட்டிலிருந்து வெளியேறி எங்கள் அமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் தங்கினோம். நாங்கள் இத்தேர்தலில் போட்டியிட ஒரு போதும் விருப்பப்பட்டதில்லை. எங்கள் பெயரை வேட்பாளர் பட்டியலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**இங்ஙனம்**
**நம்பிக்கைக்குரிய**
**மயில்வாகனம் கலாவதி.**

---

**கணபதிப்பிள்ளை இராசம்மாள்**
**வயது-32**
**இலங்கைத் தமிழ்- இந்து**
**தொழில் - ரெட்பானா சிறுவர் பாடசாலை ஆசிரியர்**
**விலாசம்- காக்காச்சி வட்டை, மண்டூர் (கிழக்கு மாகாணம்)**

### சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மட்டக்களப்பு

9-1-94 அன்று பிற்பகல் 3.30க்கு பாலையடி வட்டை எஸ்.டி.எப்.முகாமினர் உடனே வரும்படி எனக்கு ஆணை அனுப்பினர். முகாமுக்கு கொண்டு செல்லப்படும் போது வி, தங்கமலர் மற்றும் கலாவதி எனும் ஆசிரியர்களும் இன்னும் இளைஞர்கள் மூவரும் எனக்கு கிடைத்ததைப் போல் ஆணை கிடைக்கப் பெற்று என்னுடன் பாலையடி வட்டை எஸ்.டி.எப் முகாமுக்கு வந்தனர். அங்கு எங்களை விட இன்னும் பத்துப் பேர் முகாமுக்கு கொண்டு வரப்பட்டிருந்தனர். முகாமில் எஸ்.ரி.எப் அதிகாரிகள் எங்களது அடையாள அட்டைகளை சோதித்ததுடன் விசாரிக்கவும் பட்டோம். அப்போது நாங்கள் சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் பயிற்சிகளுக்காக அடிக்கடி கொழும்பு மாத்தளை போன்ற பகுதிகளுக்கும் போவதாகவும், அதே போல் இடமாற்றங்களும் செய்யப்படுவோம் என்றும் தெரிவித்தோம்.

அதே போல் நாங்கள் முகாமுக்கு வரவழைக்கப்பட்டதற்கான காரணத்தை கேட்ட போது எஸ்.டி.எப் அதிகாரிகள் 'இதுவும் சமூக சேவைதான் நாங்கள் இக்கிராமத்தில் அதிககாலம் இருக்கப் போவதில்லை. எனவே உங்களைப் போன்ற இளைஞர்களை ஸ்தாபனப்படுத்தி உங்களிடம் பொறுப்புக்களை பாரமளிக்கவே உங்களை அழைப்பித்தோம்' எனக் கூறினார். அவர்களில் ஒருவரும் தேர்தலைப் பற்றியோ அல்லது தேர்தலில் பங்கு கொள்வது பற்றியோ ஒரு சொல்லும் கதைக்கவில்லை.

''நாங்கள் கூறுபவற்றை எதிர்த்தால் நீங்கள் இலங்கையில் எந்த மூலையில் இருந்தாலும் நாங்கள் உங்களைக் கண்டு பிடித்து விடுவோம். எங்களிடம் இருந்து தப்பவே முடியாது'' என அவர்கள் எங்களிடம் கூறினர். அடுத்தநாள் (10-1-94) என்னுடன் முதல் நாள் அம்முகாமிலிருந்த இளைஞர் மூலமாக என்னை முகாமுக்கு வரும்படி ஆணையிட்டனர். அந்நேரம் நான் பாடசாலையில் பிள்ளைகளுக்கு படிப்பித்துக்கொண்டிருந்ததால் பிள்ளைகளை இடையில் விட்டு விட்டு வரமுடியாது என்றேன். ஆனால் அவ் இளைஞனோ மீண்டும் என்னை முகாமுக்கு வரும்படி வற்புறுத்தினான். சிறிது நேரத்தில் எங்களைத் தேடிக் கொண்டு எஸ்.ரி.எப் அதிகாரிகள் வந்தார்கள். எங்களை லொறி ஒன்றில் ஏற்றிக் கொண்டு மட்டக்களப்பு உயர்நீதிமன்றத்துக்கு கொண்டு சென்று பலாத்காரமாக எங்களிடமிருந்து கையெழுத்து பெற்றுக் கொண்டனர். 11-1-94 காலை 9.00மணி வரை எங்களுக்கு சாப்பாடு தண்ணீர் கூட கிடைக்கவில்லை.

12-1-94 நான் பாடசாலை செல்வதற்காக குருவன்வெளி எனும் பிரதேசத்திலிருந்து எனது மகளுடன் சென்று கொண்டிருந்த போது நாவலடி பிரதேசத்தில் எனது சைக்கிளையும், எனது மகளையும் என்னிடமிருந்து விலக்கி இன்னொரு பெண்ணிடம் கையளித்து வீட்டில் விடும்படி கூறி என்னை ஜீப் ஒன்றில் ஏற்றிக் கொண்டு மீண்டும் மட்டக்களப்பு உயர்நீதிமன்றத்துக்கு கொண்டு சென்றனர். அங்கு நான் தேர்தலில் நிற்க விருப்பமில்லை எனக்கூறி அழுதேன். எனது பெயரைத் தேர்தல் பட்டியலிலிருந்து எடுத்து விடும்படியும் கூறினேன். பட்டியலில் இடம் பெற்றாகி விட்டது. இனி அழுது பிரயோசனமில்லை வீட்டுக்குப் போகலாம் என என்னை விடுதலை செய்தனர்.

8-2-94 அன்று வெல்லாவெளி பொலிஸ் ஜீப் வாகனம் ஒன்று வந்து நான் படிப்பிக்கும் பாடசாலையைச் சுற்றி வளைத்து என்னை மீண்டும் கைது செய்து களுவாஞ்சிக்குடி பொலிஸில் பிரதிப் பொலிஸ் அதிகாரி முன்னிலையில் கொண்டு வந்து 5000/= பணத்தை எனக்கு கொடுத்தனர். எனக்கு இத்தேர்தலில் வேட்பாளராக இருக்க கொஞ்சமேனும் விருப்பமில்லை. எனவே வேட்பாளர் பட்டியலில் இருந்து விலக்குமாறு கருணையுடன் வேண்டுகிறேன்.

**இங்ஙனம்**
**நம்பிக்கைக்குரிய**
**கே.ராசம்மாள்**
22.2.9

---

**பெயர்:வேலாப்போடி தங்கமலர்**
**விலாசம்: காக்காச்சிவட்டை, மண்டூர்**
**வயது: 30 இலங்கை தமிழ் கிறிஸ்தவம்**
**தொழில்: ரெட்பானா கிராம அபிவிருத்தி சேவையாளர்**

### சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மட்டக்களப்பு

நான் தொழில் புரியும் இடமான காக்காச்சி வட்டை கிராமத்தில் என்னையும் கலாவதியையும் 4-1-94 ம் திகதி பெற்றோர்கள் சந்திக்கும் கூட்டமொன்றின் முடிவில் மாலை 5.45 அளவில் எங்கள் வீட்டுக்கு செல்லும் வழியில் பாலையடிவட்டை எஸ்.டி.எப் முகாமின் அதிகாரிகள் எங்கள் தொழில் தொடர்பாகவும் 'ரெட்பானா' அமைப்பின் வேலைத்திட்டத்தையும் பற்றியும் விசாரித்தார்கள். நாங்கள் விளக்கினோம். 5-1-94 அன்று முற்பகல் 11க்கு எங்கள் உறுப்பினர்களை சந்தித்து பேசுவதற்காக நாங்கள் கூட்டமொன்றிற்கு செல்லும் போது அவ் எஸ்.டி.எப் அதிகாரிகள் என்னுடைய விலாசம் தொழில் புரியும் இடம், விலாசம் என்பவற்றையும் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர். எனது தேசிய அடையாள அட்டையையும் பரீட்சித்தனர் 8-1-94 அன்று சிறுவர் பாடசாலை அபிவிருத்தி சங்க கூட்டம் முடிவடைந்ததன் பின் மாலை 3.10க்கு வீட்டுக்கு வந்து மீண்டும் எங்கள் அமைப்பின் செயலாளரான கே.மகேந்திரனுடன் கலாவதியின் வீட்டுக்குச் சென்று எங்கள் அமைப்பின் அன்றைய கூட்ட அறிக்கையை எழுதிக் கொண்டிருந்தேன். அவ்வீட்டை எஸ்.டி.எப் அதிகாரிகள் சுற்றி வளைத்தனர். எங்கள் அனைவரது அடையாள அட்டைகளும் பரிசோதிக்கப்பட்டன. பின்னர் என்னையும் கலாவதியையும் செயலாளரான மகேந்திரனையும் இன்னும் மூவரையும் அடுத்தநாள் 4.00மணியளவில் முகாமுக்கு வரும்படி ஆணையிட்டனர். 9-1-94 அன்று எங்கள் அமைப்பின் அதிகாரி ஒருவருடன் களுவாஞ்சிக்குடி போய் வந்து மாலை 3.00க்கு சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளை எனது வீடு எஸ்.டி.எப் யினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

முகாமுக்கு ஏன் வரவில்லை என என்னை விசாரித்தார்கள். நான் காரணத்தைக் கூறினேன். ஆனாலும் என்னை முகாமுக்கு வரும்படி மீண்டும் வற்புறுத்தினார்கள். மாலை 4.00 மணிக்கு நாங்கள் முகாமுக்கு சென்றோம். எங்களது தனிப்பட்ட மற்றும் தொழில் தொடர்பான விபரங்களை குறிப்பெடுத்தார்கள். பின்னர் ஐந்து முப்பதுக்கு நாங்கள் முகாமிலிருந்து வெளியேறினோம். அடுத்தநாளும் வரவேண்டும் என எங்களுக்கு ஆணையிட்டனர். ஆனால் அடுத்தநாள் நாங்கள் போகவில்லை. அவர்கள் எங்களைத் தேடிக்கொண்டு வந்து வெல்லாவெளி முகாமுக்கு மீண்டும் கொண்டு சென்றனர். எங்களை மட்டக்களப்பிற்கு கொணடு செல்வதாகக் கூறினார்கள். நாங்கள் எங்கள் அமைப்பான 'ரெட்பானா'வுக்கு அறிவிக்க வேண்டும் எனக் கோரினோம். அதற்கு அவசியம் இல்லை என அவர்கள் கூறினார்கள். பின்னர் லொறியொன்றில் எங்களை மட்டக்களப்பு உயர்நீதிமன்றத்துக்கு கொண்டு சென்று அங்கு எங்களை மிரட்டி எங்கள் எதிர்ப்பின் மத்தியிலும் 3 கடிதங்களிலும் கையெழுத்து வாங்கிக் கொண்டனர். எங்களிடமிருந்து கையெழுத்து பெறும் போது கடிதத்தின் மேற்பகுதி மடிக்கப்பட்டிருந்தது. நாங்கள் கையெழுத்திட்டது ஏன் என்பதற்கான காரணம் செய்திப் பத்திரிகையில் வேட்பாளர்களது பட்டியலில் எங்கள் பெயர் இடம் பெற்றுள்ளதை கண்டதன் பிறகே தெரிந்தது. 8-2-94 அன்று காக்காச்சி வட்டை சிறுவர் பாடசாலையில் நான் இருந்த போது திடீரென்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியிடம் இருந்து அழைப்பு வந்தது.

பொலிஸ் அதிகாரிகள் என்னை களுவாஞ்சிக்குடி ஏ.எஸ்.பி காரியாலயத்திற்கு கொண்டு சென்று ஏ.எஸ்.பி முன்னிலையில் 5000 ரூபா எங்களுக்கு வழங்கப்பட்டது. இதனை நாங்கள் எங்கள் அமைப்பின் தலைமை காரியாலயத்திற்கு அறிவித்தோம். எங்கள் வீட்டிலிருந்து வெளியேறி எங்கள் அமைப்பின் தலைமைக்காரியாலயத்திற்கு வந்து அங்கு தங்கியிருந்தோம். நாங்கள் கொஞ்சமும் இத்தேர்தலில் வேட்பாளராக முன்வர விருப்பப்படவில்லை. எங்கள் பெயரை பட்டியலில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்குமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

**இங்ஙனம்**
**நம்பிக்கைக்குரிய**
**தங்கமலர்**

---

# மணிவாசகம்

### கழுகு யானையுடன் சேர்ந்து வெல்லும்

''கழுகு, யானையுடன் ஒன்று சேர்ந்து இம் மாகாண சபையை வென்றெடுக்கும். நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க நாட்டின் பெரும்பகுதியினர் நம்பிக்கை வைத்திருக்கும் அரசியல் அமைப்பான ஐக்கிய தேசியக் கட்சியைப் பலவீனப் படுத்துவது தவறாகும். அதனைப் பாதுகாக்க வேண்டும். நாம் திரும்பவும் ஐ.தே.கட்சிக்கு போனது அதனால்தான்.''

**முன்னாள்ஜ.ஐ.தே.மு.யின்தலைவர்காமினீதிசாநாயக்க -லங்காதீபவில்-** 22.02.1994

### ரணிலின் கண்டுபிடிப்பு

''எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் அரசியல் பிரிவு தடை செய்யப்படவில்லை. அதனால் கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிட எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்துக்கு இடமிருந்தது. அவ்வாறு போட்டியிட்டு தமிழ் மக்கள் அதிகமாகவுள்ள பிரதேசங்களின் ஆதரவு அதிகம் கிடைப்பது யாருக்கு என நிரூபித்துக் காட்ட அவர்களுக்கு இடமிருந்தது. ஆனால் அவர்கள் தேர்தலுக்கு முன்வராதது மக்களின் ஆதரவு தமக்குக் கிடைக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்டதனால் தான் ஆகும்.''

**ஸ்ரீ லங்காப் பிரதம மந்திரி றணில் விக்றமசிங்ஹ -லங்காதீபவில்-** 22.02.94

### அநுரா சொல்கிறார்?

''ஜனநாயகத்தை மதிக்கும். ஜனநதயகத்தைப் பின்பற்றும் நபர்கள் இலங்கையில் உள்ளவரை படுகொலைகள் மூலம் அதிகாரத்துக்கு வர நான் எவருக்கும் இடம் கொடுக்க மாட்டேன்.''

**ஸ்ரீ லங்கா உயர் கல்வி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா -திவயினவில்** -22.02.1994

### 1978 அரசியலமைப்பே காரணம்

''இன்று இந்நாட்டில் நிலவும் சட்டத்துறை பற்றிய சகல சிக்கல்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவினால் 1978 ஆம் ஆண்டும் அதன் பின்பும் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் அடிப்படையானது எனக் கூற வேண்டும்.

**ல.ச.ச.கயின் தலைவர் பேனாட் சொய்சா -திவயினவில்** -22.02.1994

### மன்சூர் சொல்கிறார் இப்படி!

''ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் இனவாதத்தைத் தூண்டுவதற்குச் செயற்பட்டதில்லை. ஆனாலும் முஸ்லீம் கொங்கிரஸின் தலைவர் அஸ்ரப், இனவாதத்தைத் தூண்டுவதனூடாக அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறார். அவ் வேலை நெருப்புடன் விளையாடுவதற்கு'' ஒப்பாகும்.

**வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் ஏ.ஆர்.மன்சூர் -திவயினவில்** -23.02.1994

### தேவராஜ் முனகுகிறார்

''வடக்குப் பிரதேசத்தில் தற்போதுள்ள நிலைமையின்படி மேலும் அவசர காவச் சட்டத்தை நீடிக்க வேண்டியுள்ளது. மலை நாட்டுப் பகுதியிலிருந்து கொழும்புக்கு வரும் தமிழ் இளைஞர்களை கௌரவமில்லாத முறையில் கைது செய்வது சில காலத்திற்கு முன்பிருந்தே படைபெறுகிறது. வெறுமனே இளைஞர்களைக் கைது செய்து, தடுத்து வைப்பது தவறானது.''

**ஸ்ரீ லங்கா இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பீ.பீ. தேவராஜ் -லங்காதீபவில்** -24.02.1994

### திவ்வியமான அறிவு

''நானும் ஆறு மாதச் சிறைத் தண்டனை பெற்றுள்ளேன். பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டே நாம் போராட்டத்தை கைவிட்டுப் பாராளுமன்றத்திற்கு வந்தோம். ஆனால் இன்று நான் மனக் கவலையுடன் உள்ளேன். ஜனாதிபதி அண்மையில் வெளியிட்டுள்ளவற்றைப் பார்க்கும் போது கவலை ஏற்படுகிறது. நாம் நாட்டை ஆள வேண்டும் என நாம் கூறவில்லை. இந்நாட்டைப் பெரும்பான்மை இனம் ஆட்சி செய்வதை நாம் எதிர்க்கவில்லை. ஆனாலும் பெரும்பான்மை இனத்தை மரம் எனக்கூறி நாம் அதன் கொடிகள் எனக் கூறுவதை நாம் எதிர்க்கிறோம்.''

**திகாமடுல்லை மாவட்டத் த.வி.பா.உ ஜே.திவ்வியநாதன் -லங்காதீபவில்** -24.02.1994

### ஜனாதிபதியை ஏற்றுக் கொள்கிறோம்!

''வடக்கின் தமிழ்ப் பயங்கரவாதத்தை ஏற்றுக் கொள்ளாமல் மறுதலித்து, தெளிவான, சிக்கலற்ற நிலைப்பாட்டை ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க வெளியிடுவது தொடர்பாக நாம் மகிழ்ச்சியடைகிறோம்.''

**சுவர்ணசங்க நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் கால்லகே புண்ணியவர்தன -திவயினவில்** -24.02.1994

### ஒரு கோடி இராணுவத்தாலும் முடியாது

''ஒரு கோடி இராணுவத்தை யுத்த களத்துக்கு அனுப்பினாலும் பிரபாகரனைத் தோற்கடிக்க முடியாது. பிரபாகரனைத் தோற்கடிக்கக் கூடியவர்கள் தமிழ் மக்கள் மட்டுமேயாவர்.''

**நவ சம சமாஜக் கட்சியின் செயலாளர் கலாநிதி விக்ரம பாகு கருணாரட்ன -திவயினவில்** -24.02.1994

### ஆனையிறவு திறக்க தயார்

''யாழ்ப்பாண -ஆனையிறவு வழியால் பாதுகாப்புப் படைகள் யாழ்ப்பாணத்தினுள் பிரவேசிக்காது என அரசு சர்வதேசப் பிரகடனமொன்றைக் கொடுக்குமானால் மட்டும் அவ் வழியைத் திறக்க எமது இயக்கம் உடன்படும்.''

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் -லங்காதீபவில்** -25.02.1994



சரிநிகர்
4.ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380

பிரதம ஆசிரியர் சேரன்

# தேர்தலில்

# வெற்றி யாருக்கு?

உள்ளூராட்சித் தேர்தல்கள் எதிர்பார்த்தபடி நடந்து முடிந்துள்ளன.

எதிர்பார்த்தபடியே வாக்குச் சாவடிகளில் துப்பாக்கி ஏந்திய பொலிஸாரதும் இராணுவத்தினரதும் கண்காணிப்பின் கீழ் வாக்குப் பெட்டிகள் நிரப்பப்பட்டுள்ளன.

எதிர்பார்த்தபடியே வாக்களிக்கச் சென்ற மக்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்.

'அமோகப்படியான வாக்குகளால்' எதிர்பார்த்தபடியே யூ.என்.பி 'வெற்றி' பெற்றுள்ளது.

ஐ.தே.கட்சி மீதும், அதன் அரசாங்கத்தின் மீதும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தும் தேர்தலாக 'இது அமைந்துள்ளது என்றும்,

தேர்தலின் போது போட்டியிட்ட சுயேட்சைக் குழுக்கள் உட்பட அனைத்துக்கட்சிகளும் ஐ.தே.காவிற்கு எதிரானவை அல்ல என்பதால், இத்தேர்தல் அரசுக்கு ஒரு பெரிய வெற்றியே என்றும்,

தேர்தலில் வெற்றி பெறுவதை விடப் பெரிய வெற்றி தேர்தலை சிறப்பாக நடாத்தி முடித்ததிலேயே இருக்கிறது என்றும் ஐ.தே.க.வினர் எதிர்பார்த்தபடி கூறத் தொடங்கி விட்டார்கள்.

தேர்தலில் தமக்கு வாக்களிக்குமாறு கோரிய தமிழ், முஸ்லீம் கட்சிகளும், வாக்களிக்காது நிராகரிக்கும்படி கோரிய கட்சிகளும் கூடத் தம்பங்குக்கு இத்தேர்தலின் முடிவுகள் தத்தம் கொள்கைகட்கு சாதகமானவையே என்று அறிக்கைகள் விடுகின்றன.

அதுவும் கூட எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும தம விருப்பிற்கேற்ப வியாக்கியானம் செய்து கொள்ளக்கூடிய விதத்தில் இத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது.

தேர்தலில் தமக்கு வாக்களிக்கும் படி கோரியவர்களும், வாக்களிப்பில் கலந்து கொண்டு வாக்குச்சீட்டை அழித்துவிடும்படி கோரியவர்களும் இந்த தேர்தலை அங்கீகரித்தவர்களே.

தேர்தல் நடப்பதற்கான மிக அடிப்படையான ஜனநாயக சூழல் கூட இல்லாத நிலையில் தேர்தல் நடப்பதை அங்கீகரித்ததை விட வேறெந்தப் பெரிய உதவிகயையும் இவர்களால் இந்த அரசுக்கு செய்திருக்க முடியாது.

எந்த ஒரு அரசியற் கட்சியும் கூட, இந்தத் தேர்தலை ஒரு திட்டமிட்ட அரசியல் சதியாக வலியுறுத்தவோ அதைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று மக்களிடம் கோரவோ முனையவில்லை!

இப்போது கள்ள.வோட்டுகள், தில்லுமுல்லுகள் இராணுவம் மற்றும் பொலிஸாரின் அத்துமீறிய மிரட்டல்களை பட்டியல் போட்டுக் காட்டி தேர்தல் நடந்தமுறையை விமர்சிக்கின்றனர்.

இவர்களுக்கு, தாம் சொல்வதில் தமக்கே தெளிவு இருக்கிறதா என்பது தெரியவில்லை

ஒருபுறத்தில் தேர்தலில் மோசடி நடந்திருப்பதாக கூறிக்கொண்டே மறுபுறத்தில் அதே தேர்தல் முடிவுகளை வைத்துக் கொண்டு மக்கள் ஐ.தே.க வை நிராகரித்திருப்பதாகவும் சொல்கிறார்கள்!

அதுமட்டுமல்ல,தமிழ், முஸ்லீம் மக்கள் அரசினை நிராகரித்திருப்பதாக இத்தேர்தல் மூலம் இவர்கள் புதிதாக கண்டுபிடித்துவிட்டார்களாம்.

இதைக் கண்டுபிடிக்க தேர்தல் ஒன்று நடத்த வேண்டும் என்று நினைக்கும் இவர்கள் இன்னமும் தமிழ், முஸ்லீம் மக்களின் தலைவர்களாக பவனி வருவதுதான் எமது தேசத்தின் சாபக்கேடு.

இந்தத் தேர்தல் அல்ல, இன்னும் எத்தனை தேர்தல்கள் நடாத்தப்பட்டாலும் கூட இவர்களுக்கு இதே பதில்தான் கிடைக்கப் போகிறது.

தேர்தல்களை நடாத்துவதற்கு விரும்புவது அரசு; அதன்மூலம் அது சாதிக்க விரும்புவைகள் பல. உள்ளூராட்சிச் சபைகளில் ஒரு சிலரை உறுப்பினர்களாக்குவது போன்ற சில்லறை நோக்கமல்ல அரசிடம் இருப்பது.

அது தமிழ், முஸ்லீம் இனங்களின் என்றென்றைக்குமான அடிமைச் சாசனத்தை அரசியல் சட்டமாக்குவதே.

இதை நாம் அடிக்கடி இவ்விடத்தில் வலியுறுத்தி வந்துள்ளோம்.

யாருக்குப் புரிந்தாலும், இவையெல்லாம் இந்தக் கட்சிகளுக்கு ஒரு போதும் புரியப் போவதில்லை என்பதற்கு இந்தத் தேர்தல் இன்னொரு உதாரணம்.

போகட்டும்

மக்களுக்குமா அது புரியாமல் போய்விடும்?

## விநாயகர் மகாவித்தியாலய அகதிமுகாமிலிருந்து 44 பேர்

## கிண்ணியாத் துறையில் 8 பேர்

## கிளப்பன் போக் அகதிமுகாமிலிருந்து 30 பேர்

# காணாமல் போனவர்களின் கதி என்ன?



எருமைத் தயிரைப் பற்றிப் பேசினாலேயே நாவில் நீரூறும். இந்த எருமைத் தயிருக்கும் பேர் போன இடம் ஆலங்கேணி. ஆனால் இன்று ஆசைக்கு ஒரு எருமையோ, அல்லது மாடோ கூட இந்த மக்களிடம் இல்லை. விவசாயம் செய்ய ஒரு துண்டு காணி கூட இவர்களிடம் இல்லை. விவசாயக் காணிகள் உள்ள இடம் முழுவதும் தடை செய்யப்பட்ட பிரதேசமாகக் ஆக்கப்பட்டிருக்கிறது. இதனால் இந்த மக்களின் பிரதான தொழில்களான விவசாயமும், கால் நடை வளர்ப்பும் படுத்து விட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியாவில் பிரதேசச் செயலாளர் பிரிவில் அமைந்திருக்கும் சுமார் 650 குடும்பங்களைக் கொண்ட ஆலங்கேணியும் ஈச்சந்தீவும் இன்றைக்கு இப்படித்தான் இருக்கிறது.



90 ஜூனில் ஏற்பட்ட இரண்டாவது ஈழப்போரின் போது இம் மக்கள் இடம் பெயர்ந்து கண்டல் காடு எனும் இடத்தில் தங்கியிருந்தனர். ஆலங்கேணிப் பகுதியில் சண்டை ஓய்ந்த பின்னர் ஜூலை மாத நடுப்பகுதியில் இம்மக்கள் எல்லோரும் ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்தனர். அவ்வேளையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் சில நிவாரண உதவியை வழங்கின. இப்பிரதேசம் முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தது.

1990 ஓகஸ்ட் மாதம் 06ம் திகதி இவ்வகதி முகாமைச் சுற்றி வளைத்த இராணுவத்தினரும் முஸ்லீம் ஊர்காவல் படையினரும் 44 பேரைக் கைது செய்து விசாரணைக்காகக் கூட்டிச் சென்றனர். இந்த 44 பேரும் இதுவரை காணாமல் போனவர்களாகவே உள்ளனர். இவர்கள்பற்றி எந்த முடிவும் இல்லை. இவர்கள் அனைவரும் குடும்பஸ்தர்கள். 5-6 பிள்ளைகளைக் கொண்ட குடும்பத் தலைவர்கள். இவர்களில் ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், சாதாரண உத்தியோகத்தர்கள், விவசாயிகள், கூலி வேலைக்காரர்கள் எனப்பல வகையினர் அடங்குவர். இவர்களின் நிலையை அறிவதற்காக மனைவிமார்கள் பட்ட கஷ்டங்கள் சொல்ல முடியாதவை. மனித உரிமைப் பணியகங்களுக்கு அறிவித்துக் கூட ''தேடிப்பார்க்கிறோம்'' என்றே பதில் வந்துள்ளது.

கைதுகள், காணாமல் போனமை இவ்வாறு இருக்க இந்த மக்கள் சொந்த ஊர் அகதிமுகாம்களில் இருக்கும் போதே அவர்களது வீடுகள் யாவும் கண்முன்னாலேயே இராணுவத்தினர் தலைமையில் கிண்ணியாப் பகுதியைச் சேர்ந்த சில முஸ்லீம்களால் உடமைகள் சூறையாடப்பட்டு வீட்டுக்கதவுகள், யன்னல்கள், ஓடுகள், மரங்கள், கற்கள், என்று எல்லாமே மாட்டு வண்டில்களிலும் ரக்ரர்களிலும் ஏற்றிச் செல்லப்பட்டன. இறுதியில் மா,பலா, பனை, தென்னை போன்ற பச்சை மரங்கள் கூட விறகுக்காகத் தறித்து ஏற்றிச் செல்லப்பட்டன. இவ்வாறு நடந்து கொண்டிருந்த வேளை திடீரென முஸ்லீம் -தமிழ்ப் பிரச்சினை ஏற்பட்டது. ஆலங்கேணி அகதிகள் முகாமைத் தாக்குவதற்கு முஸ்லீம்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள் என்று தகவல் வந்தது.

எஞ்சியிருந்த மனித உயிர்களை மாத்திரம் காப்பாற்றுவதற்காக எடுத்த முயற்சியின் விளைவாக இராணுவத்தினரால் 1990 ஓகஸ்ட் மாதம் 09ம் திகதி - லொறிகளிலும் பஸ் வண்டிகளிலுமாக -கிளப்பன் பேர்க் அகதிகள் முகாமுக்கு இடம் மாற்றப்பட்டனர். வரும் போதே கிண்ணியாத் துறையில் வைத்து ஊர்காவல் படையினரால் இறக்கி அழைத்துச் செல்லப்பட்ட எட்டுப்பேர் இன்னுமில்லை. அவர்களும் காணாமல் போனவர்களே.

1990 ஓகஸ்ட் நடுப்பகுதியில் இருந்து சீனன்குடா விமானப்படைத் தளத்துக்குள் அமைந்துள்ள களஞ்சிய மண்டபங்களான கிளப்பன் பேர்க் அகதிகள் முகாமில் 1993 ஒக்ரோபர் மாதம் வரை தங்கியிருந்தனர். இந்த இடைப்பட்ட காலப்பகுதியில் 30 தடவைகளுக்கு மேல் சுற்றி வளைப்புகளும், இரவு நேரக்கடத்தல்களும், பெண்கள் மீதான பாலியல் பலாத்காரங்களும் நடைபெற்றன. கிளப்பன் பேர்க் அகதிகள் முகாம் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட 30 பேர் வரை இன்னும் திருகோணமலை, களுத்துறை ஆகிய சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இந்த தகரங்களாலான களஞ்சிய மண்டபங்களில் மக்கள் உலர் உணவு நிவாரணத்துடன் மட்டும் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை எண்ணிக் கூடப் பார்க்க முடியாதுள்ளது. அவ்வளவு கொடுமை. வெயில் கொடுமை, நீரில்லை, சனநெருக்கம். அதற்குள்ளும் இரவு நேரங்களில் புலி வேட்டை! என்ன செய்வது? யாரிடம் முறையிடுவது? எல்லாவற்றையும் இந்த மக்கள் தாங்கினார்கள்.

இவ்வாறு இருந்த வேளை 1993 செப்டம்பர் மாத நடுப்பகுதியில் சொந்த இடங்களில் மீளக் குடியமருமாறு இராணுவ அதிகாரிகளால் வற்புறுத்தப்பட்டனர். மிரட்டப்பட்டனர்! இறுதியில் சிறுவர் பராமரிப்பு நிதியத்தின் (S.C.F. U.K) உதவியுடன் ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் மீளக் குடியேற்றப்பட்டனர். ஓலைக் குடிசைகளில் நிச்சயமற்ற எதிர்காலத்துடன் இன்று வாழ்கிறார்கள். இவர்களில் 70 சதவீதமானவர்கள் விதவைகள். ஆண்களற்ற குடும்பங்களே அதிகம். ஒரு தலைமுறையினர் அப்படியே இங்கு இல்லை. அவர்களில் ஒரு பகுதியினர் கைது செய்யப்பட்டுக் காணாமல் போய்விட்டனர். ஒரு பகுதியினர் சிறையில் உள்ளனர். மற்றொரு தொகுதியினர் போராட்டத்தில் இணைந்து இறந்தும் விட்டனர். பொதுவாக இன்று நோக்கின் ஆசைக்கு ஒரு வீடற்ற கிராமமாகவும், விதவைகள் நிறைந்த கிராமமாகவும், அநாதைகள் அதிகரித்த கிராமமாகவும் திருகோண்மலை மாவட்டத்திலேயே வன்செயல் பாதிப்பில் முன்னணியில் நிற்கிறது ஆலங்கேணி.

இன்று இந்த மக்களுக்குத் தொழில் இல்லை. தொழில் செய்ய ஆண்களும் இல்லை. தற்காலிக குடிசை அமைப்பதற்கு சிறுவர் பராமரிப்பு நிதியம் (S.C.F)செய்த உதவியைத் தவிர அரசு எந்த உதவியையும் வழங்கவில்லை. காணாமல் போனவர்களைக் கொண்ட 60க்கும் மேற்பட்ட குடும்பங்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது. இக் குடும்பங்களில் மனநோய் இறப்பும், தற்கொலை இறப்பும் அதிகரித்து வருகிறது. கடந்த பெப், முதலாம் திகதி அன்று கூட 11 ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவி செல்வி.தங்கராசா நந்தினி (16 வயது) என்பவர் பாடசாலை விட்டு வீட்டுக்குச் சென்றதும் பின்னேர நித்திரை கொண்டவர். எழும்பவே இல்லை. இறந்துவிட்டாள். இவளது குடும்பத்தில் 06 பிள்ளைகள். இவள் தான் மூத்தவள். தந்தை கடந்த 90 ஓகஸ்ட் 06 இல் ஆலங்கேணி வி,ம.வி. அகதிகள் முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்டுக் காணாமல் போய்விட்டார். அம்மாவின் தம்பியான இவளது மாமாவும் கைது செய்யப்பட்டுக் காணாமல் போய்விட்டார். இதனால் ஏற்பட்ட உளப்பாதிப்பு வறுமை, பட்டினி, மனக்கவலை வாழ்வை மாய்த்து விடுகின்றது. சிலர் விரக்தி கொண்டு நஞ்சருந்தி மரணமடைகின்றனர். இறுதியில் இந்த மக்கள் இனிமேல் இந்த மண்ணை விட்டுப் போவதில்லை. செத்தாலும் சொந்த மண்ணில் சாவது மேலானது என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இந்த மக்களிடம் இன்று எதுவுமில்லை ஆகவே யாருக்கும் அஞ்சப் போவதுமில்லை.

## எங்கிருந்து தொடங்குவது?

# காற்றிலும் வலியன் நீ!



### அ.டேவிட் நந்தகுமார்

அன்று வீடு திரும்பினோம். மனதில் உறுத்தலுடன் கூடிய குதூகலம் இருந்தது. நித்திரை கொள்ளலாம்.

சோளகம் பெயரத் தொடங்கிய காலம். புழுதியை அள்ளி வீசவில்லை. இளந் தென்றலாக வீசியது. பனைகளில் நுங்குகள் குலை குலையாகப் பிடித்திருந்தன. இளநுங்கு -அருமையான பதம். பனங்காணிகளில் விடிகிற பொழுதுகளில் போனால் நுங்குகள் பொறுக்கலாம். ஒரு கண் ஈய்க்கப்பட்டிருக்கிற நுங்குகள்.

ஆட்டுக்குச் சாப்பாட்டுப் பிரச்சினை கொஞ்சம் குறையும். மாலைகளில் அம்மா குந்திப் பிடித்தார் என்றால் பத்து நுங்குகளை ஒரே சீவலில் சீவித் தள்ளுவார். ஆடுகள் நுங்குகளை விரும்பிச் சாப்பிடும். வயிறு புடைத்து நின்றன ஆடுகள்.

சிவகுமாரனின் படங்கள் பத்திரிகைகளில் வந்தன. மீசை அரும்பாத இளமுகம். பதமான இளம் நுங்கு போலிருந்தது அவன் முகம். தென்றல் வீசியது போலிருந்தது அவன் புன்னகை.

அவன் முகத்திலிருந்து, அவன் புன்னகையிலிருந்து இன்னொன்றையும் கவனித்தோம்.

எங்களுடன் கிரிக்கட் விளையாடிய சுரேஷ் அண்ணா. ஒரு பந்து வீச்சில் 'கிளீன் போல்ட்' ஆக்கிய சுரேஷ் அண்ணா.

வாய் தவித்தது. நெருங்கியவர். மைதானத்தில் ஒரே பந்தை இருவர் கைகளும் அணைத்திருக்கின்றன. ஒரே மண்ணை இருவர் கால்களும் மிதித்திருக்கின்றன.

வாய் தவித்தது. யாரிடமாவது சொல்ல வேண்டுமென்று வாய் உன்னியது.

''அட நம்ம சுரேஷண்ணாவா? கவலை சூழ்ந்தது. இவருக்கா இந்தக் கதி? இவர்தான் சிவகுமாரன் என்பது ஏன் முன்னரே தெரியாமல் போனது?

அம்மாவிடம் சொன்னேன். ஐயாவிடம் சொன்னேன். ''சிவகுமாரனை எனக்குத் தெரியும்.'' ''பேசாமல் இரு...''

நம்ம ஊரிலும் 'பந்தங்கள்' இருக்கிறார்கள். நம் இளைஞர் சிலருக்கு அரசாங்க ஆதரவு அப்போது தேவைப்பட்டது. வேலையில்லாது வாசிகசாலையில் குடியிருந்தவர்கள் அவர்கள். காலையில் போனால் ஊர்ப்புதினங்கள், அரசியல், புதினங்கள் வாசிகசாலையில் இருந்து சப்பப்படும். பின்னேரம் சுடலை மைதானத்தில் பந்தடி, 'தொப்பு தொப்பு' என்று சத்தம் கேட்கும். பொன்னிப்புலம் அல்லது உயனை ஆகியன பனையால் சூழல் பட்ட மைதானங்கள்.

பொழுதுபட வந்து விடுவார்கள்.

வெள்ளிக்கிழமைகளில் 'வெள்ளன வோட' விளையாட்டை நிறுத்தி விட்டு, வந்து 'மேல் கழுவி' வேட்டி கட்டி அம்மன் கோயிலுக்கு வந்தால், பூசை முடிந்த பிறகும் பத்துமணி வரை கதைக்கலாம்.

அரசியல் சுவாரஸ்யமானது.

வாசிகசாலையில் ஒரு அட்டை தொங்க விடப்பட்டிருக்கும். **இவ்விடம் அரசியல் பேச வேண்டாம்''**

வேறு எங்குதான் பேசுவது? தாய் தந்தையருடனா பேச முடியும்?

வாசிகசாலையில் இன்னொரு அட்டையில் எழுதியபடி இருக்கும் **''தயவு செய்து குந்துகளில் இருக்க வேண்டாம்.''**

ஆனால் அரசியல் பேசுவதையும் குந்துகளில் இருப்பதனையும் யாரால்தான் தடுத்து நிறுத்த முடிந்தது?

அவர்களின் வாய்களில் சுரேஷ் அண்ணாவின் பெயர் அடிபடுவதற்கு அதிக நாட்கள் எடுக்கவில்லை. இவர்களில் வேலை தேடியவர்கள் அதிகம் இருந்தபடியால், அரசாங்க சார்பானவர்களாக இருந்தார்கள்.

இரண்டு மூன்று நாட்களில் பொலிஸ் வந்தது.

பொலிஸ் வருகிற போது நாங்கள் மைதானத்தில் கிளித்தட்டு விளையாடிக் கொண்டிருந்தோம். எப்படி ஓடினோம் என்பது இன்னமும் தான் நினைவில்லை. சறுக்காமல், சரியாமல் வளைவுகளையும், முடக்குகளையும் எப்படிக் கடந்தோம் என்பதும் ஞாபகமில்லை. எப்படியோ நான் வீடு வந்து சேர்ந்து விட்டேன்.

மூச்சிரைக்க நான் அம்மாவிடம் சொன்னேன்! ''ஆனந்தண்ணை வீட்டிலை பொலிஸ்.''

ஆனால் அடுத்த நாள் தெரிந்தது. ஆனந்தண்ணை வீட்டிலை இல்லை. வெகுநாளாக ஊரிலும் இல்லை.

அடிக்கடி பொலிஸ் வந்தது. அந்தச் சின்ன மைதானம் சுடலை போல இருந்தது. சுடலைக்குப் போவது போல பயம். கனவில் பேய் வருகிறது போல திகில்.

அந்தத் தவணை விளையாட்டுக்கு முற்றுப் புள்ளி வைத்தோம்.

சிவகுமாரன் பற்றிய செய்திகள் இந்த நேரத்தில் காற்று வாக்கில் படத் தொடங்கின.

பொலிஸ் தேடியது. ஒளித்துத் திரிந்தது. தோட்டங்களில் ஒளித்தது. ஊர் ஊராக ஒளித்தது. தோட்டங்களுக்கிடையில் பொலிஸ் துரத்திய போது நஞ்சைக் குடித்தது. ஆஸ்பத்திரியில் இறந்து போனது.

சிவகுமாரனின் செத்த வீட்டிற்கு உரும் பிராயில் நிறைகொள்ளச் சனம் என்று ஊரில் பேசிக் கொண்டார்கள்.

''அன்புத் தம்பி சிவகுமாரா'' என்று கோவை மகேசன் சுதந்திரனில் எழுதினார். ''அலைகடலென'த் திரண்ட கூட்டத்தின் புகைப்படத்தை ஈழநாடு பிரசுரித்தது. கண்ணீர் அஞ்சலிகளை சனசமூக நிலையங்கள் வெளியிட்டன. தளபதி அமிர்தலிங்கம் இரங்கல் உரை நிகழ்த்தினார். ''தம்பி சிவகுமாரன் ஏன் இறந்தான்? என்று கேட்டு மங்கையகரசி அமிர்தலிங்கம் முந்தானைத் தலைப்பால் வாய் பொத்தி அழுதார்.

எங்கள் கவலை உச்சங்களைத் தொட்டன. **''காற்றிலும் வலியன் நீ....''** என்று கவிதை பிறந்து.

இதுதான் அதற்குரிய காலம். தமிழர் கூட்டணி வீறுடன் எழுந்தது. தமிழிளைஞர் பேரவை உருவாகியது. தமிழ் மகளிர் பேரவை இயங்கியது.

ஊர் தோறும், அதன் வீதி தோறும், கோயில் தோறும், அதன் மண்டபங்கள் தோறும் உண்ணாவிரதப் போராட்டத்தை மகளிர் பேரவை நடத்தியது. இளைஞர் பேரவை அதற்குத் துணை போனது. காலையில் இருந்து மாலை வரை சத்தியாக்கிரகம். உண்ணாவிரதம். மங்கையகரசி அவர்கள் உண்ணாவிரதத்தைத் தொடங்கி வைப்பார். அவரும் அங்குள்ள பெண்களுடன் உண்ணாவிரதம் இருப்பார். மாலையில் அமிர்தலிங்கம் அதனை முடித்து வைப்பார். உணர்ச்சி வசப்படாமல் அமைதியாக, ஆழமாக, தர்க்க நியாயங்களுடன், எல்லோர்க்கும் கேட்கக் கூடிய அழகு தமிழிலும் உரை நிகழ்த்துவார். வேட்டி, வெள்ளை சேட், 'வெள் மண்டை' அமிர்தலிங்கத்தின் அழகான உருவம். ''பேஜோகா 304' காரில் வருவார். உதய' சூரியன் கொடி பறக்கும்.

அமிர்தலிங்கம் நமது தளபதி. அமிர்தலிங்கம் நமது தலைவர்.

ஜீ.ஜீ பொன்னம்பலம் நாட்டில் இல்லை. செல்வநாயகத்திற்கு வயது போய்விட்டது. மற்றும் அவர் பாராளுமன்றத்தில் பேசத்தான் லாயக்கு. நம்முடன்நிற்பவர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், தர்மலிங்கம்.

இவர்களே நமக்கானவர்கள். இவர்கள் நம் தலைவர்கள். இவர்களை நம்பி நம் அரசியல் விரிந்தது.

அரசு தன் கரங்களை எட்டுத் திசைகளிலும் பதித்தது.

இளைஞர் பேரவையைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டனர். நமக்குத் தெரிந்தவர்கள் காசிஆனந்தன், வண்ணை ஆனந்தன், மாவை சேனாதி ராஜா, இப்படியாக.

காசி ஆனந்தன் , சிறையில் தனக்கு நேர்ந்த கொடுமை பற்றி சுதந்திரத்தின் வெளியீடான 'சுடர்' சஞ்சிகையில் எழுதினார். வாசித்தோம். இரத்தம் கொதித்தது.

இவர்கள் நமக்குத் தியாகிகள். அவர்கள் தியாக வாழ்வை மேற்கொண்டவர்கள். எப்பேர்ப்பட்ட தியாகம் அது.

அவர்கள் விடுதலையாகி வருகிற போது, யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் மக்களும், எம் தலைவர்களும் அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றார்கள்.

ஊரெல்லாம் இவர்கள் பற்றியே பேச்சு. ஊர் ஊராக இவர்களுக்கு வரவேற்புக் கூட்டம்.

காசி ஆனந்தன் வந்த போது இரண்டாவது கூட்டம் எங்களூரில். அம்மன் கோயில் தெற்கு வீதியில் மேடை கட்டப்பட்டது.

யார் நினைத்தார்கள் இவ்வளவு சனம் வருமென்று?

# நாலு வார்த்தை எழுத விடு

### சூர்யா

## 'அவ்வப்போது பறித்த அக்கரைப் பூக்கள்'

மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுப்பில் இன்னொரு தொகுப்பு **அவ்வப்போது பறித்த அக்கறைப் பூக்கள்**. பல நாடுகளின், பல மொழிகளின் கவிஞர்களது சில கவிதைகள் இத் தொகுப்பில் தமிழாக்கப்பட்டுள்ளன. **வ.கீதா, எஸ்.வி.ராஜதுரை** இவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட கவிதைத் தொகுப்பு இது.

ஏலவே தமிழாக்கம் செய்யப்பட்ட பல கவிதைத் தொகுப்புகள் வெளியாகியுள்ளன. **மாசேதுங் கவிதைகள்** (கே.கணேஸ்) **பாலஸ்தீனக் கவிதைகள்** (எம்.ஏ.நுஃமான், இ.முருகையன்), **அறைக்குள் வந்த ஆபிரிக்க வானம்** (இந்திரன்) **சோஷலிசக் கவிதைகள்** (பலர்) முதலானவை குறிப்பிட வேண்டியன. யாவும் அரசியலைப் பாடுபொருளாகக் கொண்டன. உலகப்பரப்பின் ஒவ்வொரு அரசியல் கணங்களையும் இத் தொகுப்பில் கவிதையாகத் தரிசிக்க முடிந்தது.

தோழர் மாசேதுங்கின் அரசியல் அனுபவங்களையும் சீனாவின் அரசியல் நிகழ்ச்சிகளையும், **மாசேதுங் கவிதைகள்** எடுப்புடன் வெளியிட்டன. தனிமனித அனுபவம் சமூக அனுபவமாக விரிந்திருப்பதனை இக்கவிதைகள் கோடிட்டன. தன் துன்பம், விரக்தி, நம்பிக்கையீனம் இக்கவிதைகளில் வெளியிடப்படவில்லை. எத்தகைய அனுபவங்களூடாகவும் அழகு, சமூகமாற்றம், புரட்சியை நோக்கிய பயணம் என்பனவே மாசேதுங்கின் கவிதைகளின் பிரதான பண்பு.

**அறைக்குள் வந்த ஆபிரிக்க வானம்** தொகுப்பு, பிரதானமாகக் கவிதைகளையும், சில சிறுகதைகள், நாடகம், கட்டுரை ஆகியவற்றையும் தமிழாக்கம் செய்திருந்தது. ஆபிரிக்க மக்களின் இன்னல்களை இவை எடுத்தியம்பின. நல்ல தொகுப்புகளில் ஒன்று.

உலக நாடுகளின் சமூக மாற்றத்தை அவாவுகிற, சோஷலிசப் போராட்டத்தை நம்புகிற கவிதைகள் **சோஷலிசக் கவிதைகள்** இல் காணப்பட்டன. விதந்து குறிப்பிட வேண்டியவை இக்கவிதைகள் . செய்தியைத் தெரிவிப்பனவாக இருந்தவை இவை. கோஷமிட அவை முயலவில்லை.

தமிழின் குறிப்பிடத்தக்க கவிஞர்களான எம்.ஏ.நுஃமான், இ.முருகையன் இவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட 'பாலஸ்தீனக் கவிதைகள்' ஈழத்துக் கவிதைப் போக்கிலும், சற்று மாற்றத்தையும் உண்டு பண்ணியது. தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிணமித்த 1982 காலப்புகுதயில் **'பாலஸ்தீனக் கவிதைகள்'** வெளியாகியது. போராட்டத்தில் அக்கறை கொண்ட பல கவிஞர்களை இத்தொகுப்பு பாதித்தது. பலரது கவிதை வடிவங்கள் பாலஸ்தீனக் கவிதைகளின் வடிவத்தை ஒத்திருந்தது

**''துப்பாக்கி வேட்டுக்கள்**
**அவன் மார்பையும் முகத்தையும் நொறுக்கின.**
**தயவு செய்து மேலும் விவரணம் வேண்டாம்.**
**நான் அவன் காயங்களைப் பார்த்தேன்.**
**அதன் பரிமாணத்தைப் பார்த்தேன்**
**நான் நமது**
**ஏனைய குழந்தைகள் பற்றி எண்ணுகிறேன்.**
**குழந்தையை இடுப்பில் ஏந்திய**
**ஒவ்வொரு தாயையும் பற்றி எண்ணுகிறேன்**
**அன்புள்ள நண்பனே**
**அவன் எப்போது திரும்பி வருவான்**
**என்று கேட்காதே**
**மக்கள் எப்போது கிளர்ந்தெழுவார்கள்**
**என்று மட்டும் கேள்.''**

இவை ஞாபகத்திலிருந்த சில வரிகள்.
1982 இன் பின் தமிழ் மக்களுக்குக் கிடைத்த அனுபவங்கள் பாலஸ்தீனத்தை ஒத்ததாக இருந்தது. 'இரத்தமும். சதையும், நிணமும்....' எனக் கொடூரமான அனுபவங்கள். அவ்வனுபவங்களிலிருந்து எமது கவிதையும் பாலஸ்தீனக் கவிதை போல எழுந்தன. அதன் வீச்சைப் பெற்றன.

மேற்கூறிய ஆவேசம் பெற்றெழுந்த 'தமிழாக்கம் செய்யப்பட்ட கவிதையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட வடிவத்தைக் கொண்டது. **அவ்வப்போது பறித்த அக்கரைப் பூக்கள்.**

இவர்கள் (வ.கீதா, எஸ்.வி.ராஜதுரை ) ஏலவே **அன்னா அக்மதோவா கவிதைகள், மண்ணும் சொல்லும்; மூன்றாம் உலகக்கவிதைகள்** முதலான தமிழாக்கம் செய்யப்பட்ட கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளனர்.

இத்தொகுப்பு அரசியலை மட்டும் பாடு பொருளாகக் கொண்டவை அல்ல. பல்வேறு அனுபவங்களாக விரிந்தவை இக்கவிதைகள். இவை குறிப்பிட்ட காரணம் பற்றித் தெரிவு செய்யப்பட்டவை அல்ல.

இல்லை, குறிப்பிட்ட காரணம் இருக்கிறது. '' **சில கவிதைகளைப் படித்தவுடன் அவற்றைத் தமிழாக்கம் செய்யக் கைகள் பரபரக்கும்''** என்கிறார்கள். அது ஒன்றுதான் காரணம்.
ஆதலினால், கவிதையின் பல்வேறு பொருள்களை இத்தொகுப்பில் பார்வையிட முடிகிறது.

இவர்கள் கூறுகிறார்கள்; **எந்தவொரு மிகச் சிறந்த மொழியாக்கத்திலும் கூட மூலப் படைப்பின் 'ஆன்மா' அப்படியே தக்கவைத்துக் கொள்ளப்படுவதில்லை, தக்க வைத்துக்கொள்ளவும் முடியாது. மொழியாக்கத்தின் போது மூலப் படைப்பிற்கு 'சேதாரங்கள்' ஏற்பட்டு விடுகின்றன. சில விஷயங்கள் இழக்கப்பட்டு விடுகின்றன.''**

இவர்கள் சொல்வதில் உண்மை இருக்கிறது. இதனால் முழுமையைத் தரிசிக்க முடிவதில்லை என இவர்கள் சொன்னால் சரி.

ஆனால், ஒரே கவிதையை இருவர் மொழிமாற்றம் செய்யும் போது அவரவர் ஆளுமைக்கேற்ப கவிதையின் வடிவம் மாறுபடுவதனையும் காணமுடிகிறது.

→ 15



# இ.தொ.கா.வின் எதிர்காலம்?

ஜனவரி 14-27ம் திகதிய சரிநிகர் பத்திரிகையில் வெளிவந்த ''தொண்டமான் -ஐ.தே.கட்சி; உறவும், பிரிவும்?'' எனும் தலைப்பிலான கட்டுரை தொடர்பாக பல விதமான அபிப்பிராயங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சாதகமானதும் பாதகமானதுமான அவ்வபிப்பிராயங்கள் தொடர்பான பல விடயங்களை தெளிவுபடுத்துவதன் மூலம் இதனை மேலும் முன்னெடுத்துச் செல்லலாம் என நம்புகிறேன்.

என்னைப் பொறுத்தளவில் இ.தொ.கா. என்பது தொண்டமானின் தனிச் சொத்து அல்ல. அது மலையக மக்களுக்கு உரிமையான அமைப்பாகும். எனவே இந்த அமைப்பானது மலையக சமூகத்தின் சமூக நலன்களையும், அச்சமூகத்தின் பெரும்பான்மையினரான தோட்டத் தொழிலாளர்களின் வர்க்க நலன்களையும் பாதுகாப்பதோடு மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய வழிவகைகளில் செயற்படல் வேண்டும் என்பதுதான் எனது எதிர்பார்ப்பு. எனவே தனிமனிதத் தலைமைத்துவத்திற்கும், தனிமனித அபிலாஷைகளுக்கும் அடிமைப்பட்டு மேலே குறிப்பிட்ட கட்டுரையில் நான் கூறியுள்ளதைப் போல -இ.தொ.கா.பாழாகுவதிலிருந்து பாதுகாப்பது மலையக மக்களின் ஜனநாயக உரிமைகளை விரும்புகின்ற எல்லோரினதும் கடமையாகும்.

## தொண்டமான் ஐ.தே.க. உறவு

தொண்டமான் ஐ.தே.கட்சி உறவின் தன்மை பற்றி நான் பல சந்தர்ப்பங்களில் எழுதி வந்துள்ளேன். இவையாவும் இனவாத எதிர்ப்பாளன் என்ற அடிப்படையில் ஜனநாயக நிலைப்பாடுகளில் இருந்து மேற்கொள்ளப்பட்ட விமர்சனங்களாகும்.

தொண்டமான் -ஐ.தே.க உறவானது ஐ.தே.கட்சியைப் பலப்படுத்த உதவியதன் மூலம் ஐ.தே.கட்சியின் பேரினவாத மேலாதிக்க நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்தவும், சிறுபான்மையினருக்கு எதிரான படுகொலை யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கும், இரு புறங்களிலுமுள்ள தீவிரவாத சக்திகளைப் பலப்படுத்தவும், சிறுபான்மையினரின் நியாயபூர்வமான உரிமைகளைப் பெரும்பான்மையினர் ஏற்றுக் கொள்ள வைப்பதற்குத் தேவையான அரசியல், கருத்தியல் சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கு தடையாகவும் அமைந்துள்ளது என்பதை நான் பல முறை சுட்டிக்காட்டியுள்ளேன்.

இ.தொ.கா - ஐ.தே.க. உறவானது இரு கட்சிகளினதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை ஒருமைப்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஒன்றல்ல. தொண்டமானினதும் ஐ.தே.கட்சியின் அவ்வப்போதைய தலைமைகளினதும் தனிப்பட்ட உறவாகவே இது இருந்து வந்துள்ளது. டட்லி சேனநாயக்கா முதல் டி.பி. விஜயதுங்க வரையிலான ஐ.தே. கட்சியின் அவ்வப்போதைய தலைவர்களைப் புகழ் பாடுவதன் மூலம் தனது உறவைப் பலப்படுத்திக் கொண்ட தொண்டமான், டி.பி.விஜயதுங்க ஜனாதிபதியானவுடன் ''ஜனாதிபதி மிகவும் நல்லவர். அவர் எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகின்றார். ஆனால் மற்றவர்கள் ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் இல்லை'' என தனது நிலைப்பாட்டை வெறும் வார்த்தைகளின் மூலம் நியாயப்படுத்த முயற்சித்தார். ஆனால் தொண்டமானின் முகமூடியைக் கிழித்தெறியும் விதமாக அமைந்துவிட்டது ஜனாதிபதி விஜேதுங்கவின் சமீபகால நடவடிக்கைகள்.

ஐ.தே.கட்சியின் முன்னைய தலைவர்களைப் போல சொல்லென்றும், செயலொன்றும் என இல்லாமல் ஐ.தே.கட்சியின் எதிர்பார்ப்பான பேரினவாத மேலாதிக்க ஆட்சியை நிலைநாட்டுவதையும், (சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்குவதற்கு பெரும்பான்மையினர் அனுபவிக்கும் சலுகைகளை விட்டுக் கொடுக்க இயலாது என ஜனாதிபதி கூறுவதைப் போல ) அதற்கெதிராக எழுந்துள்ள சிறுபான்மையினரின் உரிமைப் போராட்டங்களை இராணுவரீதியில் முறியடிப்பதையும், (இந்நாட்டில் இனப் பிரச்சினை அல்ல இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே என்று கூறுவதைப் போல) மிகத் தெளிவாக வெளியிட்டு பிரச்சாரம் செய்து வருவதன் மூலம் ஐ.தே.கட்சியின் சுய ரூபத்தை வெளிக்காட்டி வருகின்றார் ஜனாதிபதி விஜேதுங்க. அதுமட்டுமல்ல,முழு இலங்கையையும் ஒரேதேர்தல் தொகுதியாகக் கொண்டு ஜனாதிபதி அபேட்சகர் போட்டியிடும் போது, சிறுபான்மையினரின் ஆதரவையும் திரட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டு, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர், சிறுபான்மையினரின் எதிர்பார்புகள் தொடர்பாக கரிசனையுடன் செயற்பட வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதால் ஜனாதிபதித் தேர்தல் முறையை மாற்றியமைத்து அடுத்த ஜனாதிபதியை பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யக்கூடிய நிலைமையை உருவாக்க முயற்சி செய்து வருகின்றார்.

இந்தளவுக்கு சிங்கள பௌத்த பேரினவாதத்தை அரசியலில் நிறுவனப்படுத்தும்(Institutionalizing) அளவுக்கு பகிரங்கமாக செயற்படக்கூடிய ஒரு அதிகாரவாதத் தலைமையை பாதுகாத்துக் கொடுப்பதில் இ.தொ.கா.என்ற ஒரு சிறுபான்மையினரின் அமைப்பும் உதவியிருக்கிறது என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

தொண்டமானின் தலைமைத்துவத்தையும் அவரின் ஐ.தே.க. உறவின் நடைமுறையையும் இந்தப் பின்னணியுடன் நோக்கும் போது இலங்கையில் வாழும் மலையகத் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுத்து அவர்களின் தனித்துவங்களை பாதுகாக்கும் ஒரு அமைப்பாக இ.தொ.கா. உருவாக வேண்டுமாயின் இந்த அமைப்பின் நிர்வாக நடைமுறையில் பாரிய மாற்றங்களை மேற்கொள்வது தவிர்க்க முடியாததாகும்.

இ.தொ.கா.வினர் மத்தியில் இன்று நிலவும் பிரச்சினைகளான தொண்டமானின தலைமையை ஆதரிப்பதா, செல்லச்சாமியை ஆதரிப்பதா, தெண்டமானையும்- செல்லச்சாமியையும் ஒன்று சேர்ப்பதா, பிரித்துவைப்பதா, தொண்டமானின் கட்டளையை ஏற்க மறுத்த மத்திய மாகாண சபையின் இ.தொ.கா. உறுப்பினர்கள் எல்லோரையும் இ.தொ.கா.விலிருந்து விலக்கி வைப்பதா அல்லது மீண்டும் சேர சந்தர்ப்பம் அளிப்பதா என்கிற விடயங்களுகு இ.தொ.கா.வின் தற்போதைய நிலைமையிலிருந்து விடைகாணுவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியானது மலையக மக்களின் பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையவோ அல்லது மேற்கூறிய மாற்றங்களை உறுதி செய்யவோ போவதில்லை.

எனவே இன்றுள்ள முக்கிய கடமையானது இ.தொ.காவை ஜனநாயக மயப்படுத்துவதும் அதன் தலைமை ஜனநாயக சம்பிராதாயங்களை மதித்து நடப்பதை உறுதிசெய்வதுமேயாகும். இ.தொ.கா. என்பது ஒரு மலையக மக்களின் அமைப்பு என்பதை ஏற்றுக் கொண்டு, இலங்கையின் சமகால அரசியலின் தன்மைகளை யதார்த்தரீதியாகப் புரிந்து கொண்டு, அதனடிப்படையில் இந்நாட்டின் மலையக மக்கள் ஒரு தனித்துவமான இனம் என்பதையும், மலையக மக்களினதும், ஏனைய சிறுபான்மை இனங்களினதும் சுதந்திரத்தையும் தனித்துவங்களையும் சமூகப், பொருளாதார சமத்துவங்களையும் நிலைநாட்டக் கூடிய வகையில் இந்த நாட்டின் பல்லினப்பாங்கை உறுதி செய்யக்கூடியதாக அரசியல் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளையும், அக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட செயற்திட்டங்களையும் ஏற்படுத்துதல் வேண்டும். இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கொள்கைகளும், செயற்திட்டங்களும் மலையக மக்கள் முன் சுதந்திரமான விமர்சனங்களுக்கும், கலந்துரையாடல்களுக்கும் உட்படுத்தப்பட்டு சமூகத்தின் பலதரப்பட்டவர்களினதும் பங்குபற்றுதலுக்கும் இடமளிக்கப்படல் வேண்டும். ஏனைய சமூகங்களைப் போன்று அரசியல் அபிப்பிராயங்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்ற கல்வியறிவுடைய அரசியல் சிந்தனைத் திறனுடைய பலமான மத்தியதர வர்க்கத்தைக் கொண்ட ஒரு சமூகமல்ல, மலையக சமூகம் என்பதைக் கவனத்தில் கொண்டு அரசியல் ரீதியாக சிந்திக்கக் கூடியவர்களினதும், அறிவியல் வளமுடையவர்களினதும் பங்களிப்பை சமூக முன்னேற்றத்திற்குப் பெற்றுக்கொள்ள வழிவகைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.


இப்படியாகச் செயற்படும் பொழுது சமூகத்தின் பலதரப்பட்டவர்களின் பங்குபற்றுதலுடன் கூடிய ஒரு அமைப்பைக் கட்டியெழுப்புவதற்கும், அது கருத்தொற்றுமையின் மூலம் முடிவு செய்யப்பட்ட செயற்திட்ட வரையறைகளின் கீழ் இயங்கும் போது நடைமுறை ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கும் ஏதுவாக அமையும். இப்படியாக ஜனநாயக மயப்படுத்தலின் பின் இந்த அடிப்படை ஜனநாயக அமைப்பினைப் பாதுகாப்பதற்கு தகுதியானவர்கள் யார் என்பதை மக்கள் (அதன் அங்கத்தவர்கள்) தெரிவு செய்வதற்கும், பிரிந்து சென்றவர்களும், பிளவுபட்டு நிற்பவர்களும் மீண்டும் சேர்ந்து கொள்ள வேண்டுமானால் இந்த புதிய நடைமுறையை ஏற்றுக்கொள்வதன் அடிப்படையில் சேர்ந்து கொள்வதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படலாம்.

ஆனால் இப்படியாக இ.தொ.கா.வை ஒரு உண்மையான மக்கள் அமைப்பாக ஜனநாயக மயப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு இன்று இரண்டு பெரும் தடைகள் இருக்கின்றன. முதலாவது, இ.தொ.கா.வை தனது சொந்த சொத்தாகப் பாவித்துக்கொண்டிருக்கும் அதன் தலைவர் தொண்டமானின் நடைமுறையும், ஏனைய அங்கத்தவர்களுடன் சமமான அந்தஸ்துடன் நடந்து கொள்வதில் அவருக்கிருக்கின்ற விருப்பின்மையும், பொதுவான பிரச்சினையில் சுதந்திரமான கலந்துரையாடல்களில் பங்குபற்றுவது, நியாயமான விமர்சனங்களை சகித்துக் கொள்வது அல்லது அவற்றில் பங்குபற்றுவது போன்ற ஜனநாயக நடைமுறையைப் பின்பற்றி நடப்பதில் அவருக்கிருக்கின்ற எதிர்ப்பு நிலையுமாகும்.

இரண்டாவதாக, இ.தொ.கா.வில் பல தசாப்தங்களாக பதவிகளை அபகரித்துக் கொண்டு, அதன் மூலம் கிடைக்கின்ற சலுகைகளுக்கு அடிபணிந்து ஜனநாயக நடைமுறைக்கு எதிராக செயற்படும் இரண்டாம் மட்டத் தலைமைகள்.

எனவே, இவர்களை ஜனநாயக வழிமுறைக்கு சம்மதிக்க வைப்பது அல்லது அவர்கள் இந்நடைமுறைக்குத் தடையாக செயற்பட்டால் அவர்களை நிராகரித்து விட்டு இ.தொ.கா வை ஜனநாயக மயப்படுத்திப் பாதுகாத்துக் கொள்வதென்பது மலையக ஜனநாயக சக்திகளின் தவிர்க்க முடியாத கடமையேயாகும்.

இத்தகைய செயற்திட்டமானது இ.தொ.கா.விடம் ஒன்று சேர்ந்துள்ள மக்கள் பலத்தின் ஆதரவுடன் இலங்கையில் நிலைநாட்டப்பட்டுள்ள பேரினவாத ஆதிக்கத்தைத் தோற்கடிப்பதற்கும், எல்லா இனங்களினதும் ஜனநாயக உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்ற பல்லினப்பாங்கையும் , பல்லினக் கருத்தியல் கோட்பாடுகளையும், பல்லின அரசியல் கலாசாரத்தையும் நிலைநாட்டுவதற்குத் தேவையான மாற்றத்தை நோக்கிய அரசியல் செயற்திட்டத்திற்கான தேசிய நிகழ்ச்சி நிரலில் (National political Agenda) சேர்க்கப்பட்டு இலங்கையின் ஏனைய சிறுபான்மையினரினது சக்திகளையும், பெரும்பான்மையினரின் மத்தியில் விசிறிக்கிடக்கின்ற இனவாத விரோத சக்திகளையும் ஒன்றிணைத்து செயற்படக்கூடியவகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இப்படியாக செயற்படும் போது இனவாதசக்திகளின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கும் கெடுபிடிகளுக்கும் உடனடியாக முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும், சிறுபான்மையினரின் பிரதான எதிரியான பேரினவாதத்தை தோற்கடிப்பதற்கு பன்முகப் பாங்கையும் பல்லின ஜனநாயகத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு தேசிய அரசியல் கலாசாரத்தை நிலைநாட்டும் பணியில் சாதகமான பங்களிப்பை செய்ய முடியும். இப்படியான நிலைமையை ஏற்படுத்துவதில் மலையக ஜனநாயக சக்திகள் பின்நிற்குமேயானால், வளர்ந்து வரும் பேரினவாதக் கெடுபிடிகளையும், அதனடிப்படையில் அமைந்த சமூக -பொருளாதார நெருக்கடிகளையும் தனித்தனியாக எதிர்நோக்கவும், அவற்றிக்கெதிராக தனித்தனியாக செயற்பட வேண்டிய நிலைமையும் மலையக இளைஞர்களுக்கு ஏற்படலாம். அப்படி ஏற்படுமேயானால் அது மலையகத்தில் கட்டுப்பாடற்ற நிலைமையைத் தோற்றுவித்து மலையக மக்களை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லக்கூடிய நிலைமைகளைத் தோற்றுவிப்பதோடு பேரினவாதிகளின் கெடுபிடிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் நியாயமான தளமாக மலையகம் அமைந்துவிடலாம். எனவே இது மலையக மக்களின் எதிர்கால நன்மைகருதி காலதாமதமின்றிக் கலந்துரையாடி செயற்படுத்தப்பட வேண்டிய முக்கிய விடயமாக கருதப்படல் வேண்டும்.



ச.பாலகிருஷ்ணன்.

'அது இன்னொரு நாட்டுக்குள் நுழைவது போன்ற அனுபவத்தையே எங்களுக்குத் தந்தது.

வெறும் அடையாள அட்டைகளைக் காட்ட வேண்டியிருந்ததாலோ அல்லது புலிகளது சோதனை நிலையங்களில் விசாக்களைப் பெறவேண்டி இருந்ததாலோ, நாம் இப்படி உணரவில்லை. எந்தவிதமான மோட்டார் வாகனங்களு மற்ற நூற்றுக்கணக்கான சைக்கிள்கள் ஓடித்திரிகின்ற ஒரு பிரதேசமாக அது இருந்தது.

இருள் பரவுகின்ற வேளையில், மண்ணெண்ணைக் குப்பி விளக்குகளைக் கொண்ட கண்ணாடி விளக்குக் கூடுகள் -பூட்டுகள் இடப்பட்டு பழைய விளக்குக் கம்பங்களில் இணைக்கப்பட்டிருப்பவை- மின்னுகின்றன. றேடியோ, டெலிவிஷன் கிடையாது. எந்தவித மின்சார உபகரணங்களும் இல்லை. ஒரு டிஸ்பிரினோ பனடோலோ வாங்குவதே சிரமம்.... கண்ணுக்குத் தெரிவதெல்லாம் அழிவுகளும், சிதைவுகளும், இறந்து போன புலிகளின் ஆளுயரப் படங்களும், அவர்களது மரணங்கள் பற்றிய விளக்கங்களும்....'

அண்மையில் யாழ் சென்று வந்த பத்திரிகையாளர்களில் ஒருவரான அன்னி அபயசேகர அவர்கள் தாம் தங்கிய ஒரு வார காலத்துள் கண்டவைகளைப் பற்றி 'யாழ்ப்பாண மக்களின் குரல்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார். தான் தங்கியிருந்த நாட்களில் சந்தித்த பல்வேறு யாழ் குடிமக்களின் அபிப்பிராயங்களையும் தந்திருக்கிறார். அவற்றை அப்படியே தமிழாக்கித் தருகிறோம்:



# நீங்கள் அறிவீர்களா- நம் நெஞ்சுறையும் சோகத்தை!

''அங்கிருந்த ஏழு நாட்களில் நாம் பல்வேறுவிதமான மக்களைச் சந்தித்தோம். எம்மை மிகுந்த ஆதரவுடனும், அன்புடனும் வரவேற்ற அவர்கள் எம்மோடு மனம்திறந்து பேசினார்கள். தமது துன்ப துயரங்களை, சில வேளைகளில் தமது ஆத்திரங்களை அவர்கள் மனந்திறந்து கொட்டினார்கள்'' என்கிறார் அவர்.

**ஒரு வைத்தியர்:** ''நீங்கள் அழிவின் இயல்பைக் கண்ணுற்றீர்கள், பலரைச் சந்தித்தீர்கள், அத்துடன் இங்குள்ள நிலைமையை நேரடியாகப் பார்த்துள்ளீர்கள். சமாதானத்திற்கான யாழ்ப்பாண மக்களின், விருப்பத்தை; இவையெல்லாவற்றையும் சிங்கள மக்களுக்குக் கூறுங்கள். - நாம் வாழ வேண்டியுள்ள நிலைமைகள் எவ்வளவு சகிக்க முடியாதவை எனவும் கூறுங்கள்''

**ஒரு ஆசிரியர் :** ''ஷெல் விமானக் குண்டுத் தாக்குதல்கள் மூலமாக எமக்குக் கொடுக்கப்படும் செய்தியானது சிங்கள அரசாங்கம் நமது படு மோசமான எதிரி என்பதாகும்.

**ஒரு மதகுரு :** ''யாழ்ப்பாணப் பிள்ளைகளுக்கு சிங்கள மக்கள் எவரையும் தெரியாது. மக்களைக் கொல்லும் ''ஷெல்'' ஒன்றைப் பலாலியிலிருந்து அடிக்கும் ஒரு சிப்பாயே அவர்களுக்குத் தெரிந்த ஒரே சிங்களவராவர்.

**பல்கலைக்கழக மாணவன் :** ''ஏன் உங்கள் ஜனாதிபதி இங்கே இனப் பிரச்சினை இல்லை, ஆனால் பயங்கரவாதப் பிரச்சினை ஒன்று மட்டுமே உள்ளதெனக் கூறுகிறார்? அவ்வாறான பிரகடனங்கள் மக்களை எல்.ரீ.ரீ.ஈ யை நோக்கி தள்ளுகின்றன. அவை எல்.ரீ.ரீ.ஈ.யின் பிரச்சாரத் தேவைகளுக்காகப் பாவிக்கப்படுகின்றன.''

**ஒரு இளைஞன் :** ''பிரச்சினையொன்றைத் தீர்ப்பதற்கு முன் முதலில் பிரச்சினையை இனங்காண வேண்டும். இங்கே இனப்பிரச்சினை ஏதுமில்லை, பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே என்ற ஜனாதிபதியின் பிரகடனம் எம்மை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. கோபத்தையும் ஏற்படுத்துகின்றது. இப்பிரச்சினையை அரசாங்கம் தீர்க்குமென நாம் எவ்வாறு எதிர்ப்பார்ப்பது?''

**ஒரு பல்கலைக்கழக மாணவன் :** ''நாம் மோசமாகச் சீரழிக்கப்பட்டுள்ளோம். சிதைக்கப்பட்டுள்ளோம். கடவுளுக்குக் கூறுவதையும், எமது சுமைகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதையும் தவிர நாம் செய்யக் கூடியது எதுவுமில்லை.''

**ஒரு மதகுரு :** ''எனது தாயார் இரு வாரங்களுக்கு முன் காலமானார். ஹோர்லிக்ஸ், மோல்ரோவா போன்ற பொருட்களும், மருந்துப் பொருட்களும் இருந்திருக்குமானால் அவர் நீண்ட நாள் வாழ்ந்திருப்பார்.''

**ஒரு இளைஞன் :** ''எனது சகோதரியின் சிறு பையனுக்கு 4 வயது. அவனுக்கு விமானத்தின் ஒலியைக் கேட்டதும் முழு உடலும் பயத்தினால் நடுங்குகிறது. அவன் தேவாலயப் பாடசாலை இடிந்து குவிவதைக் கண்டான். இப்போது அவன் அழுவதுடன் பாலர் பாடசாலைக்குப் போகவும் மறுக்கிறான். ஒரு நாள் அவனைக் கட்டாயப்படுத்திப் பாடசாலைக்குக் கூட்டிச் சென்றோம். அத்துடன் கடுமையாகக் காய்ச்சல் காய்ந்தது. எனவே இப்போ நாம் அவனை வீட்டில் இருக்கட்டும் என விட்டுள்ளோம்.

**ஒரு மதகுரு :** ''பூநகரித் தாக்குதலுக்குப் பின் எமது பிரதேசத்துக்கு 49 இறந்த புலிகளின் உடல்கள் கொண்டு வரப்பட்டன. உடனடியாக 112 ஆண், பெண் பிள்ளைகள் இயக்கத்தில் சேர்ந்தனர்.

**ஒரு பத்திரிகையாளர் :** சில தினங்களுக்கு முன் எனது சகோதரியின் பிறந்த தினம் வந்தது. அவள் என்னுடன் ஒன்றாக நின்று புகைப்படம் பிடிக்க வேண்டுமென்று பிடிவாதமாக இருந்தான். ஏன் என்று நான் கேட்டதற்கு 'அடுத்த வருடம் நாம் உயிருடன் இருப்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லையே' எனப் பதிலளித்தான்.

**அரசாங்க உத்தியோகத்தர்:** அரசாங்கம் உணவு விநியோகத்தை நிறுத்துவதும், யாழ்ப்பாணம் மீது குண்டு போடுவதும் எல்.ரீ.ரீ.ஈ. க்கு எதிரான மக்களைக் கூட அவர்களிடம் தள்ளி விடுகிறது. நாம், சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் என நினைத்துச் சிங்கள மக்கள் தமது சிந்தனையில் தவறு விடுகின்றனர். நாம் அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்க்கிறோம். சிங்களவர்கள் சமாதானத்தையும் இணக்கத்தையும் நிறுவுவதற்காக அரசாங்கத்தின் மீது அழுக்கத்தை கொண்டு வருவார்களாயின் நாம் மகிழ்ச்சியடைவோம். சிங்கள மக்களுக்குக் கூறுங்கள் நாம் அவர்களுடன் சமாதானமாக வாழ விரும்புகிறோம் என்பதை. பழைய மனத்தாங்கல்கள் தீர்க்கப்படவில்லை. இப்போது நமது பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். அத்துடன் அவர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள்.''



**பெண்மணியொருவர் :** எமக்கு யாழ்ப்பாணத்துக்கு உள்ளும், வெளியேயும் பிரயாணம் செய்யக்கூடிய பாதுகாப்பான வழியொன்று தேவை. கிளாலிப் பாதை எம்மை அச்சமூட்டுகிறது. நான் கொழும்பிலுள்ள எனது மகனையும், குடும்பத்தையும் 3 1/2 வருடங்களாகப் பார்க்கவில்லை. எனக்கு பத்து மாதங்கள் வயது நிறைந்த பேரனொருவன் இருக்கிறான். அவனைப் பார்க்க மிகுந்த ஆசைப்படுகிறேன்.''

**வயோதிபர்:** ''தெற்கிலுள்ள மக்கள் இங்குள்ள நிலைமைகள் பற்றி அறிவார்களா? நாம் சாதாரண வாழ்க்கை வாழ விரும்புகிறோம். எமது மின் விநியோகத்தைப் பெற, உணவை வழமையான விலைக்குப் பெற விரும்புகிறோம்.,

**ஒரு வயதான பாட்டி :** ''ஷெல் தாக்குதலில் ஒரு காலை இழந்தேன். நாம் பல கஷ்டங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. எமது வாழ்க்கை கொடுமை நிறைந்ததாகும்.''

**பெண்மணி :** ''ஆகக் குறைந்தது அவர்கள் குண்டுபோடுவதையும், ஷெல் அடிப்பதையுமாவது நிறுத்துவார்களா? நாம் அச்சத்துடனேயே வாழ்கின்றோம். நத்தார் தினத்தின்றும். தைப்பொங்கல் தினத்தன்றும் கூட ஷெல் தாக்குதல்கள் நடந்தன.''

**மாணவன்:** வயதானவர்களும், சிறு பிள்ளைகளுமே பதுங்கு குழிகளினுள் செல்வர். இளைஞர்கள் செல்வதில்லை. கடந்த வருட நவம்பர் மாதத்தில் நேரடித் தாக்குதலொன்றின் விளைவாகப் பதுங்கு குழியொன்றினுள் 26 மக்கள் கொல்லப்பட்டனர். இதில் பலர் சிறு பிள்ளைகளாவர்.''

**ஒரு தந்தை :** ''எமது இளைஞர்களும் பையன்களும் கொல்லப்படுகின்றனர். அல்லது அவர்கள் வெளிநாடு செல்கின்றனர். பெண்களும், பெண்பிள்ளைகளும் மட்டுமே எஞ்சியுள்ளனர். ஆண்களுடனான பெண்களின் விகிதாசாரம் ஒன்றுக்குப் பத்தாக உள்ளது.''

**யுவதி :** எம்மில் பலருக்குத் திருமணம் பற்றிய நம்பிக்கையேதும் கிடையாது. இங்கே திருமணத்திற்கான வசதிகள் ஏதும் கிடையாது. இளைஞர்களே இல்லை.

**அரசாங்க சார்பில்லாத நிறுவனப் பிரதிநிதி:** நிவாரணங்கள், புனர்நிர்மாணப் பணிகளுக்கு நிதியளிக்கும் வழமையான சர்வதேச நிறுவனங்கள் இங்கு வந்து திட்டங்களைக் கண்காணிப்புச் செய்வதில் உள்ள தடைகள் தமது பணிகளை மேலும் கடினமாக்குகின்றன எனக் கூறித் தமது நிதியளிப்பதில் அதிகரிப்பைச் செய்ய மறுத்துவிட்டனர்.''

**குண்டு போடப்பட்ட வீதியொன்றிலுள்ள பாடசாலை மாணவி:** ''அந்த முதல் வீட்டில் உள்ள ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பம் டிசம்பர் மாதம் 5ம் திகதி போடப்பட்ட குண்டுகளினால் கொல்லப்பட்டனர். எனது கர்ப்பிணிச் சகோதரி கொல்லப்பட்டார். எனது நண்பி தனது சகோதரனை இழந்தாள். இந் நிகழ்வுகள் பற்றிக் கொழும்பில் கேள்விப் படுவீர்களா?''

**ஓய்வு பெற்ற நபர்:** ''இலங்கை அரசாங்கத்திடமிருந்து மூன்று விடயங்களை நாம் கேட்கிறோம் - கிளாலிப்பாதையை போக்குவரத்துக்கு அனுமதிக்க கூடியதாக ஆக்குங்கள், பொருளாதாரத் தடையை அகற்றுங்கள், குண்டு, ஷெல் தாக்குதல்களை நிறுத்துங்கள்.''

**இன்னொருவர்:** ''மக்களின் இடம்பெயர்வானது ஷெல் தாக்குதல்கள், பொருளாதாரத் தடை அல்லது கொழும்புக்கான பாதுகாப்பான வழியை விட மிக மோசமானதாகும். யாழ்ப்பாணம் அகதிகளால் நிறைந்துள்ளது.''

**ஆசிரியர்:** குண்டு; ஷெல் தாக்குதல்கள் நிறுத்தப்படுமானால் நாம் தொலைபேசிகளும், மின்சாரமும் இன்றிக் கூட முழுமையான மகிழ்வுடன் வாழ்வோம்.''

**தாய் :**''எம்மால் தொலைபேசி அழைப்புகள் ஏதும் பெறமுடியாது. கடிதங்கள் எம்மை வந்தடைய மிக நீண்ட நாட்கள் எடுப்பதே மிகவும் மோசமானதாகும் -வெளிநாடுகளிலிருந்து கடிதங்கள் வர 6 மாதங்கள் மட்டிலும் , உள்ளூர்க் கடிதங்களுக்கு 3 மாதங்களும் எடுக்கின்றன.

**ஒரு பெண் :** நவம்பர் 3ம் திகதியிட்டுப் புற்று நோய் வைத்தியசாலையிலிருந்து எனது மாமாவினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம், ஜனவரி 31 ஆம் திகதி அவர் இறந்து, புதைக்கப்பட்ட பின்பே கிடைக்கப் பெற்றது.''

**பெண் பிள்ளை:** ''மத்திய கிழக்கிலுள்ள எனது தாயாரிடமிருந்து நீண்ட காலத்தின் பின்பு கடிதமொன்று எனக்குக் கிடைக்கப் பெற்றது; ஆனால் அவர் அதில் உள்ளடக்கப்பட்டிருந்ததாக எழுதியிருந்த காசுக் கட்டளை உள்ளே உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.''

**பருத்தித்துறையிலுள்ள வைத்தியர்:** Medicines Sans Frontiers இல்லாது விட்டால் இவ் வைத்தியசாலை நீண்ட காலத்துக்கு முன்பே கால்நடைப் பண்ணையாகியிருக்கும்.''

**ஆய்வுகூட தொழினுட்பவியலாளர்:** இரசாயனப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு. கோரிக்கை விடுத்திருந்த போதும் கூடக் கடந்த 3 வருடங்களாக எதனையும் எம்மால் பெறமுடியவில்லை.''

**ஒரு பிரஜை:** ''சட்டப் புத்தகத்திலுள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்துவது அரசியல்வாதிகளின் இதயத்திலும், மனதிலும் இன்னமும் இல்லை. அரசாங்கச் சுற்றறிக்கைகள் எமக்கு இன்னும் சிங்களத்தில் மட்டுமே வருகின்றன. தமிழ் மக்கள் சிங்கள அரசியல் தலைமையில் நம்பிக்கை இழந்து விட்டனர்.''

**ஒரு மூத்தவர்:** ''அப்பாவிப் பொது மக்கள் மீது குண்டு போடாதீர்கள். புலிகளைப் பிடிக்க முடியாத காரணத்தால் சாதாரண மக்களை அழிக்காதீர்கள்.''

**மீனவர் :**''எமக்குத் தெரிந்ததெல்லாம் மீன்பிடியாகும், நாம் செய்ய நினைப்பதுவும் மீன் பிடித்தலாகும். இப்போது எமக்கு ஜீவனோபாயம் இல்லை. நாம் கரையிலிருந்து மீன் பிடித்தாலோ /துணிந்து கடலில் மீன் பிடியில் ஈடுபட்டாலோ எமக்குக் கிடைப்பது குண்டுகளாகும்.''

**தேவாலயத் தலைவர்:** ''ஆகக் குறைந்தது சமாதானம் வரும் வரை நாம் உயிர்வாழக் கூடியதாக எமக்கு உதவி அனுப்புங்கள்.''

**சபை உறுப்பினர் ஒருவர் :** 1993 இல் தற்கொலைகளினதும் தற்கொலை முயற்சிகளினதும் எண்ணிக்கை 583 ஆகும். அவர்களில் அநேகமானவர்கள் 18 இற்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர். ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள 100 பிள்ளைகளிடத்தில் நாம் ஒரு கணிப்பீட்டை மேற்கொண்டோம். அவர்களில் 85 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பாலியல் பலாத்காரம், சித்திரவதை, கொலைகள் (இந்திய அமைதிகாக்கும் படை இருந்த நேரத்தில்) ஆகியவற்றைக் கண்ணுற்றுள்ளனர். நாளை இங்கே சமாதானம் ஏற்படுமானாலும் இந்த யுத்தத்தின் தாக்கங்கள் பிள்ளைகளில் பல வருடங்களுக்குத் தொடரும். அத்துடன் சிப்பாய்களும் அவர்களது குடும்பங்களும் இதே விதமான /மன அதிர்ச்சியினால் வருந்துகின்றனர்.''

நன்றி: THE SUNDAY TIMES பெ.27,1994

### சாதிய எதிர்ப்புப் போராட்டமும்: சீர்திருத்தங்களும், வன்முறையும்.

1930களில் பின் தாராளவாத, முற்போக்கு சிந்தனையுள்ள, நடுத்தர வர்க்க வெள்ளாள இளைஞர்கள் முதன்மை பெற்ற யாழ்ப்பாண வாலிப சங்கத்தினர் மத்தியில் இருந்து நாட்டு விடுதலைக்கு மட்டுமன்றி சாதிய விடுதலை தொடர்பாகவும் சமூகப் பிரக்ஞை உள்ள குரல்கள் ஒலிக்க

லான சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் வழி நடத்தலுடன் திரு.எஸ்.ரி.என்.நாகரத்தினம் அவர்களின் தலைமையில் இயங்கிய 'தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்' தினரின் வெகுசன அடிப்படையிலான இலங்கை வரலாற்றிலேயே முன்னுதாரணமற்ற, துணிச்சல் மிக்க வன்முறைப் போராட்டம், மொஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் கிளையின் வழிநடத்தலுடன் திரு.எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் தொடர்ந்தியங்கிய சிறுபான்மைத் தமிழர் மகா

வெளிவாரிப் புலப்பெயர்வுகளும், வெளியிலிருந்து செல்வம் யாழ்ப்பாணத்துள் பாய்ந்தமையும் யாழ்ப்பாணத்து வெள்ளாளர் மத்தியில் இயல்புக்கு மாறான வகையில் மத்தியதர வர்க்கத்தையும், கல்வியையும் விரிவாக்கியது. விரிவடைந்த மத்தியதர வர்க்கமும், கல்வியும் மேலும் கல்வியையும், பொருளாதாரப் புலப்பெயர்வுகளையும் தூண்டியது.

பொருள் தேடும் வேட்கையோடும் அதற்கான தகுதியோடும் இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் பிரதேசங்க

# சாதியமைப்பும் யாழ்ப்பாணத் தமிழர்களும்

ஆரம்பித்தது. பஞ்சமர்களுள் வேர்குத்திப் பள்ளர், செருப்புக்கட்டிப் பள்ளர், கம்பனி நளவர், கோட்டை காத்த நளவர், வேர்க்குத்திப் பறையர் போன்ற சுதந்திரமான சாதிப்பிரிவினர்களும் நகர வளர்ச்சியினால் உருவான மூட்டை சுமத்தல், றிக்சோ இழுத்தல்,

சபையினரின் சட்டரீதியான கிளர்ச்சி என்பவற்றின் பின்னணியில் பல நூற்றாண்டுகளாக தேங்கி நாற்றமெடுத்துக் கிடந்த யாழ்ப்பாணத்தின் சமூகப் பொருளாதார வரலாறு உடைப்பெடுத்து பெருகி ஓடத் தொடங்கியது. தமிழர்களின் மத்தியில் சமூக அரசியல்

ளுள் வங்காள மனிதன் புகுந்தது போல, யாழ்ப்பாண குடாநாட்டின் வெளியே ஏனைய தமிழ் சிங்களப் பிரதேசங்களுள்ளும் மலையகத் தேயிலைத் தோட்டங்களை நோக்கியும், இலங்கையின் வெளியே கிழக்காசிய நாடுகளை நோக்கியும் யாழ்ப்பாணத்து

## ஒரு சமூகவியல் பரிசீலனை -4

சந்தை சார்ந்த பணிகள் போன்ற பல்வேறு கீழ்மட்டப் பணிகளிலும் ஈடுபட்டு ஓரளவு விடுதலை அடைந்த 'கன்பொலை' * போன்ற நகர்களை அண்டிய அடிமைச் சாதியினரின் வட்டாரங்களைச் சார்ந்த இளைஞர்களும், நளவர், பள்ளர், சாதிப்பிரிவினருள் மரவரி முறையில் கள் இறக்குவதன் மூலம் விடுதலை பெற்றவர்களும் நகர்ப்புறத்தில் தோன்றிய சிகை அலங்கார, சலவைக் கடைகளைச் சார்ந்த அம்பட்டர், வண்ணார் போன்ற குடிமைச் சாதியினரும் மெல்ல மெல்ல எழுச்சி பெற்றனர். இவர்களுள் கல்வி பொருளாதாரம் என்பவற்றால் சமூக மேம்பாடடைந்தவர்கள் மத்தியிலிருந்து திரு யோவேல் போல் போன்ற ஆற்றலும் துணிச்சலும் மிக்க தலைவர்கள் உருவாக ஆரம்பித்தனர். இப்படி யாழ்ப்பாண சமூக வரலாற்றின் புதிய சகாப்தம் ஒன்று மெல்ல மெல்ல தோற்றம் பெற ஆரம்பித்தது. குடியிருப்பு, தொழில் என்பவை தொடர்பாக வெள்ளாளரது நிலத்துடன் மீளா அடிமைகளாகப் பிணைக்கப்பட்டிருந்த அடிமை குடிமை பிரிவினரால் வெள்ளாளர் ஆதிக்கத்தை மீறி சுதந்திரராக நிமிர முடியவில்லை. இவர்களுள் ஒரு சாரார் வெள்ளாளத் தேசியவாதிகளுள் சீர்திருத்தவாதிகளாக இருந்த ஓரிரு தமிழ்த் தலைவர்களின் பின்னால் அணிதிரண்டனர்.

சாதிய எதிர்ப்பு கிளர்ச்சிகளை இடதுசாரிகளின் உதவியுடன் அமைப்புரீதியாக நெறிப்படுத்தும் முயற்சிகள் 1940களின் ஆரம்பத்திலிருந்து முதன்மை பெற்று 1943ல் சிறுபான்மைத் தமிழர் மகாசபையாக தோற்றம் பெற்றது. 50களின் ஆரம்பத்திலிருந்து தொடர்ந்து சிறுபான்மைத் தமிழர் மாகாசபை முன்னெடுத்த போராட்டங்கள் பல்வேறு சீர்திருத்தங்களுக்கு வழி வகுத்ததுடன் சமூகப் பிரக்ஞையற்றிருந்த தமிழர் தேசிய இயக்கங்களையும் பாதித்தது. இக்காலகட்டத்தில் முன்னணியிலிருந்த தமிழ்த் தேசியவாதிகளுள், கோப்பாய் திரு கு. வன்னியசிங்கமும் திருமலை திரு இராஜவரோதயமும், அவர்களை ஆதரித்த தமிழ் ஆசிரியர்கள், எழுதுவினைஞர்களின் முன்னணிப் பிரிவினரும் தவிர்ந்த ஏனைய பகுதியினர் அசல் யாழ்ப்பாணிகளாக வெள்ளாளரது நிலைப்பாட்டிலிருந்து சாதியப் பிரச்சினையை அணுகினார்கள்.

1964ல் கம்யூனிஸ்ட் கட்சி மொஸ்கோ சார்பு சீனச்சார்பு என உடைந்தது. இதனால் சாதிய எதிர்ப்புப் போராட்ட அமைப்புகளும் அவற்றின் மூல தந்திர உபாயங்களும் கூட இரு வேறுபட்டது. திரு நா. சண்முகதாசன் தலைமையி

அணி மட்டுமன்றி கலாசார அணியும் உருவாக இச் சமூக விடுதலைப் போராட்டம் வழிவகுத்தது.

வெள்ளாளரின் பெரும்பான்மை அபிப்பிராயங்களை நிராகரித்து மோதல் நிலைகளுக்கு முகம் கொடுக்கத் தயாராகாமல் அடுத்து எந்த ஒரு கவடும் முன்னே எடுத்து வைக்க முடியாதிருந்த தருணத்தில், அதற்குத் தயாராக எழுந்தவர்கள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் தான்.

1960களை யாழ்ப்பாணத்து வரலாற்றின் திருப்பு முனையாக மாற்றியமைத்த இந்த மகத்தான போராட்டங்களின் விளைவாக யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பின் கலாசார ரீதியான இறுக்கம் வெடித்து உடையத் தொடங்கியது.

உண்மையில் இன்று எஞ்சியிருக்கும் சாதிய ஒடுக்குதல்கள் தொடர்பான பிரச்சினைகளுள் முக்கியமானவை பஞ்சமர் சாதிப் பிரிவினரின் கீழ் வர்க்கத்தவர்களது சமூக பொருளாதாரப் பிரச்சினைகளே ஆகும்.

எல்லோருக்கும் குடியிருக்கும் நிலம் சொந்தமாகும் வகையிலும் குத்தகை விவசாயிகளது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகிற வகையிலும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு பொருத்தமான விசேடமான நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் அவசியப்படுகிறது. உயர் கல்வி வாய்ப்புகள், நிலப் பங்கீடு, நிலம் சாராத-மரபு சாராத வேலை

### வ.ஐ.ச.ஜெயபாலன்

வாய்ப்புகள், மத்திய-உள்ளூர் ஆட்சியமைப்புகளில் பிரதிநிதித்துவம், வேலைவாய்ப்புகள் என்பவை தொடர்பாக அவசியப்படுகிற குறைந்த பட்சக் காலகட்டம் வரை ஒடுக்கப்பட்ட சாதியினரின் கீழ் வர்க்கப் பிரிவினருக்கு விசேட முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

### யாழ்ப்பாணியத்தின் தோற்றம்;சமூகப் பொருளாதாரப் பின்னணி

சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் மாறுதல்களுக்கும் யாழ்ப்பாணம் ஆட்படத் தொடங்கிய காலகட்டம் 19ம் நூற்றாண்டுகளில் ஆரம்பிக்கின்றது. பயிர்ச் செய்கை வர்த்த மயமாதல், கல்வி பரவலாதல், வருமான மார்க்கம் தேடிய பொருளாதாரப் புலப்பெயர்வுகள் என்பன தோற்றம் பெற்ற இந்த நூற்றாண்டு பற்றிய சமூக பொருளாதார ஆய்வுகள் அவசியம்.

மனிதன் பெருகிப் பெருகிச் செல்லத் தொடங்கிய காலம் இது. தமிழகத்திலும்இக் காலகட்டத்தில் சைவ-தமிழ்க் காவலர்களாக யாழ்ப்பாண மனிதன் அறிமுகமாகியிருந்தான்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெளியே வாழும் தமிழர்களால் 'யாழ்ப்பாணி' என வெறுப்போடும் அச்சத்தோடும் பிரமிப்போடும் பார்க்கப்பட்ட இந்த மனிதன்தான் தமிழகத்துமேல்வர்க்க-வைதீகப் பிராமணர்களின் யாழ்ப்பாணத்து சமூகப் பிரதி 'யாழ்ப்பாணியம்' தான் இலங்கைத் தமிழர்களின் பிராமணீயம்

யாழ்ப்பாணியத்தைப் புரிந்து கொள்ள ஆறுமுக நாவலரையும் அவரது நேர் எதிர் பங்களிப்புகளையும் தெரிந்து கொள்வது அவசியம். இக் கால கட்டத்தில் ஏற்பட்ட சமூக பொருளாதார வளர்ச்சியும் சமூக மேம்பாடும் யாழ்ப்பாணத்துப் பல்வேறு உயர்சாதிச் சமூகங்களை உலுப்பியது. வெள்ளாளருடன் கலாசார ரீதியாக சமநிலையிலும் சமூக பொருளாதார ரீதியாக தாழ்ந்த நிலையிலும் இருந்த மடப் பள்ளிகள், செட்டி, அகம்படியர், தவசிகள், தாணத்தார், பரதேசிகள், தனக்காரர், வாணிபர் போன்ற சாதிப் பிரிவினரும் சமூக பொருளாதார ரீதியாக மேம்படையத் தொடங்கினர். இம் மேம்பாடு மேற்படி மேல்தட்டு சூத்திரர் சாதியினர் வெள்ளாளருடன் ஒருங்கிணைந்து வெள்ளாளர் மயமாவதற்கு வழிவகுத்தது. இந்த ஒருங்கிணைவுகள் மூலம் ஏற்கனவே பெரும்பான்மைச் சமூகமாக இருந்த வெள்ளாளர் சமூகம் மேலும் விரிவடைந்து தொகைரீதியாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் சனத்தொகையில் சரிபாதிக்கும் சற்று அதிகமான நிலையை அடைந்தது.

*1824ம் ஆண்டுப் புள்ளி விபரங்களின் படி யாழ்ப்பாண மாவட்டத்து குடித்தொகை அமைப்பில் வெள்ளாளரதும், பின்னர் வெள்ளாளருடன் இணைந்து விட்ட சில சாதியினரதும் வீதம் பின்வருமாறு அமைந்திருந்தது. வெள்ளாளர் - 37, மடப்பள்ளி-10.5, செட்டி-4, தனக்காரர்-1.5, பரதேசி-1.4

---

* நெல்லியடி நகரத்தை அண்டிய அடிமைச் சாதியினரின் குடியிருப்பு

(வரும்)

எம்.எஸ்.எம். அன்வரின் இரு கவிதைகள்.

## கனவில் நாளை

இப்படி மாறிப் போய் இருந்தது
வெள்ளியில் இருந்து ஒளி ஒழுகவில்லை
எங்கோ-
துப்பாக்கியால் சுடுபட்ட மனிதனின்,
ஒரு கிராமத்தில்
கத்தியால் கீறி கொலை செய்யப்பட்டவனின்
இரத்தத்தை ஒழுக்கியது
நிலவில் மண்டையோடு

புதிது புதிதாய் மனிதர்கள் விழுந்தனர்.
மேகத்தில் இருந்து
விரல்கள் இல்லை,
காலில் கையில்
துப்பாக்கிச் சன்னங்கள் இருபது முளைத்திருந்தன.
முரசில்
முப்பத்திரெண்டு சயனைட் கத்திகள்.



குந்தி மலம் கழித்தார்கள்,
பொதுக் பொதுக்கென கிரனைட் குண்டுகள்
கதைத்தால் வார்த்தை வராது.
உயிர்களைச் சிதைக்கிற பீரங்கி வெடி.
சூரியன் கதிர்களை முறித்து எறிந்து
நெடிய வாள்களை ஏந்தி வந்தது.
மனிதனைப் போல
ஒவ்வொரு நாளும் செத்துக் கிடக்கிறது.
வீதியில்
புயலில் மரம் அசைகிற மாதிரி
நான் நடுங்குகிறேன்; பயம்
இனி-
நோண்டி எறியப் போகிறேன் கண்களை.
வரும் கனவையும்.

## எரிகின்ற நெருப்புக் கொள்ளி



உரிந்து கீழே போடு
பாவாடையை கழற்றி விரி மெத்தையில்
சட்டையை அகற்று.
இடியப்பத்துக்கு
புளுக்கிய மாவை பிசைவது போல
உனது முலைகளை அவன்.
மரம் மாதிரி நீ நிர்வாணமாய்.

ஆண்மையின் வெறியை
வேலிக் கம்பு போல நீட்டிக் கொண்டு
வழமையாக அவன்
இரவுகளில் தனது
பன்றிக் காமத்தை உன்னில் புதைக்கின்றான்
கால் நீட்டி மல்லாக்கப் படுக்கிறாய்

குசினிக்குள் உனது சுதந்திரம்
அடுப்பில் பற்றி எரிகிறது
சாம்பர்தான்.
சுரண்டுகிற சட்டியின் கரியாகக் கரைகிறது
வாழ்வு.
ஆக்கிப் போடுகிறாய்; நசிபடுவது கட்டிலில்.
இப்படியாய்...

எனது குருதியில் வெப்பம் சீறிப் பாய்கிறது.
உன்னைப் பார்க்க
இரவில் அவிழ்த்தெறியும்
உனது சேலையைப் போல
சோம்பேறி இருப்பை
பயத்தை
உரிந்து வீசி விட்டு
வா என்னோடு.

புருஷனின் நெருக்குதலில்
பச்சைப் புண்ணாக நோவுகிற நரம்புகளில்
இரும்பின் வலிமையை பூசு.
இன்னும் வா....
அடுப்புக்குள்ளிருந்து எரிகின்ற
நெருப்புக் கொள்ளிகளை கைகளில் எடுத்துவா!
உனது கோபங்களைப் பிழிந்து
முறுக்கிப் பிழிந்து நெய்யைத் தடவு.
வை
இந்த ஆண்மையின் அடக்குதலில்.
சமூகத்தின் கூரை முகட்டில்.

# சூரியகந்த:
# மூடி மறைப்பதற்கான தீர்ப்பு?

என்.எஸ்.குமரன்


இரத்தினபுரி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவும், சூரியகந்த அமைந்துள்ள இடமும்.

**1989** ஆம் 1990ஆம் ஆண்டுகளில் காணாமல் போன எம்பிலிப்பிட்டிய மாணவர்களது சடலங்கள் சூரியகந்த பகுதியில் புதைகுழிகளில் இருந்து 3ம் திகதியும் 8ம் திகதியும் தோண்டியெடுக்கப்பட்டது. அங்கு 20க்கும் மேற்பட்ட சடலங்கள் எலும்புக்கூடுகளாக கிடைத்தன. தோண்டியெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளும், வேறும் பொருட்களும் பெற்றோர்கள் அடையாளம் காட்டுவதற்காக ஜனவரி 10ம் திகதியன்று எம்பிலிப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டது. அத்தினத்தன்று நான்கு பெற்றோரால் தங்களது பிள்ளைகளின் உடைகள் மற்றும் வேறுசில அடையாளங்களூடாக அடையாளம் காட்டப்பட்டது என்கிற விடயங்கள் வாசகர்கள் ஏற்கனவே அறிந்தவை.

ஜனவரி 3ம், 8ம் திகதிகளில் குழிகள் தோண்டப்பட்டபோதும் குழிகளிலிருந்து சடலங்கள் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருந்தன. எனினும் தொடர்ந்து குழிகளைத் தோண்டும் வேலையை நீதிவான் குற்றப்புலனாய்வுத் துறையினருக்கு (CID)பொறுப்பளித்தார். இதனால் அரசு இச்சம்பவத்தை மூடிமறைத்துவிடும்; குழிகளைத் தொடர்ந்து தோண்டாது விட்டுவிடும் என அச்சம் கொண்ட வழக்கறிஞர்களான எம்.டி.செனவிரத்ன, தேசபந்து. சூரியபட்டபெந்தி, திருமதி பவித்திரா வன்னிஆராச்சி ஆகியோர் குழிகளைத் தொடர்ந்து தோண்டுவதற்கான ஆணை வழங்கப்படவேண்டுமென நீதிவானிடம் கோரிக்கை விடுத்தனர்.

தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னரேயே தீர்ப்பு வழமை போல யாருக்கு சார்பாக வழங்கப்படப்போகிறது என்பதை பலர் உணர்ந்திருந்தனர். அதன்படி பெப்ரவரி 1ம் திகதி நீதிபதி பியசேன ரணசிங்க அவர்களது தீர்ப்பானது ''குழிதோண்ட அனுமதி தாருங்கள் என குற்றப்புலனாய்வு பணியகம் கோரினால் நான் அதனை பரிசீலனை செய்யலாம்'' என அறிவித்தார்.

நீதிவானின் இந்தப் பசப்பலான தீர்ப்பு இக்கோரிக்கையை முன்வைத்த வழக்கறிஞர்களுக்கும், பெற்றோர்களுக்கும் திருப்திகரமாக அமையவில்லை.

குற்றப்புலனாய்வு துறையினர் இச்சம்பவத்தினைப்பற்றிய விசாரணைகளை ஒரு வருடத்திற்கு ஒத்திவைப்பதற்கான முயற்சிகளை செய்துவருகின்றனர் என வேறு சில தகவல்கள் தெரிவிக்கின்றன. 'தேர்தல் ஆண்டு எனக் கூறப்படும் இவ்வருடத்தில் மேற்படி விசாரணைகளை தொடர்வது அரசுக்கு சிக்கலைக் கொடுக்கும் என்றும், எனவே இச்சம்பவத்தை ஒத்திவைக்குமாறும் மேல்மட்டத்தில் இருந்து வந்த ஆணையே இதற்கான காரணம் எனத்தெரியவருகிறது.

இதனை நிரூபிப்பதைப்போல் ஜனவரி 10ம் திகதி எலும்புகளை அடையாளம் காட்டுவதற்காக பெற்றோர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டதன் பின் குற்றப்புலனாய்வு துறையினர் ''எம்பிலிப்பிட்டிய மாணவர்களது சடலங்கள் தான் இவை என அடையாளம் காட்டப்படவில்லை'' எனத் தெரிவித்தனர். பெப்ரவரி 1ம் திகதியோ அரசாங்கம் மேலும் ஒருபடி மேலே போய் ''குற்றப்புலனாய்வுத் துறையினர் ஒரு வேளை தொடர்ந்து தோண்டுவதற்கு கோரினால் தோண்டலாம்'' என அறிவித்திருக்கிறது. அவ்வாறு குற்றப்புலனாய்வு துறை குழிகளைத் தோண்ட அனுமதி கோருமா? கோரினாலும் எப்போது? அவ்வாறு குற்றப்புலனாய்வு துறையினர் ஒருவேளை குழிகளை தொடர்ந்து தோண்டுவதற்கு அனுமதி கோரினாலும் நீதிமன்றம் அனுமதிக்க வேண்டுமே! (பரிசீலிக்கலாம் என்றல்லவா நீதிமன்றம் அறிவித்திருக்கிறது) அனுமதிக்குமா? எப்போது அனுமதிக்கும்?

அவ்வாறாயின் இது தொடர்பாக அக்கறை கொண்டுள்ள வழக்கறிஞர்களுக்கும் பெற்றோர்களுக்கும் எழுகிற பிரதானமான கேள்வி என்னவென்றால் இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் இத்துடன் நிறைவு பெற்றுவிட்டனவா? அரசாங்கம் இதை மூடிமறைத்து விட முயல்கிறதா? என்பது தான்.



பல பத்திரிகைகளும் மனித உரிமைகள் ஸ்தாபனங்களும் எம்பிலிப்பிட்டிய சம்பவத்தில் காணாமல் போன மாணவர்களது எண்ணிக்கை 31 எனத் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன. எனினும் சரிநிகருக்கு இதுவரை கிடைத்த தகவலின்படி அம்மாணவாகளின் மொத்தத் தொகை 31க்கும் மேற்பட்டது. அதே வேளை இச்சம்பவத்துக்கு பொறுப்பானவர்கள் எனக் குறிப்பிடப்படும் 'செவன' இராணுவ முகாமில் கொல்லப்பட்டவர்கள் பற்றி சரிநிகருக்குக் கிடைத்த பெயர்ப்பட்டில் 59 பெயர்களைக் கொண்டிருக்கிறது. (பார்க்க அட்டவணை)

இதே வேளை எம்பிலிப்பிட்டிய பகுதியில் இயங்குகின்ற பல தனியார் கல்வி நிறுவனங்கள் அப்பகுதி பொலிசைச் சேர்ந்தவர்களால் மிரட்டல்களுக்கு உள்ளாகியுள்ளன என்றும் தெரியவந்துளளது. அரசியல் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களிடம் 'இலங்கை அரசியலமைப்பு மற்றும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் என்பவற்றை விமர்சிக்காது படிப்பிக்குமாறு எச்சரித்துள்ளது டன் மீறி நடந்தால் ரயரோடு மேலே போக வேண்டி வருமென்றும் பொலிஸார் மிரட்டியுள்ளனர். அதேபோல் அப்பகுதி மாணவர்களிடமும் உயர்தர கல்விக்கு அரசியல் விஞ்ஞானத்தை பாடமாக தேர்ந்தெடுக்கக் கூடாது, என்றும் மிரட்டியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் அப்பகுதியில் அரசியல் விஞ்ஞானம் படிக்கும் மாணவர்களைப் பற்றிய தகவல்களைப் பொலிஸார் சேகரிப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இதற்கிடையில் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் மேலதிக விபரங்களை அறிவதற்காக மேற்படி குழிகளைத் தொடர்ந்து தோண்டுமாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். எம்பிலிப்பிட்டிய காணாமல் போன பெற்றோர்கள் சங்கம் இச்சம்பவத்தினை வெளிக்கொணர்வதற்காகவும் நியாயம் கோரியும் அரசுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் அனுப்பியுள்ள கடிதங்களின் எண்ணிக்கை பெப்ரவரி மாதத்தோடு 573 ஐத் தாண்டியுள்ளது.

அதேபோல் 'இலங்கை மனித உரிமைகளுக்கான அமைப்புகளின் கூட்டு' எனும் அமைப்பு இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஜெனிவாவிலுள்ள 'மனித உரிமைகள் நிறுவனத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அரசு மக்களின் நியாயமான கோரிக்கையை உதாசீனம் செய்து கொண்டு மூடிமறைப்பதற்கான முயற்சிகளையும் மிரட்டல்களையும் அரச இயந்திரங்களைப் பயன்படுத்தி செய்து வரும் சண்டித்தனங்கள் பலரை அதிருப்தி கொள்ளச் செய்திருக்கிறது.

தெற்கில் எழுந்து வந்த சிங்கள இளைஞர்களின் நியாயமான கோரிக்கைக்கான தீர்வினை வழங்குவதற்குப் பதிலாக அவர்களையே கொன்று புதைத்தது போல் இந்த வழக்கு விசாரணைகளையும் புதைத்து விட முயல்கிறது அரசு. 'புதைகுழிகளிலிருந்து எழுந்து வருவார்கள் குமாரர்கள்' என்று காத்திருக்கிறார்கள் அன்னையர்கள்!

## இராணுவத்தின் 6வ்து பிரிவுப் பீரங்கிப்படைத் தொகுதியினால் கடத்தப்பட்ட எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர்களதும் ஏனையோரதும் விபரம்

1989/90

| இல. | பெயர் | வயது | கடத்தப்பட்ட நாள் | பாடசாலை / விபரம் |
|---|---|---|---|---|
| 1. | டி.டி ரசிக குமார விஜேதுங்க | 17 | 06-11-89 | எம்பிலிப்பிட்டிய மத்திய மகா வித்தியாலயம் |
| 2. | என்.ஏ.சாமர சுதர்சன ஜயசேன | 17 | 11-11-89 | ,, |
| 3. | வை.வி.ஏ.சுசில் குமார | 17 | 11-11-89 | ,, |
| 4. | ஜி.டபிள்யு.ருவன் இரத்னவீர | 17 | 16-11-89 | ,, |
| 5. | எஸ்.எச் நிலன் மாநெல்க டி சில்வா | 17 | 01-12-89 | ,, |
| 6. | ஆர்.ஐ.ருக்மன் பரணவிதான | 17 | 01-12-89 | ,, |
| 7. | நளின் குமார குணரத்ன | 17 | 26-12-89 | ,, |
| 8. | உதேஷ் கவிந்திர செல்லஹேவா | 17 | 30-11-89 | ,, |
| 9. | எஸ்.பீ.பிரசன்ன ஹந்துவல | 19 | 17-12-89 | ,, |
| 10. | பாலித லக்ஷ்மன் குருகே | 19 | 17-12-89 | ,, |
| 11. | டபிள்யு.கே. மகிந்தபால விக்ரமசிங்க | 19 | 04-01.90 | ,, |
| 12. | எச்.பி.பி/பாலித | 19 | 04-01-90 | ,, |
| 13. | பி.எல்.அருண பியசமன் | 19 | 04-01-90 | ,, |
| 14. | பி.எல்.வசந்த பிரியசமந்த | 17 | 04-01-90 | ,, |
| 15. | கே.கே.டி.அலோசியஸ் ஸ்டீபன் | 18 | 08-10-90 | ,, |
| 16. | எச்.யு.சமிந்த ரொஷான் | 18 | 24-12-89 | ,, |
| 17. | ஜி.ஏ.ரோகண | 18 | 02-08-89 | ,, |
| 18. | கே.பி.அனுர ஜனப்பிரிய | 17 | 25-12-89 | ,, |
| 19. | பி.எச்.நிமல் சிசிர குமார | 18 | 07-08-89 | ,, |
| 20. | சரத் சமிந்த விஜேகூன் பெரேரா | 17 | 17-10-89 | ,, |
| 21. | கே.பி.பிரபாத் குமார | 17 | 17-11-89 | இ/எம்பிலிப்பிட்டிய மகா வித்தியாலயம் |
| 22. | தம்மிக குமாரபெரகம ஆராச்சி | 17 | 17-11-89 | ,, |
| 23. | எச்.எச். பிரதீப் விஜேசிங்க | 18 | 17-11-89 | ,, |
| 24. | பிரதீப் இந்திக மல்வத்த | 17 | 20-11-89 | ,, |
| 25. | கே.பியசிறி | 18 | 10-01-90 | ,, |
| 26. | எச்.கே.அல்பிரட் பாலித | 17 | 03-06-89 | ,, |
| 27 | எஸ்.பீ..சனத் பிரியந்த | 17 | 03-08-89 | ,, |
| 28 | பி.எச்.டி.நிகால் | 17 | 20-11-89 | ,, |
| 29 | ஜயசிறி ஹெட்டிகம | 17 | 21-10-89 | ,, |
| 30. | ஏ.ஜே.குணசிறி | 19 | 04-11-89 | ,, |
| 31. | அஜித் சோமரத்ன | 19 | 26-12-89 | இ/மொரகட்டிய ம.வி |
| 32. | ஜகத் சமிந்த குமார திசாநாயக்கா | 17 | 19.10.89 | இ/ஹல்மில கெட்டிய ம. வி. |
| 33. | ஜானக பிரசன்ன ஜயவர்ண | 17 | 18-12-89 | இ/மோதரவான வி. |
| 34. | தயானந்த ஏக்கநாயக்க | 18 | 11-10-89 | ,, |
| 35 | என்.ஏ.விஜேசிங்க | 19 | 03-08-89 | இ/துங்கம ம.வி. |
| 36. | கலஞ்சிகே கருணாசேன | 17 | 01-12-89 | ,, |
| 37. | லலித் உபுல் சாந்த ராஜபக்ஷ | 17 | 06-09-89 | இ/கெடசலர வித்தியாலயம் |
| 38. | கே.ரூபசேனே | 18 | 02-08-89 | இ/கொங்கட்டுவ வி. |
| 39. | டபிள்யூ.ஏ.சரத் | 17 | 18-08-89 | ,, |
| 40. | கே.ஜி.அனுர | 19 | 19-11-89 | தபரெல்ல வி. |
| 41. | பிரியந்த சிறிபத்தன | 17 | 13-12-89 | பகிரவ வி. |
| 42. | டபிள்யு.ஏ.உபதிஸ்ஸ | 19 | 16-09-89 | இ/ஓமல்பே வி. |
| 43. | மித்ரசேன நாகொடகே | 17 | 16-10-89 | இ/தெரபுட்ட வி. |
| 44. | என்.கருணதாச | 19 | 26-12-89 | 3ம் இலக்க மாணவனின் மூத்த சகோதரன் |
| 46. | என்.ஏ.ஜயதிலக | 20 | 11-11-89 | 2ம் இலக்க மாணவனின் சித்தப்பா முறை |
| 47. | ஜி.டிபிள்யு.நிமல் சாந்த விஜேசேகர | 21 | 08-12-89 | ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |
| 48. | டபிள்யு.எம்.திலகரத்தின பண்டார | 24 | 20-08-89 | மொரட்டுவ பல்கலைக்கழகம் |
| 49. | மலபதிதிரணகே சிறிசேன | 27 | 14-08-89 | எம்பிலிப்பிட்டிய வர்த்தகர் |
| 50. | இகல கொடிபிலிகே பிரேமரத்ன | | 4-10-89 | தேசிய கடதாசி கூட்டுத்தாபன ஊழியர் |
| 51. | வண.எம்பிலிப்பிட்டிய சுமங்கள தேரோ | 31 | 9-10-89 | பிக்கு |
| 52. | அபேவர்ணகே சுகததாத | 38 | 19-11-89 | தபால்சேவை ஊழியர் |
| 53. | நம்முனி ஆராச்சிகே ஜயதிலக | 27 | 11-11-89 | ஆசிரியர் |
| 54. | ஜதுங்க குணசேன | 23 | 11-12-89 | மாணிக்க வியாபாரி |
| 55. | பதிரணகே அனில் பேரேரா | 25 | 18-12-89 | - |
| 56. | பொடிஅப்புஹாமி விக்கிரமகே | 49 | 19-12-89 | விவசாயி |
| 57. | எச்.யு.சந்திரலால் | 24 | 24-12-89 | - |
| 58. | விஜேசேகர பதிரணகே நந்தசேன | 32 | 26-12-89 | சாரதி |
| 59. | வீரதுங்க சமரவீர | 30 | 07-01-90 | |

1,2,3,,22,24,32,34,,46 இலக்கங்களையுடைய இம்மாணவர்கள் மேற்படி முகாமில் அடைத்து வைக்கப்பட் பின்னர் விடுவிக்கப்பட்ட டி.ஸ்டிபன் கூறியுள்ளார்.( இவர் மேற்படி அட்டவணையில் 15வது நபரின் தகப்பன்.) மகன் பிடிக்கப்பட்ட ஒரு வாரத்தில் இவர் விடுவிக்கப்பட்டார். ஆனால் பின்னர் மகனும், மகனுடன் படித்த ஏனைய நண்பர்களும் விடுவிக்கப்படவே இல்லை எனத் தெரிவிக்கிறார். இவர் எம்பிலிப்பிட்டிய காணாமல் போன பெற்றோர் சங்கத்தின் தலைவர்.

# 15வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் தமிழ் அவைக்காற்று கலைக் கழகம்

# கவிதா நாடக நிகழ்வு

## அவைக்காற்று கலைக் கழகத்தின் புதிய முயற்சி

1978 இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் இப்பொழுது தனது 15வது ஆண்டு நிறைவினை லண்டனிலும் சில ஐரோப்பிய நாடுகளிலும் கொண்டாடுகிறது. எண்பதுகளில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின் வக்கிரமான வளர்ச்சி பலரை நாட்டை விட்டு புகலிடங்களில் தஞ்சமடைய வைத்தது. இந்த நிலை கழகத்திற்கும் ஏற்பட்டது. 1985ல் லண்டனில் தஞ்சமடைந்த எம்மவர் சிலருடன், கழகம் தனது கலைப் பயணத்தினை தொடர்ந்து மேற்கொண்டதன் மூலம் காத்திரமான ரசிகர் கூட்டத்தினை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் வளர்ந்த ரசிகர் கூட்டத்தினை முற்றாக இழந்து லண்டனில் திரும்பவும் முதலிலிருந்தே தொடங்க வேண்டிய நிர்ப்பந்தம் கழகத்திற்கு ஏற்பட்டுள்ளது.



புகலிடத்தில் எமது மொழி, கலாசாரத்தைப் பேணும் அவாவும், சமூகப் பிணைப்பை இறுக்கமடையச் செய்யும் ஆவலும் எம்மவரிடையே ஓரளவு காணப்படுகிறது. சில கலை நிகழ்ச்சிகளும் அவ்வப்போது நடாத்தப்படுகின்றன. இருந்தும் சீரிய கலை வெளிப்பாடுகள் அருகிய நிலையே காணப்படுகின்றன.



ஐரோப்பிய வாழ்க்கையின் இயந்திரச் சூழலில் இருந்து தப்பித்துக்கொள்ள நாம் பெருமளவுக்கு தென்னிந்திய திரைப்பட மாயைகளிலும், அதற்கு ஒப்பான இந்நாட்டின் சீரழிந்த கலாசாரத்திலுமே தஞ்சமடைகிறோம். இவற்றின் தொடர்ந்த ஆதிக்கம் எமது பிரக்ஞையையும், சிந்தனையும் மழுங்கடிக்கச் செய்கிறது. இதனால் சுயமான கலை நிகழ்ச்சிகள் கூட இவ்வகையில் அமைந்துவிடுவது கவலைக்குரியதே.

தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் இலங்கையில் இயங்கி வந்த காலத்திருந்தே இச்சீரழிந்த கலாசாரப் போக்குகளிற்கு எதிராக குரல் கொடுத்து, சீரிய பல நாடகங்களை மேடையேற்றி காத்திரமான ரசிகர் குழாமை உருவாக்குவதில் வெற்றியும் கண்டு வந்துள்ளது.

புகலிட வாழ்வு தரும் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக கலை ஆர்வம் கொண்ட பலரும் ஒதுங்கி விடுகிறார்கள். ஊதியம் எதிர்பார்க்காமல் கலைப்பணிக்கு முன் வருபவர்கள் மிக மிகக் குறைவே. இப்படியான நெருக்கடிகளிலும் எந்தவிதமான அரசாங்க நிதி உதவியும் இன்றி, சுயாதீனமாக, அரசியல் கட்சி சார்பற்று முழுக்க முழுக்க தமிழ் மக்களின் ஆதரவுடன் கழகம் இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் பல்வேறு நாடக வடிவங்களையும், பிறமொழி நாடகங்களையும் வெவ்வேறு சமூக அரசியல் பிரச்சினைகளையும் உள்ளடங்கிய நாடக்ங்களை தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தி உள்ளது. அந்த வகையில் உலகப் புகழ் பெற்ற நாடகாசிரியர்களான அன்ரன் செக்கோவ், பேட்டோல்ற் பிறெஃக்ட், ரென்னஸி வில்லியம்ஸ், அயனெஸ்கோ, கார்சியா லோர்க்கா, அலெக்சி அபுசோவ், வஸ்லாவ்-ஹவெல் ஆகியோரது நாடகங்களையும், சிறந்த இந்திய நாடகாசிரியரான பாதல் சர்க்கார், கிரிஸ் கர்னாட், மோகன் ராகேஷ், ரஞ்சித்ராய் சௌத்தி, இந்திரா பார்த்தசாரதி, ந.முத்துசாமி ஆகியோரது நாடகங்களையும் தயாரித்தளித்துள்ளது.

அத்துடன் லண்டனில் தமிழ் சிறார்கள் மத்தியில், சிறுவர்களுக்கான நாடகத்தை அறிமுகப்படுத்தி அவர்களுக்கு தமிழின் பாரம்பரிய கலை மரபை எடுத்துச் சொல்லக் கூடியனவாகவும், ஆங்கிலச் சூழலில் வளரும் சிறார்களுக்கு தமிழ் மொழிலை சரளமாகவே பேசி காத்திரமான தமிழ்க்கலாசாரச் சூழலில் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தும் வகையிலும் நமது பாரம்பரிய நாட்டுக்கூத்து, நாட்டார் இசை ஆகியவற்றுடன் இணைந்த நாடகங்களான, மௌனகுரு எழுதிய தப்பி வந்த தாடி ஆடு, வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள், நம்மைப் பிடித்த பிசாசுகள் போன்ற சிறுவர் நாடகங்களை அவைக்காற்று கலைக்கழகம் மேடையேற்றி வெற்றியும் கண்டுள்ளது.

தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் இதுவரை 54 மேடையேற்றங்களை லண்டனில் நிகழ்த்தி உள்ளது. அவை யாவன மழை, பார்வையாளர்கள், பசி, எரிகின்ற எங்கள் தேசம், (கவிதா பாடக நிகழ்வு) யுகதர்மம், சம்பந்தம், முகமில்லாத மனிதர்கள், பலி, இடைவெளி, பாரத தர்மம், மன்னிக்கவும், திக்குத் தெரியாத காட்டில், இருதுயரங்கள், வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள், தப்பிவந்த தாடி ஆடு, நம்மைப்பிடித்த பிசாசுகள், கானசாகரம் (மெல்லிசை) ஆகும். இவற்றில் மன்னிக்கவும் பாரததர்மம், எரிகின்ற எங்கள் தேசம், பார்வையாளர்கள் ஆகிய நாடகங்கள் தவிர ஏனைய அனைத்தும் இலங்கையில் ஏற்கனவே மேடையேற்றப்பட்டவையே.

இவை பற்றிய சுருக்கமான அறிமுகம்; மன்னிக்கவும் என்கிற நாடகம் பிரத்தியேக காட்சி, தரிசனம் என்கிற இருபகுதிகளாக, ஆனால் ஒன்றுடன் ஒன்று தொடர்ப பட்டதாகவே மேடையேற்றப்பட்டன. செக்கோஸ்லாவாக்கியாவின் ஜனாதிபதியாக இருந்த வஸ்லாவ் ஹாவெல் (தமிழில் - மணி) என்கிற சிறந்த இலக்கிய கர்த்தாவினால் எழுதப்பட்டது. இந்நாடகம், ஒரு சுயாதீனமான எழுத்தாளரின் ஆளுமையை ஆன்மாவை ஒரு ஒடுக்குமுறை அமைப்பு அழிக்க முயலும் அவலத்தினை கூறும், நாடகங்களாக "மன்னிக்கவும்" எனும் பொதுத் தலைப்பில் இவை மேடையேறின. ஒடுக்குமுறை அமைப்பின் வக்கிரத்தையும், அந்த எழுத்தாளனைச் சூழ்ந்திருக்கும் ஊழல்களையும் சுவாரசியமாக அம்பலப்படுத்தும் இந்த நாடகங்கள், நாடக ஆசிரியரின் சுயசரிதைப்பாங்கானவையே. 1970 ல் சோவியத் ஆக்கிரமிப்புக் காலத்தில் ஒரு வடிசாலையில் கூலியாளராக வேலை செய்த ஹாவல், ஆட்சியாளர்களின் தொடர்ந்த அச்சுறுத்தல்களுக்கும் தொந்தரவுகளுக்கும் ஆளாகி நொந்து போன நேர்மையான, மென்மையான அபாயம் கொண்ட எழுத்தாளன் எதிர்கொள்ளும் இரண்டு வெவ்வேறு சம்பவங்களை இந்த நாடகங்களூடாக வெளிப்படுத்தினார். செக்கோஸ்லாவாக்கிய மொழியில் இந்த நாடகங்களின் மூலம் எழுதப்பட்டு இருந்தாலும் இதில் வரும் பாத்திரங்கள் எம்மவர்க்கும் ஏற்புடையன. இப்பாத்திரங்கள் பகிர்ந்து கொள்ளும் நகைச்சுவையும், சந்தேகங்களும், பயங்களும், எதிர்பார்ப்புகளும், மனித உணர்வுகளும் எமக்கு அன்னியமானவை அல்ல - சிறப்பாக ஒடுக்குமுறை நிலவும் எந்த அமைப்புக்கும் இவை பொருந்தும்.



பிரபல வங்கமொழி நாடக ஆசிரியரான ரஞ்சித்ராய் சௌத்திரியினால் பாரத தர்மம் எழுதப்பட்டது. இதன் தமிழ் மூலம் ஞானியால் எழுதப்பட்டு மேடையேறியது. உலகிலே தர்மநெறி தவறாத மாபெரும் மன்னனென எல்லோராலும் அழைக்கப்பட்ட, பஞ்சபாண்டவர்களின் மூத்த அண்ணன் தருமன் தாம் துரியோதனின் வஞ்சக வலை

### சாருகேசி

யிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, ஒரு அப்பாவிச் சண்டாளக் குடும்பத்தினரை அரக்கு மாளிகைக்கு விருந்துக்கு அழைப்பித்து, விருந்து முடிந்து அவர்கள் உண்ட களைப்பில் கண்ணயர்ந்த வேளையில், அவ்வரக்குமாளிகையை அக்கினித்தேவனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, தாம் சுரங்கப்பாதை வழியாக தப்பித்துவிடுகிறார்கள். பின்னர் இச்சண்டாளக் குடும்பத்தினை தேவலோகத்திற்கு செல்லும் வழியில் சந்திக்கிறார்கள். அச்சண்டாளக் குடும்பம் தருமரை நோக்கி, யுதிஸ்திரா நீயுமா இப்படி செய்கிறாய் என்று கேட்டதற்கு, இது தர்ம தேவனின் முடிவு. இது சத்தியத்தின் முடிவு, தான் வெறும் கருவி என்று மட்டும் தான் பதிலளிக்கிறான்,

எரிகின்ற எங்கள் தேசம் "கவிதா நாடக நிகழ்வுகள்" இது கவிதா நிகழ்விலிருந்து முற்றிலும் வேறுபட்டது. ஈழத்து கவிஞர்களான மகாகவி, சிவசேகரம், பொன்னம்பலம், முருகையன், குறிஞ்சித்தென்னவன், யேசுராசா, நுஃமான், வாசுதேவன், சண்முகம் சிவலிங்கம், இளவாலை விஜயேந்திரன், சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், செழியன், கௌதமன், நீலாவணன், நிர்மலா, அனிச்சா, சங்கரி, சிவரமணி, மைத்திரேயி, புவனம், சோலைக்கிளி, மல்லிகா போன்றோர்களால் வெவ்வேறு காலகட்டத்தில் எழுதப்பட்ட கவிதைகளை நாடக வடிவில் தொகுத்து, அதற்கு இசைவடிவமும் கொடுக்கப்பட்டிருந்தது. இக்கவிதா நாடக நிகழ்வு இதுவரை 20 மேடையேற்றங்களைக் கண்டுள்ளது. "தோழரே துப்பாக்கியை உயர்த்தும்..." என்கிற ஆரம்ப வரியையுடைய கவிதை பல மக்களின் மனதில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்தது. லண்டனில் சில காலம் இருந்த 'தளபதி' ஒருவரின் மனதில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்திவிட்டதாக அவரே தனது வாய்மொழி மூலம் அக்கவிதா நாடக நிகழ்வில் பங்குபற்றிய கலைஞர்களிடம் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் வேறு சிலர் அக்கவிதையினை எடுத்துவிட்டு நாடகத்தினை மேடையேற்றினால் இன்னும் நன்றாக இருக்கும் எனக் கூறி இருந்தனர். இக்கவிதா நாடக நிகழ்வின் மேடை உத்திகள், ஒளியமைப்பு, பாடல்கள், இடையிடையே வந்து போகும் ஓவியங்கள் யாவுமே இக்கவிதா நாடக நிகழ்விற்கு நன்கு மெருகூட்டியிருந்தது. மேலும் இப்படியொரு கவிதா வடிவினை தமிழ் நாடக உலகிற்கு முதன் முதலில் தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் தான் அறிமுகப்படுத்தியிருந்தது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

மேலும், லண்டனில் இந்திய சினிமா பாடல்களும் கர்நாடக சங்கீதமும் அடிக்கடி மேடைகளில் இசைக்கப்பட்டு வருகின்றன. சொந்தமான இசையமைப்பில் எம்மவர்கள் பாடுவது குறைவு. பொதுவாக கர்நாடக இசை அறிவு உள்ளவர்கள் பலர் ஆக்கபூர்வமான மெல்லிசைத்துறையில் தீவிரமாக ஈடுபடுவது இல்லையென்றே கூறலாம். ஈழத்து கவிஞர்களான மகாகவி, நீலாவணன், சிவசேகரம், சண்முகம் சிவலிங்கம், நிர்மலா, வாசுதேவன், மு.நித்தியானந்தன் ஆகியோரது பாடல்களுக்கு இசை அமைத்து "கானசாகரம்" என்ற நிகழ்ச்சியினையும் தயாரித்து இசைத்துள்ளனர். வளமான சாஸ்திரீய கர்நாடக சங்கீத மரபும் செழுமை மிகுந்த நாட்டார் இசை மரபும் கொண்ட எங்கள் மத்தியில் மெல்லிசை மலினப்படுத்தப்பட்ட ஒன்றாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. மெல்லிசைப் பாடல்கள வார்த்தைகள் முக்கியம் பெறுகின்றன. சமூக உணர்வுடன் கவிஞன் சொல்லவரும் செய்திக்கும் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. பாடல் சொல்லவரும் செய்தியை ரசிகனுக்கு சுவையாக சொல்கிற சூழல் இசையினால் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. பாடல் சொல்லவரும் செய்தியை ரசிகனுக்கு சுவையாக சொல்கிற சூழல் இசையில் ஏற்படுத்தப்படுகிறது. வளமிக்க எமது நாட்டார் இசையிலிருந்து இன்றைய தேவைகளுக்கு இயைய பரீட்சார்த்தமான இசை வடிவங்களை உருவாக்குவதன் மூலம் தான், நவீன தமிழ் இசையின் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பவர்களாவோம். இக்கானசாகரத்தில் இடம் பெற்ற "ஓ ...வண்டிக்காரா" பாடல் மா.சத்தியமூர்த்தியின் குரலில் இன்றும் இலங்கை வானொலியில் இசைக்கப்படுகிறது. எழுபதுகளிலிருந்து தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்துடன் பாடிவரும் மா.சத்தியமூர்த்தியுடன், குகனேஸ்வரி நித்தியானந்தனும் சேர்ந்து இப்பாடல்களைப் பாடி இருந்தனர்.

இவை தவிர உலகப் புகழ்பெற்ற நடன அமைப்பாளரான "அடம்டேரியஸ்" என்பவரின் நடன, நாடக பயிலரங்கம் (Work-Shop) 1993 ஜூனில் லண்டனில் ஈஸ்ராம் என்கிற இடத்தில் நடைபெற வழிவகுத்தனர்.

அத்துடன் 1993 செப்ரம்பரில் தமிழ் நாட்டு முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவரான சுந்தரராமசாமியுடனான இலக்கிய சந்திப்பினை லண்டனில் வோல்தம்ஸ்ரோ கொமினிற்றி சென்றரில் நடத்தி இருந்தனர்.

மேலும் எதிர்வரும் 2ந் திகதி தொடக்கம் 10ம் திகதிவரை சுவிற்சாந்திலுள்ள BERN, ZURICH, ST.GALLEN, LAUSANNA, CHUR, LUGANO ஆகிய நகரங்களில் நாடக விழாக்களினையும் நடத்த உள்ளனர். இதில் மேற்குறிப்பிட்ட நாடகங்களுடன் மாவை நித்தியானந்தன் எழுதிய "ஐயா இலச்சன் கேட்கிறார்" ஆங்கில மொழி மூலம் "கரோல் பின்னர்" எழுதிய (தமிழில் மணி) "போகிற வழிக்கு ஒன்று" ஆகிய புதிய நாடகங்களும் இடம் பெற உள்ளன.

"ஒடுக்கு முறை நிலவும் அமைப்பில் சித்திரவதைக்குட்படும் ஒரு அப்பாவிக் கைதியும் அவரது மனைவியும் மகனும் மாறி மாறி வேதனைக்குட்படுத்தப்படுவதை "போகிற வழிக்கு ஒன்று" சித்திரிக்கிறது.

# இயக்க மோதல்களால் இழுபட்ட போராட்டம்!

## எரிட்ரியா இன்றொரு தனிநாடு!!

தற்கால ஆபிரிக்க வரலாற்றிலேயே மிக நீண்டகால ஆயுதப் போராட்டத்தைச் சந்தித்த நாடு எதியோப்பியா என்றால் அதற்கு முதன்மைக்காரணம் எரிட்றியாவின் பிரிவினைப் போராட்டமேயாகும். குடியேற்றவாதத்தின் நேரடி விளைவுகளுள் ஒன்றாக உருப்பெற்ற ஆயுதமோதல் முப்பது வருடங்களின் பின்னரேயே முடிவுக்கு வந்தது. எனது முன்னைய கட்டுரைகளில் சிறுபான்மையினர் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அவற்றைத் தீர்ப்பதில் அரசுக்கும் போராட்டக் குழுக்களுக்கும் பொருத்தமான படிப்பினைகளைத் தொட்டுக்காட்ட முனைந்தேன். ஆனால் இக்கட்டுரையில் கூடுதலாக இயக்கமோதல்கள் பற்றிய தகவல்களையும் எப்படிப் போராட்டம் இழுபறிப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எரிட்றியாவின் போராட்டத்துக்குப் பல்வேறு பரிமாணங்கள். குடியேற்றவாதம், மத,இன ஒற்றுமை வேற்றுமைகள், பிராந்தியவாதம் பூகோளரீதியிலான கேந்திர முக்கியத்துவத்துக்கான போட்டிகள் அத்துடன் அரசியலில் சிந்தாந்த வேறுபாடுகள் என ஏகப்பட்டவற்றின் மொத்த வடிவமாக நடைபெற்ற போராட்டமே இது. எரிட்றிய மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடத் தொடங்கி நடுவிலே எல்லாவிதமான சிக்கல்களிலுஞ் சிக்கித் தட்டுத்தடுமாறி இறுதியில் இலக்கை அடைந்துவிட்ட போராட்டம் இது. போராட்டக் குழுக்கள் மட்டுமன்றி அவற்றை அடக்கி ஒடுக்க நினைத்த மத்திய அரசாங்கமும் எப்படித் தடுமாறியது என்பதையும் குறிப்பிடுதல் பொருத்தமே. இருதரத்தவர்களும் பலமுறை பல கோணங்களில் அலைக்கழிக்கப்பட்ட வரலாறே ஏராளமான பாடங்களைத் தரவல்லது.

பிரிவினை, சுயநிர்ணய -உரிமைப் பிரயோகம் என்பவற்றின் அடிப்படையாக அமையும் சுதந்திரம் என்பதே எமது ஒரேயொரு குறிக்கோளாக இருந்தால் அதனைக் கட்டாயம் பிரிவினை மூலந்தான் பெறவேண்டுமென்பதல்ல. அதாவது பெயர்களில் ஏதேனும் பெரிதான சாதனைகள் ஏற்படுவதில்லை. அனுபவிக்கப் போகும் உரிமைகளே உண்மையான சாதனைகளாக அமைய முடியும். இந்த அடிப்படையிலேயே ஒவ்வொரு போராட்ட வரலாறும் இயக்க வரலாறும் அணுகப்பட வேண்டும். குடியேற்றவாத நாடுகளின் விளையாட்டு அரங்காகத் திகழ்ந்த ஆபிரிக்கக் கண்டத்தின் துர்திஷ்டமிக்க நாடுகளில் ஒன்றான எதியோப்பியாவிலும் இந்த அணுகுமுறையைக் கவனிக்க வேண்டும். எரிட்றிய மக்களின் போராட்டத்தை நசுக்குவதாகக் கூறிக் கொண்டு எதியோப்பிய மக்கள் சர்வாதிகார ஆட்சியின் கீழ் சந்தோஷமாக வாழப்பழகிக் கொண்டார்கள். ஒருவரின் சுதந்திரத்தைப் பறிப்பதற்கு தனது சுதந்திரத்தை அடகு வைத்தல். இதுதான் இன்றுந் தொடரும் அரசியல்.

### துரோகந் தொடங்கிய கதை

குறுநில ஆட்சியாளர்களின் கீழிருந்து வந்த எரிட்றியா 1896 இல் இத்தாலியினால் கைப்பற்றப்பட்டது. 1938 இல் முசோலினி எதியோப்பியாவைக் கைப்பற்றியதன் மூலம் அபிசீனியப் பேரரசு குலைந்து புதிய அத்தியாயம் ஆரம்பமானது. சோமாலியா, சூடான், யெமன் போன்ற நாடுகளிலும் இந்த அத்தியாயம் சலசலப்பை ஏற்படுத்தத் தவறவில்லை. எதியோப்பியா 1941 இல் பிரிட்டிஷாரினால் விடுவிக்கப்பட்டது. வழக்கம்போலவே வெற்றியாளர்களினால் நாடு மீணடும் துண்டுபோடல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. 1941 -1952 வரை பிரிட்டனின் இராணுவப் பிடிக்குள் சிக்கியிருந்தது எரிட்றியா. எரிட்றியாவின் பரப்பளவு 50,000 சதுரமைல். செங்கடலின் கரையோரம் அமைந்திருக்கும் பிரதேசம் என்பதனால் தான் இத்தனை இழுபறிகளும். 500 மைல் நீள கடற்கரையைக் கொண்ட பிரதேசம். எரிட்றியா என்ற பெயரே 'செங்கடலோரம்' என்ற பொருள் கொண்டதாம்.


ஆக, 1896 க்கு முன்பு எரிட்றியா என்ற பிரதேசம் திட்டவட்டமான எல்லைகள் அமைப்பு விதிமுறை, கட்டுக்கோப்பான ஆட்சிமுறை என்று எவற்றையுமே கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. இத்தாலியக் குடியேற்றவாதிகள் திறமான முறையில் இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்தனர். 1941 இல் பிரித்தானியர் இதனைக் கைப்பற்றிச் சுயாதீன ஆட்சியை உறுதிசெய்தாலும் அதனுடைய எதிர்காலத்தை ஐ.நா.வின் பொதுச்சபையிடம் விட்டுவிட்டனர். எப்படியென்றாலும், இத்தாலி தொடர்ந்தும் எரிட்றியா மீதான தனது அக்கறையை வெளிக் காட்டியபடி இருந்தது. 1952 இல் பொதுச்சபை தீர்மானித்ததன்படி எரிட்றியா, எதியோப்பியாவுடன் -சுயாட்சிப் பிரதேசம் என்ற அந்தஸ்தில் இணைக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் எரிட்றியாவில் மூன்று கட்சிகள் தோன்றியிருந்தன. சுதந்திரக் குழு (இது இத்தாலியின் ஆதரவுடையத்), யூனியனிஸ்ட்கட்சி (எதியோப்பியாவுக்கு ஆதரவான கிறிஸ்தவர்களால் தொடக்கப்பட்டது), முஸ்லீம் லீக் (இதனுடைய பிரதான தளம் மேற்கு எரிட்றியா ). 1962 இல் எதியோர்ப்பியா மன்னரின் தந்திரத்தினால் எரிட்றியச் சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு (கூலிக்கு விலைபோன உறுப்பினர் வாக்குகளால்) எரிட்றியா எதியோப்பியாவின் 14வது மாகாணமாக ஆக்கப்பட்டுவிட்டது. மக்கள் கொதித்தனர். மக்களுடைய விருப்பின்றி இணைக்கப்பட்டமை ஒரு தவறு. அத்துடன் ஐ.நா.வின் உடன்படிக்கைகளைத் தன்னிச்சையாகவும் மீறிவிட்டது எதியோப்பியா.

எரிட்றியாவின் தேசிய மொழி ரிக்ரின்யா. ஆனால் இதே மொழி பேசும் மக்கள் அண்டை மாகாணமான ரிக்ரேயில் கூடுதலாக உள்ளார்கள் எரிட்றியா என்பது இனரீதியான அடையாளம், ரிக்ரே மக்களும் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடத் தொடங்கியுள்ளார்கள். ஆனால், பட்டினிச் சாவுக்குப் பெயர்போன மாகாணம் என்பதால் இங்கு 'அரசியற் சாவு' இரண்டாம் இடத்திலேயே எப்போதும் இருந்து வருகிறது. ஆனாலும் அவர்கள் எரிட்றியாவிலிருந்து எழுச்சியைக் கற்றுக் கொண்டுள்ளார்கள் எனலாம்.

ரிக்ரின்யா மொழி எரிட்றியா மக்களின் பொதுமொழி என்றாலும் எல்லைப்புற நாடுகளில் இருந்து வந்து போவோரின் செல்வாக்குக்குட்பட்ட மொழிகளும் இங்கு பேசப்படுகின்றன. தற்போதைய மக்கள் தொகையை அண்ணளவாக 15 இலட்சம் எனக்கூறலாம். இவர்களில் சரி அரைப்பங்கினர் கிறிஸ்தவர்கள். மிகுதிப்பேர் முஸ்லீம்கள். கிறிஸ்தவர்கள் ஆரம்பத்தில் எரிட்றியா பிளவுபடுவதை விரும்பவில்லை. இவர்கள் எதியோப்பியாவுக்கு விசுவாசமாக இருந்ததுடன் எரிட்றியா புதிய நாடானால் அது முஸ்லீம் நாடாகி விடும் - அங்கு தாம் சிறுபான்மையாகி விடுவோம் என்ற ஐயமும் கொண்டிருந்தனர். சுற்றிவர முஸ்லீம்களால் சூழப்பட்ட நாடாக எதியோப்பியா இருக்கக் கூடாதென்பது இவர்களது விருப்பு.

எதியோப்பியாவின் மொத்தச் சனத்தொகையில் எரிட்றியர்கள் 10% வீதங்கூட இல்லை. இந்தப் பத்து வீதத்திலும் சரியாக அரைப்பங்கினர் முஸ்லீம்கள்/ கிறிஸ்தவர்கள் என்பதால் தனிநாடு காண்பதைவிட ஒருவிதமான சமஷ்டி அல்லது கூட்டமைப்பு உருவாக்குவதே சாத்தியமும் புத்திசாலித்தனமும் என அரசியல் அறிஞர்கள் தொடர்ச்சியாகக் கருத்துத் தெரிவித்தனர். இதற்கு முக்கிய காரணங்கள் உண்டு. எதியோப்பியாவைக் கடலுடன் இணைக்கும் ஒரேயொரு வழி எரிட்றியாவினூடாகவே தான் அமைய முடியும். புகழ்பெற்ற இரு துறைமுகங்களான அஸ்மராவும் மஸ்ஸாவாவும் எரிட்றியாவில் தான் அமைந்துள்ளன. ஆக, எரிட்றியா விலகிப்போனால் எதியோப்பியாவுக்கு கடலை அணுக முடியாது. எரிட்றியாவிடம் இரந்து நிற்க வேண்டும். எனவே என்ன விலை கொடுத்தேனும் துறைமுகங்களைக் காக்க வேண்டிய கட்டாயம் எதியோப்பியாவிற்கு இருந்தது.

எரிட்ரியா




### ஏன் வேண்டும் பிரிவினை

முன்னரே குறிப்பிட்டதைப் போல எரிட்றியா மக்கள் 10% கூட முழுத் தொகையோடு ஒப்பிட்டால் தேறமாட்டார்கள் என்றாலும் 50 வருட கால இத்தாலியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தவர்கள் என்பதால் உள்நாட்டு எதியோப்பியரை விடப் பலவிடயங்களில் முன்னேறியிருந்தனர். கல்வி, கலாசாரம், பொருளாதாரம், என்ற மூன்று துறைகளிலும் இவர்கள் சராசரி எதியோப்பியரைவிட எப்போதும் முன்னணியில் இருந்தனர். உதாரணமாக, 1941 -1966 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மத்திய அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் 138 பேரில் 19 பேர் எரிட்றியராவர். வேறெந்த இனக் குழுவுக்கும் இந்தளவு தொகையினர்

**சிசைரோ**

இருக்கவில்லை. பேரரசர் தனது சொந்த இனமான சோகான்அம்கராவிலிருந்து கூட இத்தகைய எண்ணிக்கையினரை நியமிக்கவில்லை. மேற்சொன்ன 19 பேரில் மூவர் மட்டுமே முஸ்லீம்கள். இதனால்தான் முஸ்லீம்கள் பிரிவினையை ஆதரிக்க, பிளவுபடாத எதியோப்பியாவினுள் தமக்கு வாய்ப்புகள் அதிகம் எனக் கருதி கிறிஸ்தவர்கள் மத்திய அரசாங்கத்தை ஆதரித்தனர்.

எமது முன்னைய ஆய்வின் படி - எரிட்றியாவின் இந்தப் போராட்டத்தை எந்த வகுப்பினுள் அடக்குவது? எதியோப்பியாவை முழுமையாக எடுத்தால் எரிட்றியா வளத்தில் ஏனையவற்றை விட ஒருபடி மேல். துறைமுக நகரங்களினாலும் கல்வி வளர்ச்சிபெற்ற சமூகத்தினாலும் எரிட்றியா -முன்னேறிய,பிரதேசம் என்று கணிக்கப்பட வேண்டும். ஆயின் முன்னேறிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு அவர்களுக்குத் தேவையான வசதிகள் பிளவுபடாத நாட்டில் கிடைக்கக் கூடியதாக இருக்கும் போது, பிரிவினை ஏன் அவசியமாகிறது? தாங்கள் ஒரு போதுமே எதியோப்பியாவின் ஒரு பகுதியினராக வாழ்ந்ததில்லை என எரிட்றியர் கருதுவது ஒரு புறம் இருக்க, துரோகத்தனமான முறையில் தாம் ஒன்றிணைக்கப்பட்டதாகக் கருதுவதனால் ஏற்பட்ட கொதிப்புமே அவர்களைப் பிரிவினை கோரிப் போராடத் தூண்டியது.

மறுபுறத்தில், முஸ்லீம்கள் எதியோப்பியாவில் தமது நலன்கள் பாதுகாக்கப்படவில்லை எனக்கருதியமையும் எரிட்றியாவுக்குள்ளேயே தாம் பின்தங்கிய பிரிவினர் என நினைத்தமையும் போராளிக் குழுக்களில் முஸ்லீம்களின் வீதாசாரத்தை அதிகரிக்கச் செய்தது. கிறிஸ்தவர்களைப் பொறுத்தளவில் அவர்களுக்குச் சமத்துவம் எதியோப்பாவினுள் கிடைத்தாலுஞ்சரி - எரிட்றியாவினுள் கிடைத்தாலுஞ்சரி அனுசரித்துப் போகத் தயாராக இருந்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் எதியோப்பியாவுடன் இணைவதையும் மறுபகுதியினர் 1952 இல் இருந்தவாறான கூட்டாட்சி முறைமைக்குட்பட்ட கூட்டமைப்பையும் ஆதரித்து நின்றனர்.

எதியோப்பாவில் மன்னராட்சி 1974 இல் முடிவுக்கு வந்தது. பரம்பரையாட்சி என்ற கோட்பாட்டின்படி கடைசியில் ஆட்சியில் இருந்தவர் ஹெய்லே செலாஸை. இவர் இராணுவச் சதிமூலம் கவிழ்க்கப்படும்வரை அமெரிக்காவின் கைப்பொம்மையாகவும் இஸ்ரேலின் நெருங்கிய நண்பராகவும் இருந்தார். அமெரிக்காவுக்கு தேவைப்பட்ட தொலைத்தொடர்பு நிலையங்கள் அஸ்மராதி துறைமுகத்துக்கு அண்மையில் நிறுவப்பட்டன. இது மன்னரின் உபயமேயாகும். இந்த வகையில் எரிட்றியர்கள் சோசலிஸ நாடுகளின் உதவிகளைப் பெறத்துணிந்தனர். இதன் பரிமாணத்தை இன்னோரிடத்தில் பார்ப்போம். ஆனால், பிரிவினைக் கோரிக்கை மும்முரமடையக் காரணமான அடக்குமுறை ஆட்சியை, மன்னர் எரிட்றியாவில் மட்டுமன்றி நாட்டின் வேறு ஐந்து பகுதிகளிலும் எதிர்நோக்கிய கிளர்ச்சிகளைக் காரணம் காட்டி நியாயப்படுத்தினார். பெரிதாக ஜனநாயகம் பேசும் மேற்குலக நாடுகள் மன்னருக்குப் பக்கபலமாக நின்று கொண்டன. அதிருப்தி வளரக் கேட்கவா வேண்டும்? கிளர்ச்சிகள் தொடர்ந்தன.

### இயக்க மோதல்கள் என்றுமே உள்ளவையா?

1952 இல் எரிட்றியா கூட்டாட்சி அமைப்புக்குள் கொண்டு வரப்பட்டதிலிருந்து ஆரம்பித்த விரக்தியும் வெறுப்பும் 1962 இல் உச்சக்கட்டத்தை அடைந்தன. சமஷ்டி அமைப்புகள் யாவும் கலைக்கப்பட்டன. பத்திரிகை, தொழிற்சங்கம், அரசியற் கட்சிகள் யாவும் படிப்படியாகத் தடை செய்யப்பட்டன. 1945-46 இல் நடைபெற்ற மகாநாடுகளில் எதியோப்பியா தனக்கு எரிட்றியாவில் உரிமை உண்டென வலியுறுத்தத் தொடங்கியது. மறுபுறத்தில் வளர்ந்து வரும் அரபுத் தேசியவாதத்தினால் எரிட்றியா விழுங்கப்பட்டு விடுமோ என்ற அச்சமும் மேற்குலகில் இருந்தது. ஆரம்பத்தில், மஸ்ஸாவா துறைமுகத்துக்கு எகிப்து உரிமை கோரியிருந்தமையும் கவனிக்கப்பட வேண்டும். இந்த அச்சங்களோடு 1952 இல் எரிட்றிய சட்டசபைக்குத் தேர்தல் நடந்த போது மொத்தம் 15 கட்சிகள் உருப்பெற்றிருந்தன. ஆனால் இவற்றுள் சில எதியோப்பியா, இத்தாலி என்பவற்றின் கைப்பாவைகள் என்பதையும மறைப்பதற்கில்லை.

ஐ.நா.வில் எரிட்றியா விவகாரம் எடுக்கப்பட்ட காலகட்டத்தில் அமெரிக்கா கொரிய யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது. அமெரிக்காவும் அதன் அணியினரும் கூட்டாட்சி அமைப்பைத் தீர்வாக முன்வைத்தனர். ஆனால் சோவியத் அணியினர் பூரண சுதந்திரத்தை வலியுறுத்தினர். அதாவது எரிட்றிய இறைமையுள்ள தனிநாடாக வேண்டுமென ஐ.நா.வில் கூறிய இதே சோவியத்தான் பின்னர் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதிமிக்க ஆயுதங்களை எதியோப்பியாவுக்கு வழங்கி எரிட்றியா மக்களைக் கொன்று குவிக்க வழி செய்தது. கூட்டாட்சி சிபார்சு அமுல்படுத்தப்பட்டுச் சட்டசபை உருவான போது முதன்முறை தெரிவான 68 பேரில் கிறிஸ்தவ, முஸ்லீம் மதத்தினர் சரிபாதியாக இருந்தனர். அவையின் பிரதான நிர்வாகி கிறிஸ்தவர். ஆனால் அவையின் தலைவர் முஸ்லீம் லீக்கின் உறுப்பினர். 1956 இல் இரண்டாவது தேர்தல் நடந்த போது மத்திய அரசிற்கு எதிராக ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள். இதனால் மேற்கூறிய இரு நிர்வாகிகளும் ராஜினாமாச் செய்தனர். மன்னர் புதிய ஆட்சியாளரை நியமித்தார். இக்காலகட்டத்தில் தான் கிறிஸ்தவ, முஸ்லீம் பிரிவினர் மன்னரின் சர்வாதிகாரத்தை எதிர்ப்பதில் ஒன்றுபட்டனர். மத்திய அரசுக்குச் சார்பானவர்களுக்குச் சலுகைகளும் பிரிவினைவாதிகளுக்கு அடக்குமுறையும் சித்திரவதையும் பரிசுகளாகக் கிடைத்தன. அமைப்புச் சீர் குலையத் தொடங்கியது. எதியோப்பியாவின் ஏனைய பகுதிகளிலிருந்த குழப்பமும் கிளர்ச்சிகளும் எரிட்றியாவையும் ஆட்கொண்டன.

எதிர்க்கட்சித் தலைவர்கள் கெய்னோவில் அடைக்கலம் புகுந்தனர். 1956 இல் கெய்ரோவிலிருந்து ஒலிபரப்புச் சேவையை நடாத்த எரிட்றியத் தலைவர்களுக்கு எகிப்திய ஜனாதிபதி அப்துல் நாசர் அனுமதி வழங்கினர். மாணவர்கள், தொழிலாளர்கள் அணிதிரண்டனர். ஏற்கனவே தொழிற்சங்க வளர்ச்சி எரிட்றியாவில் முன்னேற்ற நிலையிலிருந்தது. (இதற்கு துறைமுகங்கள், கல்வி வளர்ச்சி காரணமாகும் ) தொழிலாளர் தலைவர்கள் செல்வாக்குடன் உயர்ந்தனர். இத்தாலிய கம்பனிகள் படிப்படியாக நாட்டை விட்டு

→




## ஆயுதமேந்திய குழுக்களால் கடத்தல்

இராணுவம், பாதுகாப்புப்படையின் சில பிரிவுகள் கொழும்பில் சில ரகசிய இடங்களில் வதைமுகாம்களை வைத்து நடாத்துவதாக சர்வதேச மன்னிப்புச் சபைக்குறிப்பு ஒன்று குற்றம் சாட்டுகிறது. ஆயுதமேந்திய குழுக்களால் கைது செய்யப்படும் தமிழர்கள் கண்கட்டப்பட்ட நிலையில் கடத்திச் செல்லப்பட்டு இத்தகைய இடங்களில் வைத்து விசாரிக்கப்படுவதாகவும், புலிகளுடன் தமக்கு தொடர்பு இருப்பதாக ஒப்புக் கொள்ளுமாறு வற்புறுத்தப் படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் யார் எனத் தம்மை இனம் காட்டிக் கொள்வதில்லை என குறிப்பிடும் மன்னிப்புச் சபை அறிக்கை இவற்றுக்கு அரச படைகளே காரணமாக இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கிறது.

கொள்ளுப்பிட்டியில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கும், அமெரிக்க தகவல் தொடர்பு நிலையத்திற்கும் பின்னால் உள்ள ஒரு இரகசிய முகாம் ஒன்றில் பல தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளதாக அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

இதுதவிர, சில சலுகைகள் இராணுவ உளவுப்பிரிவுத் தலைவரின் கீழ் இயங்கும் விசேட நடவடிக்கை பிரிவினால் (இதற்கு நேரடியாக N.I.B தேசிய புலனாய்வுத்துறையுடன் தொடர்பிருக்கிறது.) நடத்தப்பட்டுள்ளதாகவும் இப்பிரிவு கொழும்பில் பொலிஸ் ஒத்துழைப்புடன் இயங்கி வருவதாகவும் தெரிய வருகிறது. இவற்றில் அங்கம் வகிக்கும் சிலர் P.L.O.T யின் உறுப்பினர்கள் எனவும், இவர்கள் றர்கம புகையிரத நிலையத்திற்கு அருகில் வனவாசல என்னும் இடத்தில் ஒரு வீட்டைத் தமது அலுவலகமாக உபயோகிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் இத்தகைய இரகசிய தடுப்புக்காவல்களில் தமக்கு எவ்வித சம்பந்தங்களும் கிடையாது எனவும் இத்தகைய சட்டவிரோத கைதுகளைச் செய்பவை தமிழ்க் குழுக்களே எனவும் கூறுகிறது. ஆனால் இராணுவ பாதுகாப்புச் செயலாளரோ தமிழ்க்குழக்கள் தமக்கு புலிகளை அடையாளம் காட்டுவதில் மட்டுமே உதவி வருகிறார்கள் எனக் கூறுகின்றார் என்றும் மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலைச் சான்றுப்பத்திரம் வழங்கப்படுவதே இல்லை

தனித்துமான தகவல்களின் அடிப்படையில் மட்டும் பொலிஸார் கைதுகளை நியாயப்படுத்துவார்களானால், மீண்டும் கைது செய்வதும், விடுவிப்பதும் என்ற, இவ்வகையான பொருத்தமில்லாத பிரச்சினைகளை பெரியளவில் தவிர்க்கலாம். இவர்கள் ஒரு மனிதனை மீண்டும் கைது செய்யாமல் விடுவதன் மூலமும் NIB, CID, CDB யிடம் அதே அறிக்கையைத் தரும்படி கட்டளையிடாமல் விடுவதன் மூலமும், பொலிஸார் தமது சொந்த வேலைப் பழுவைக்கூட குறைக்க முடியும். பொலிஸார், ''விடுவித்ததற்கான சான்றுப்பத்திரங்களை'' (Release certificates) விநியோகிப்பார்களானால், தேவையில்லாத மீள் கைதுகளைக்கூட, விட்டு விட முடியும்.

யார் ஒருவர் விசாரணையின் பின் விடுவிக்கப்படுகிறாரோ அப்பொழுது, ''இவர் விசாரிக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றார்'' என்ற சான்றுப்பத்திரமும், இத்துடன் விசாரித்தவரதும், விடுவித்தவரதும் விபரங்களும், பொலிஸ் நிலையமும் அடங்கி இருக்க வேண்டும் என்பவற்றுடன் பிரதம மந்திரி, தமிழ் கட்சிகளுடன் 1993 ஜுன் 10ம்திகதி உடன்பாட்டுக்கு வந்தார். கொழும்பு DIGP இதுபோன்ற விடுதலைச் சான்றுப்பத்திரங்கள் விடுவிக்கப்பட்ட தடுப்புக்கைதிகளுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என ச.ம.ச யிடம் கூறினார். எது எப்படியோ இது போன்ற விடுதலைச் சான்றுப்பத்திரங்கள் ஒன்றுதானும் வழங்கப்பட்டதை, ச.ம.சபையால் கண்டு பிடிக்க முடியவில்லை. இவற்றுக்கு முரண்பாடாக பல தடுப்புக்கைதிகளின் பிரச்சினைகளில் அவர்களால் விடுதலைச் சான்றுப் பத்திரம் கேட்ட போது அது சாத்தியமில்லை. ஏனெனில் அப்படி ஒன்றும் நடைமுறையில் இல்லை, எனக் கூறப்பட்டுள்ளது. நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட சில தடுப்புக்கைதிகளின் பிரச்சினைகளில் நீதிபதியின் கட்டளைப் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கலாம். ஆனால் இதன் பெறுமதி வரையறுக்கப்பட்டது.

## வாக்குமூலம் தமிழில் பதியப்படுவதே இல்லை

கொழும்பு உட்பட பல பிரதேசங்களிலும் தமிழ் பேசும் பொலிஸாரின் பற்றாக்குறையும் பல கஷ்டங்களுக்கு காரணமாகின்றது. மற்றும்படி இப்பிரச்சினைகள் அதே இடத்தில் தீர்க்கப்படக் கூடியவை. எந்த மொழியில் வாக்குமூலம் கொடுக்க வேண்டும், என்பதைத் தடுப்புக் கைதிகளே தீர்மானிக்க வேண்டும் என்ற உடன்பாட்டை கடந்த ஜுன் 10ம் திகதி தமிழ் கட்சிகளுடனான சந்திப்பில் பிரதமர் ஏற்றுக் கொண்டார். ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவதனை பெருமளவு பொலிஸார் புறக்கணிக்கின்றனர். சிறிலங்காவின் பொதுவான சட்டம் கூட, மக்கள் விசாரணைக்குள்ளாக்கப்படும் போது, அவர்களுடைய சொந்த மொழியிலேயே வாக்குமூலம் கொடுப்பதற்கான உரிமையைத் தருகின்றது. பொலிஸ் நிலையங்களில், தடுப்புக் கைதிகள் விசாரணைக்குள்ளாகும் போது, பெருமளவு சிங்கள மொழியும் சிறிதளவு தமிழ் மொழியும், இடைக்கிடை ஆங்கிலமும் பேசப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. பல பிரச்சினைகளில் தடுப்புக் கைதிகள் சிங்கள மொழியை விளங்கிக் கொள்வதில்லை. அல்லது இலகுவான கேள்விகளுக்கு கூட, சிங்கள மொழியில் விளக்கம் கொடுக்க முடியாதுள்ளனர். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தமிழ் கைதிகளின் வாக்குமூலம் சிங்கள மொழியிலேயே பதிவு செய்யப்படுகிறது. சில வேளைகளில் மட்டும் அதில் சில விடயங்கள் வாயால் தமிழில் கூறப்படும். இதற்கும் அவர்கள் ஒரு கைதியைப் பாவிப்பது உண்டு.

அறிக்கைகள் சிங்கள மொழியிலேயே இருக்கின்றன எனினும், சர்வதேச சட்டத்தின் கீழ் அடிப்படை விபரங்களை யாவது அவர்களால் விளங்கக்கூடிய பேசக்கூடிய மொழியில் தடுப்புக் கைதிகள் பெற்றுக் கொள்வதற்கு உரிமை உண்டு.

பல வழக்குகளில் தமிழ் தடுப்புக் கைதிகள் எதையாவது செய்வதற்கு கூடப் பயப்பிடுகின்றனர். அதனால் கேள்வி இல்லாமல் அறிக்கையில் கையொப்பம் வைக்கின்றனர். துரைசிங்கம் அன்டனி ஜெகநாதன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தியாளர். புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில், தடுப்புக்காவலில் இருந்த போது சிங்களத்தில் எழுதப்பட்டிருந்த தனது வாக்கு மூலத்தில் கையொப்பம் வைக்க மறுத்தார். இந்த மொழியை அவரால் வாசிக்க முடியாததால் தனது வாக்கு மூலத்தை தமிழில் எழுதித் தரும்படி கேட்டார். பொலிஸார் அவரது வேண்டுகோளை மறுத்தனர். ''நீ கையொப்பம் வைக்காவிட்டால், தடுப்புக்காவலில் வைக்க என்னால் முடியும். பிறகு உனக்குப் பல கஷ்டங்கள் ஏற்படும்'' என பொலிஸ் பொறுப்பதிகாரி மிரட்டியதனால் பின்னர் து.அ.ஜெகநாதன் வாக்கு மூலத்தில் கையொப்பம் இட்டார்.

தமிழ் தடுப்புக்கைதிகள், தமிழில் கேள்வி கேட்க்கப்படுவதற்கான உரிமை இருக்கின்றது. அவர்கள் விரும்பினால், வாக்குமூலத்தை தமிழில், சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் பதிவு செய்யும்படி கேட்கலாம் என கொழும்பு DIGP ச.ம.சபையிடம் கூறியிருந்தார். அதனால், விடுவிக்கப்பட்ட தடுப்புக்கைதிகளின் அனுபவத்தில் இந்த உரிமை நடைமுறையில் அமுல்படுத்தப்படவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபை கூறியிருந்தது.

# இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கும் அமெரிக்க தகவல் நிலையத்திற்கும் பின்னால்

## அரசின் ரகசிய வதை முகாம்!

1993 ஒக்டோபர் 2ம்திகதி பம்பலப்பிட்டியவிலுள்ள ''லொட்ஜ்'' ஒன்றிலிருந்து அருளப்பு ஜுட் அருள்ராஜ் என்பவர் கைது செய்யப்பட்டார். 1993 டிசம்பர் 15ம் திகதி குற்றப்புலனாய்வுப் பகுதியினரிடம் (CID)ஒப்படைக்கப்படும் வரை, கொழும்பில் அனுமதியற்ற இரு இடங்களில் இவர் தடுப்புக்காவலில் வைக்கப்படிருந்ததாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை கூறுகின்றது.

முதலாவது இடத்தில் தடுப்புக்காவலில் இருந்த போது இவர் துன்புறுத்தி, கொடுமைப்படுத்தப்பட்டதாகவும், இந்த இடமானது கொள்ளுப்பிட்டி காலிவீதிக்கு அருகில், கடற்கரை ஓரமாக உள்ள இராணுவ முகாம் என்றும் அறியப்படுகின்றது. அ.ஜுட் அருள்ராஜ், இந்த முகாமில்- இரண்டு மாதங்களாக தடுப்புக்காவலில் இருந்துள்ளார். அப்பொழுது, நிர்வாணமாக கண்கள் கட்டப்பட்டும், கை, கால்கள் கட்டப்பட்ட நிலையிலும் இருட்டறையில் வைக்கப்பட்டார். இவர், நாள்தோறும தாக்கப்பட்டார். ஒரு சந்தர்ப்பத்தில் இவர் கூரையில் கட்டி தொங்கவிடப் பட்டு, இரும்பு வெட்டும் கத்திகளால் இவரது பிறப்புறுக்கள் வெட்டப்பட்டன.

சர்வதேச மன்னிப்புச் சபை இவர் தொடர்பாக விசாரித்த போது, பாதுகாப்பு அமைச்சு அருளப்பு ஜுட் அருள்ராஜ் 1993 அக்டோபர் 24 ம் திகதி கைது செய்யப்பட்டு. டிசெம்பர் 15ம் திகதிவரை பனாகொடை இராணுவமுகாமில் வைக்கப்பட்டிருந்தார் எனவும் பின்பு, மேலதிக விசாரணைகளுக்காக புலனாய்வுத்துறையினரிடம் கையளிக்கப்பட்டார் எனவும் தெரிவித்தது.

தொடரும் மோசடிகளும் 17வது அவசரகால சட்டவிதிகளுக்கமைய, பாதுகாப்புப்படைகளுக்கு கைது செய்வதற்கும், தடுப்புக்காவலில் வைப்பதற்குமான அதிகாரம் வழங்கப்பட்டமையுமே இவ்வாறான சம்பவங்களுக்குக் காரணம் என சர்வதேச மன்னிப்புச் சபை கருதுகிறது.

பாதுகாப்பு அமைச்சு, அ.ஜுட் அருள்ராஜ், ஒக்டோபர் 24ம் திகதியில் இருந்து டிசெம்பர் 15ம் திகதி வரை பனாகொட இராணுவ முகாமில் தான் இருந்தார், எனக் கூறுகின்றது. 1993 ஜுன் தடுப்புக்காவல் அறிக்கையில் உள்ள அதிகாரபூர்வமான இடங்களில் பனாகொட இராணுவ முகாம் இருக்கவில்லை. அதனால் தடுப்புக்காவல் கைதிகளை அங்கு வைத்திருக்க முடியாது. அவசரகாலசட்ட விதியின் (ER19(8))கீழ் இந்த மாதிரி இடங்களில் யாரையும் தடுத்து வைப்பது சட்டத்தை மீறிய குற்றமாகும்.

பனாகொட இராணுவ முகாம் தடுப்புக் காவலில் வைப்பதற்கான அதிகாரபூர்வமான இடமாக இருந்தால் கூட அ.ஜுட் அருள்ராஜ்ஜை அங்கே கொண்டு சென்றிருக்க முடியாது. அவசரகால சட்டவிதிக்கு (ER18(1))அமைய, தெற்கில் இராணுவத்தால் கைதுசெய்யப்படும் சந்தேக நபர், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் 24 மணி நேரத்துக்குள் கையளிக்கப்பட வேண்டும். பாதுகாப்பு அமைச்சு தான் வெளியிட்ட செய்தியின்படி அ.ஜுட் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, 51 நாட்கள் வரைக்கும், பொலிஸில் ஒப்படைக்கப்படவில்லை இவருடைய சொந்த வாக்குமூலத்தின்படி 75 நாட்களின் பின்பு தான் பொலிஸ் பாதுகாபபுக்கு மாற்றப் பட்டார்

சர்வதேச மன்னிப்புச்சபை அ.ஜுட் அருள்ராஜின் தடுப்புக்காவல் தொடர்பாக மனித உரிமைகளுக்கான நடவடிக்கை குழுவுக்கும் அறிவிக்கவில்லை எனக் கூறுகிறது. அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் (ER18(7))கைது செய்யப்படும் நபர் தொடர்பாக பாதுகாப்பு செயலாளர் மனித உரிமைகளுக்கான நடவடிக்கைகள் குழுவுக்கு அருள்ராஜ்ஜின் உறவினர் ஒருவர் மூலமாக டிசம்பர் மாத நடுப்பகுதியில் கைது தொடர்பாக அறியக் கிடைத்தது.

கொள்ளுப்பிட்டி காலிவீதியில் இந்திய உயர்ஸ்தானிகாரியாலயத்திற்கும் அமெரிக்க செய்திப் பணியகத்திற்கும் பின்னால் கடற்கரை ஓரத்தில் உள்ள இரகசிய இடம் ஒன்றில் மக்கள் பலர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கைக்கு அரசாங்கம் எதுவிதமான பதிலுமளிக்கவில்லை. இது ஒரு இராணுவ முகாமாகக் கருதப் படுகிறது. முறையற்ற தடுப்புக்காவலினால் இராணுவப பாதுகாப்பில் இருந்த காலங்களில் இவர் துன்புறுத்தப்பட்டார் என்ற கூற்றுக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை.

ஜுட் அருள்ராஜ் கடத்தப்பட்டது தொடர்பாக சரிநிகர் 36 இல் எழுதியிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

அன்கூரி என் அயல்வீட்டுக்காரரின் பழைய வேலையாளின் மணமகள். ஒவ்வொரு மணமகளும் திருமணத்திற்கு புதியவள் தான்; என்ற போதிலும் இவள் வேறொரு வகையில் புதியவளாயிருந்தாள். இருமுறை மணமாகி தாம்பத்தியத்திற்கு மிகப் பரிச்சயமானவனான அவள் கணவனின் இரண்டாம் மனைவி அவள். இதனால் இவ்விடயத்தில் அன்கூரி மட்டுமே புதியவள். அவர்களிருவரும் சேர்ந்திருக்காத இந்த ஐந்து வருடங்களில் இவ்வுணர்வு மேலும் அதிகரித்திருந்தது. இன்னமும் அவளிடம் நாட்டுப்புறத்துக்குரிய புத்துணர்வும் தன்னடக்கமுள்ள பெண்மையும் இருந்தது.

ஆறுவருடங்களுக்கு முன்னர் பிரபாத்தி தன் முதல் மனைவியின் தகனக் கிரியைக்காக ஊர் சென்றிருந்தான். இறுதிக் கிரியை முடித்ததும் அன்கூரியின் தந்தை பிரபாத்தியின் தோளிலிருந்த ஈரத்துவாலையை பிழிந்தார். ஒரு துவாலையை நனைக்குமளவுக்கு அழுதவனென்று எந்த ஆண்மகனும் இருக்கவில்லை. இறுதிக்கிரியையின் போது குளிக்கையிலேயே துவாலை ஈரமாகிறது. இந்தக் கண்ணீர் படிந்த துவாலையை மணமாகாத பெண்ணொருத்தியின் தந்தை பிழிகிறாரென்றால் எனதுமகளை இறந்தவளுக்காகத் தருகிறேன். கவலைப்படாதே' என்று அர்த்தம்.

இவ்வாறுதான் அன்கூரி பிரபாத்தியை மணந்தாள் என்றாலும் அவள் மிக இளையவளாயிருந்த்தனாலும், அவளுடைய தாய் நோயுற்றிருந்தனாலும் அவர்கள் சேர்ந்து வாழ்வது ஐந்து வருடங்களுக்குப் பிற்போடப்பட்டிருந்தது. பின்னர் அன்கூரியைக் கூட்டிச் செல்ல பிரபாத்தி அழைக்கப்பட்ட போது அவன் கிராமத்தில் தங்கிவிடவே விரும்பினான். ஏனெனில் மேலதிகமாக இன்னொரு சாப்பாடு போடுவதை அவனுடைய எசமான் விரும்பவில்லை. எனினும் மனைவியைத் தனியாக ஒரு வீட்டில் வைத்துக் கொள்ள அனுமதி கேட்ட போது அவர் சம்மதித்தார்.

எங்கள் அயலுக்கு வந்த ஆரம்பத்தில் அன்கூரி எவரைக் கண்டாலும் முக்காட்டினாள் முகத்தை மூடிக் கொண்டிருந்தாள், பின்னர் முக்காடு மெதுவாக விலகி விலகி கூந்தலை மட்டும் மறைத்துக் கொள்ளும் வைதீக இந்துப் பெண்களைப் போலாகிற்று. அன்கூரி அன்பானவள். கண்களுக்கும் செவிகளுக்கும் விருந்தளிப்பவள். அவள் சலங்கை மணிகளில் சிரிப்பிருந்தது. அவள் சிரிப்பில் நூறாயிரம் மணிகள் ஒலித்தன. ''அன்கூரி காலில் என்ன அணிந்திருக்கிறாய் ?'' நான் அவளை ஒரு நாள் கேட்டேன்.

''அது...என்னுடைய காலில் அழகிய கொலுசு அணிந்திருக்கிறேன்''

''உன்னுடைய விரலில்?''

''பிச்வா''

''அப்போ கையில் இருப்பது...

''பசெலா''

''நெற்றியில் என்னவென்று கூறேன்...'

''அதை அலிபான்ட் என்பார்கள்.''

''உன்னுடைய இடையில் இன்று ஏதும் அணியவில்லையே...'

''அது மிகவும் பாரமாயிருக்கிறது. நாளைக்கு அணிவேன். இன்றைக்கு பாருங்கள் சங்கிலியில் ஒட்டு விட்டு விட்டது. நாளைக்குப் பட்டணம் போய் ஒட்டுப் போடுவேன். ஒரு மூக்குத்தியும் வாங்க வேண்டும். என்னிடம் வளையலுடன் கூடிய ஒரு பெரிய மூக்குத்தி இருந்தது. அதை என் மாமியார் எடுத்துக் கொண்டார்.''

தனது வெள்ளி நகைகளையிட்டு அன்கூரிக்கு தனிப் பெருமை. சிறு ஆபரணத்தில் மெல்லிய பரிசத்திற்கும் பரவசப்பட்டு விடுவாள். அவளுடைய முழு இருப்புமே அவைகளுக்காகத்தான் என்பது போல் இருக்கும்.

பருவகால மாற்றத்துடன் காலநிலையும் மாறிற்று. அன்கூரியும் அதனை உணர்ந்திருக்க வேண்டும். முன்பெல்லாம் நாளின் பெரும்பகுதியை தன் குடிசையில் கழிக்கும் அவள் இப்போது அதிகம் குடிசைக்கு வெளியே இருந்தாள்.

எங்கள் வீட்டின் முற்றத்தில் சில ராட்சத வேம்புகளும் அவற்றின் கீழ் பழைய கிணறொன்றும் இருந்தது. சில சமயங்களில் நிர்மாண வேலை செய்வோர் அதிலிருந்து நீர் எடுப்பதுண்டு. கிணற்றைச் சுற்றிச் சிந்தும் தண்ணீர் அச்சூழலை குளிர்மையாகவே வைத்திருந்தது. அதனருகில்தான் அன்கூரி இளைப்பாறுவாள்,

ஒரு முறை நான் வேம்பின் கீழ் கதிரை போட்டு புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தேன்.

''என்ன வாசிக்கிறீர்கள் பீபி?'' அன்கூரி கேட்டாள்

''ஏன் நீயும் வாசிக்கப் போகிறாயா?''

''நானா... நான் வாசிப்பதில்லை''

''உனக்கு படிக்க விருப்பமா?''

''ஐயோ! இல்லை.''

''ஏன் அதிலென்ன தவறு?''

''பெண்கள் படிப்பதே பாவம்''

''ஆண்களுக்கு...''

''அவர்கள் படித்தால் பாவமில்லை.''

''யார் உனக்கு இதெல்லாம் சொன்னார்கள்?''

''எனக்குத் தெரியும்.''

''நான் வாசிக்கிறேன். அப்போ நான் பாவம் செய்கிறேன் போலும்''

''நகர்ப்புறப் பெண்களுக்கு பாவமில்லை கிராமத்துப் பெண்களுக்கு எல்லாமே பாவம் தான்''.

நாங்கள் இருவருமே சிரித்தோம். அவள் நம்பிக்கை கொள்ளச் செய்யப்பட்டிருந்தவைபற்றி. கேள்வி கேட்கக் கூட அவள் அறிந்திருக்க வில்லை. தான் பிறந்ததே குற்றம் என்கிற உணர்வு அவளுக்கு அமைதி தருமெனில், அவளைக் கேள்வி கேட்க நான் யார் என்று நினைத்துக் கொண்டேன்.

# பூண்டு

மார்ச் 8 பெண்கள் தினம்



அவளுடைய உடலில் எப்போதும் ஒளிர்ந்து கொண்டிருந்த பரவச உணர்வும் ஏதோவொரு இனிமையும் அவளது கருநிறத்தை இல்லாதொழித்திருந்தது. பெண்ணின் உடல் பிசைந்த மாவைப் போல என்பார்கள். சில பெண்கள் நன்கு பிசையாத மாவைப் போல தளர்வானவர்கள். சிலர் அளவுக்கதிகமாக பிசைந்த மாவைப்போல இறுக்கமானவர்கள். மிக அருமையாகவே அளவாகப் பிசைந்த மாவைப் போன்ற உடலமைப்பு கிடைக்கிறது. அன்கூரி கடைசி வகையைச் சேர்ந்தவள். நான் அவளை, அவளுடலை அங்கம் அங்கமாகப் பார்க்கையில் ஆழ்ந்த சோர்வை அனுபவித்தேன். அப்போதெல்லாம் வயதானவனான பிரபாத்தியை நினைத்துக் கொள்வேன். திடீரென பிரபாத்தியால் மூடப்பட்டிருக்கும் பிசைந்த மாவுதான் அன்கூரி என்ற விநோத எண்ணம் என்னை தாக்கிற்று. அவன் அவளை பாதுகாப்பவன் மட்டுமே; இரண்டறக்கலந்தவனல்ல.என்னுள் சிரிப்பெழுவதை உணர்ந்த போதும் அச்சிரிப்பு அவளை தாக்குமோ என்று, பயந்தேன். அவளுடைய கிராமத்தை பற்றி கேட்கத் தொடங்கினேன். அவளுடைய கிராமத்தில் விவாகம் ஒழுங்கு செய்யப்படும் முறை பற்றி விசாரித்தேன்.

''பெண் ஐந்தாறு வயதாயிருக்கும் போது யாராவது ஆணின் கால்களை தொழுவாள். அவனே அவள் கணவனாய் அமைவான்.''

''எப்படி அவ்வாறு செய்வார்கள்?''

''அவளுக்காக அவள் தந்தை காசும், மலர்களும் கொண்டு தொழுவார்.''

''அது அந்தப் பெண் செய்வதாகாதே...?''

''தகப்பன் மகளுக்காக செய்வது மகளே செய்தமாதிரித் தானே?''

''அந்தப் பெண் அந்த மனிதனை பார்ப்பதுமில்லையா?''

''இல்லை ''

''ஒரு பெண்ணும் பார்ப்பதில்லையா?''

''இல்லை'' என்று தயக்கத்துடன் சொன்னவள் ''காதலிப்பவர்கள் பார்ப்பார்கள்'' என்றும் சொன்னாள்.

''உனது கிராமத்திலும் பெண்கள் காதலிப்பார்களா? ''

''சில பேர் தான்''

''காதலிப்பவர்கள் பாவம் செய்வதில்லையா?''

''அது பாவம், பெரிய பாவம்''

''பாவம் செய்வது பற்றி அவர்கள் பயப்படுவதில்லையா?''

''பயம்தான், என்றாலும் அதை அவர்கள் செய்வதில்லை. ஆண்கள் தான் அவர்களை பாவம் செய்யப்பண்ணுவார்கள்.''

''அதெப்படி....?''

''ஒருசாதி காட்டுப் பூண்டை கொடுப்பார்கள். அதைச் சாப்பிடுபவர்கள் அந்த ஆளைக் காதலிப்பார்கள்.''

''அதைச் சாப்பிடுகிற பெண்ணுக்கு அது பூண்டென்று தெரியுமா?''

''இல்லை. பூண்டென்று தெரியாமல் வெற்றிலையில் அல்லது இனிப்பில் வைத்து கொடுப்பார்கள். அதைச் சாப்பிட்ட பிறகு அந்த ஆணைத்தவிர வேறெதிலும் அவள் நிறைவடையமாட்டாள்.''

''உண்மையாகவா?''

''ஆம். நான் எனது கண்களாலேயே பார்த்திருக்கிறேன். எனது சினேகிதிக்கு நடந்தது. என்னிலும் வயதானவள் அவள்.''

''அவளுக்கு என்ன நடந்தது?''

''அவள் பைத்தியம் பிடித்து, அவனுடன் பட்டணத்துக்கு ஓடிவிட்டாள்.''

''அதற்குக் காரணம் பூண்டெ ன்று உனக்கெப்படித் தெரியும்?''

''பின் வேறென்ன? அவள் ஏன் தன் தாய் தந்தையை விட்டு அவனுடன் ஓட வேண்டும். அவன் அவளுக்கு பட்டணத்திலிருந்து நிறைய கொண்டு வந்தான். சேலை, நகை, இனிப்பு...''

''அது காதலில்லாமல் வேறென்ன?''

''இருக்க முடியாது. அவள் பெற்றோர்களுக்கு

## மூலம்: அம்ருதாப்ரீதம்
## தமிழில்: க.கமலினி

விருப்பமில்லை என்ற பிறகும் அவள் ஏன் அவனை விரும்ப வேண்டும்?''

''அதுசரி நீ பூண்டை பார்த்திருக்கிறாயா?''

''இல்லை அது எங்கோ தொலைவில் வளர்வதாம். எந்த ஒரு ஆணிடமும் வெற்றிலையோ, இனிப்போ வாங்கக் கூடாதென்பாள் என் தாய். அதில் பூண்டு இருக்கலாமென்ற பயம்.''

''நீ கெட்டிக்காரிதான். உன் சினேகிதி எப்படி அதை சாப்பிட நேர்ந்தது?''

''அவளே அந்தத் துன்பத்தை அனுபவித்தாள்'' துயருடன் சொன்னாள் அன்கூரி. '' கூந்தலை வாருவதுமில்லை. இரவிலும் பாட்டுத்தான்'' அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

''என்ன பாடினாள்?''

''தெரியவில்லை. பூண்டு சாப்பிட்டவர்கள் பாடுவார்கள்; அழுவார்கள்...''

விஷயம் மிக உணர்வு பூர்வமாக சென்று கொண்டிருந்ததால் நான் அத்துடன் அந்தக் கதைக்கு முற்றுப் புள்ளி வைத்தேன்.

ஒரு நாள் அன்கூரி அந்த வேம்பின் கீழ் ஆழ்ந்த கனவு நிலையில் அமர்ந்திருக்கக் கண்டேன். வழமையாக அவள் கிணற்றடிக்கு வருமுன்னே அவளது வருகையை உணர்த்தும் அவளது கொலுசுகள் அன்று மௌனித்திருந்தன.

''என்ன விஷயம் அன்கூரி?'' என்றேன். அவள் வெற்றுப் பார்வை பார்த்தாள். பின்னர் தன்னிலைக்கு மீண்டவளாய்

''எனக்கு வாசிக்க கற்றுத் தாருங்கள் பீபி.'' என்றாள்.

''ஏன்? என்ன நடந்தது அன்கூரி?''

''என்னுடைய பெயரை எழுத கற்றுத் தாருங்கள்.''

''யாருக்கு நீ அதை எழுதுவாய்?'' அவள் பதிலளிக்கவில்லை. மீண்டும் கனவிலாழ்ந்தாள்.

''நீ படிப்பது பாவமாகாதா?'' அவளை மீட்டுக் கொண்டு வருவதற்காய் நான் வினவினேன். அவள் எதுவும் பேசவில்லை. நானும் மதியத்தூக்கத்திற்காய் சென்று விட்டேன்.

மாலையில் நான் வெளியே வந்த போது அவள் அதே இடத்தில் தனக்குள் ஏதோ பாடலை முணுமுணுத்தபடி இருந்தாள். மாலைக் காற்றின் குளிருக்கு தோள்களைக் குறுக்கியபடி உட்கார்ந்திருந்தாள். எனது காலடியோசை கேட்டதும் பாடுவதை நிறுத்தி விட்டுத் திரும்பினாள்.

''நன்றாகப் பாடுகிறாய் அன்கூரி'' என்றேன். அவள் மிகப் பிரயத்தனப்பட்டு தன் கண்ணீரை அடக்கி, உதட்டுக்குச் சிரிப்பேற்ற முயன்றதை அவதானித்தேன்.

''எனக்குப் பாடத் தெரியாது

''உனக்குத் தெரியும் அனகூரி''

''இதுதான்....'

''உன் சினேகிதி பாடிய பாட்டு'' நான் அவளது வசனத்தை முடித்து வைத்தேன்.

''அவள் இதைப் பாடியதை கேட்டிருக்கிறேன்''

''அதை எனக்கு பாடிக் காட்டேன்''

''அது பருவகால மாற்றத்தைப் பற்றிய பாடல். நான்கு மாதம் குளிர்காலம். நான்கு மாதம் கோடை. நான்கு மாதம் மாரிகாலம்.''

''அப்படியல்ல. பாடு'' என்கிறேன்.

அவள் பாடவில்லை. வரிகளை மட்டும் கூறியபடியிருந்தாள்.

**''நான்கு மாதங்கள் குளிரின் ஆட்சி, என் இதயம் நடுங்கும் என் அன்பே நான்கு மாதங்கள் கோடை; சூரிய ஒளியில் தென்றல் வீசும் நான்கு மாதங்கள் மழை பொழியும், மேகங்கள் நடுங்கும் என் அன்பே''**

''அன்கூரி...''

அவள் ஏதோ பரவசத்திலிருந்து மீண்டதுபோல் என்னைப் பார்த்தாள். எனக்கு அவள் தோள்களை உலுக்கி ''பூண்டு சாப்பிட்டாயா?'' என்று கேட்க வேண்டும் போலிருந்தது. எனது கரத்தால் அவளை அணைத்துக் கொண்டேன். அவள் சாப்பிட்டு விட்டாளா என்று வினவினேன். பிரபாத்தி எசமான் வீட்டில் சாப்பிடுவதால் அன்கூரி தானே சமைத்து உண்பது வழக்கம்.

''நீ இன்று சமைக்கவில்லையா?''

''இன்னும் இல்லை''

''காலையில் தேனீர்....

''தேனீரா? இன்றுதான் பால் இல்லையே.''

''ஏன் இன்று பால் கிடைக்கவில்லையா?''

''நான் பால் வாங்குவதில்லை. ராம்தாரா...பால் கொண்டு வருவார்.

ராம்தாரா அந்தத் தெருவின் இரவுக் காவலாளி. அன்கூரி அங்கு வரமுன்பே காவல் வேலை முடிந்ததும் எங்கள் வீட்டில் தேனீர் அருந்துவான். அன்கூரி அங்கு வந்தபின் அவளுடைய அடுப்படியிலேயே அவன் தேனீர் தயாரித்து வந்தான். அன்கூரியும் பிரபாத்தியும் கூட அவனுடன் அடுப்படியிலிருந்து தேனீர் அருந்துவர். மூன்று நாட்களின் முன்னர்தான் ராம்தாரா விடுமுறையில் வீட்டுக்குச் சென்றிருந்தான்.

''நீ மூன்று நாட்களாய் தேனீர் குடிக்கவில்லையா?''

அவள் இல்லையென தலையாட்டினாள்.

''சாப்பிடவும் இல்லையா?''

அவள் பதிலளிக்கவில்லை. சாப்பிட்டிருந்தாலும் அது ஒரு கவளத்தை விட அதிகமாய் இருந்திருக்காது.

நான் ராம்தாராவை நினைவு கூர்ந்தேன். பார்வைக்கு அழகியவன். மிக சந்தோஷமானவன். அவன் கதைக்கும் போது உதட்டோரம் சிரிப்பு எட்டிப் பார்க்கும்.

''அன்கூரி..'

''பீபி..''

''இதுவும் அந்தப் பூண்டு செய்யும் வேலையா?''

அவள் விழிகளிலிருந்து ஆறாய் பெருகிய கண்ணீர் அவள் உதட்டோரமாய் குளமிட்டது.

''இது எனக்கு சாபமாகட்டும்'' அவள் கண்ணீரால் கனத்த குரலுடன் தொடர்ந்தாள்.

''நான் அவனிடம் இருந்து ஒரு இனிப்போ, வெற்றிலையோ சாப்பிட்டிருந்தால்....இல்லை தேனீராயினும்....''

அவளால் பேச முடியவில்லை.

வார்த்தைகள் இறுகி அவளது விம்மலில் நொறுங்கிப் போயின.

## இலங்கையின் அரசியலமைப்புக்களும் இனப்பிரச்சினையும் -7

# கோல்புறூக் கொண்டு வந்த ஆங்கில மயம்

செம்பாட்டான்

உரோம ராச்சியத்தைப் பற்றியும் இங்கிலாந்தின் பேரரசைப் பற்றியும் படிக்கின்ற எங்கள் மாணவர்கள் எல்லாளன், துட்டகைமுனு, கதிர்காமம், முனீஸ்வரம், மகியங்கனை பற்றி அறியாதிருப்பது கவலைக்குரியது''.

1906இல் இலங்கைக்கு என ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென வற்புறுத்திப் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் தெரிவித்த கருத்து இது.

ஆங்கிலேயருடைய காலனித்துவ ஆட்சியும் அதனை நிலை நிறுத்துவதற்கு உருவாக்கப்பட்ட ஆங்கிலக் கல்வியும் எங்கள் மக்களை உளவியல் ரீதியாகவும் அடிமைப்படுத்தி வைத்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுவதே அருணாசலத்தின் மேற்கண்ட கூற்றின் நோக்கமாகும்.

ஆங்கிலேயர் கோல்புறூக் அரசியல் திட்டத்தினூடாக ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்திய போது இலங்கை மக்களுக்கு கல்வியைப் புகட்ட வேண்டும் என்ற அக்கறை காரணமாக அதை அறிமுகப்படுத்தவில்லை. மாறாக காலனித்துவ ஆட்சியை உள்ளூர் மக்கள் மத்தியில் நிலைநிறுத்தவும், காலனித்துவ நிர்வாக சேவையின் இடைமட்ட உத்தியோகங்களுக்கு ஆட்களைச் சேர்க்கவுமே அதனை அறிமுகப்படுத்தினர். காலனித்துவ நிர்வாக சேவைக்கு இங்கிலாந்தில் இருந்து ஆட்களை வரவழைப்பதாயின் அவர்களுக்கு உயர்ந்த வசதிகளும் உயர்ந்த சம்பளமும் கொடுக்க வேண்டியிருந்தது. இதனால் ஏற்படும் செலவுச் சுமையைத் தவிர்ப்பது ஆட்சியாளர்களின் முக்கிய கவனமாக இருந்தது.

இந்த வகையில் ஆங்கில மொழிக் கல்வி மூன்று விதமான நோக்கங்களை தன்னகத்தே கொண்டிருந்தது.

1. ஆங்கிலேயப் பாடத்திட்டத்தை இலங்கையில் அறிமுகப்படுத்துதல்.
2. ஆங்கிலேய நிர்வாக முறையை அறிமுகப்படுத்துதலும் மக்களை அதனை அங்கீகரிக்கச் செய்தலும்.
3. ஆங்கில மத, கலாசாரத்தைப் பரப்புதல்

முதலாவது நோக்கத்தின் அடிப்படையில், பிரித்தானிய பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாடத்திட்டங்கள் இலங்கைப் பாடசாலைகளின் பாடத்திட்டங்களாக்கப்பட்டன. உயர்கல்விக்கான ஆயத்தங்கள் பிரித்தானியப் பல்கலைக்கழகங்களை நோக்கி அதனை மையமாக வைத்துக் கட்டியெழுப்பப்பட்டன. இதனாலேயே இலங்கை மாணவர்கள் பிரித்தானியாவைப் பற்றி அறிந்தளவுக்கு இலங்கையைப் பற்றி அறிந்திருக்கவில்லை என அருணாசலம் குற்றம் சாட்டினார்.

இப் பாடத்திட்டங்களினால் ஏற்பட்ட விளைவு நீண்டகாலத்திற்கு கவலைப்படும் அளவுக்கு மிக மோசமானதாக இருந்தது. வழங்கப்பட்ட கல்வி இலங்கை மக்களின் சமூக, கலாசார, பொருளாதார அம்சங்களை உயர்த்துவதற்கு எந்த விதத்திலும் உதவவில்லை. சமூகரீதியாக இலங்கைச் சமூகங்கள் பற்றிய அறிமுகத்தையோ அச்சமூகங்களுக்கு இடையிலான ஐக்கியத்தைப் பற்றியோ, ஒவ்வோர் சமூகத்தின் தனித்துவத்தையும் அங்கீகரித்துக் கொண்டு அதனை எவ்வாறு வளர்க்கலாம் என்பது பற்றியோ எதுவும் கூறவில்லை. கலாசார ரீதியாக இலங்கை மக்களில் பாரம்பரிய கலாசாரம் பற்றியோ, அங்கு வாழ்கின்ற ஒவ்வொரு இனங்களின் கலாசாரங்களைப் பின்பற்றியோ, அது வளர்க்கப்பட வேண்டிய தன் அவசியம் பற்றியோ எதுவும் கூறவில்லை. மாறாக பிரித்தானியக் கலாசாரத்திற்குக் கீழ்ப்பட்ட நாகரீகம் அற்ற பண்பாட்டம்சங்களே இங்கு நிலவுகின்றன என்ற எண்ணப் போக்கிலேயே இவை வளர்ந்தன. பரீட்சைகளைப் பொறுத்தவரையிலும் கூட இலங்கை அரசாங்கம் நடாத்துகின்ற பரீட்சைகள் என எதுவும் இருக்கவிலலை. லண்டன் பரீட்சைகளுக்கே மாணவர்கள் தயாராக வேண்டிய நிலையில் இருந்தனர். லண்டன் பரீட்சைகள் அனைத்தும் பிரித்தானியக் கல்வி அமைச்சின் பாடத்திட்டத்திற்கு அமையவே உருவாக்கப்பட்டிருந்தன.

பொருளாதார ரீதியாக இதன் தாக்கம் நீண்ட காலத்திற்கு இலங்கையைத் தங்கியிருத்தல் நிலையில் வைத்திருக்க முற்பட்டது. கல்வி, இலங்கையின் அடிப்படையில் பொருளாதாரத்தை வளர்ப்பதில் எந்தவித ஊக்குவிப்பையும் செய்யவில்லை. இதனால் இலங்கையின் பாரம்பரிய விவசாயம் வீழ்ச்சியுற்றது. மன்னராட்சிக் காலத்தில் பேணப்பட்ட குளங்களும், கால்வாய்களும் தூர்ந்து போக விடப்பட்டன. சமூகத்தின் முன்னேறிய பிரிவினர் ஆங்கிலக் கல்வியிலும் அதன் மூலமாகக் கிடைக்கின்ற வெள்ளை உடைத் தொழில்களிலும் அக்கறை செலுத்தியதினால் விவசாய வளர்ச்சியில் ஊக்கம் காட்டவில்லை. முன்னேறிய பிரிவினர் ஊக்கம் காட்டாத போது அது இயல்பாகவே கீழான நிலைக்குச் சென்றது. இதன் விளைவு வெளிநாடுகளுக்குத் தானியங்களை ஏற்றுமதி செய்த இலங்கை தனது உணவுத் தேவைக்கு வெளிநாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தொழில் நுட்பத்தை பொறுத்தவரையிலும் கூட மன்னராட்சிக் காலத்தில் இலங்கையின் சுதேச தொழில்நுட்பம் நன்கு வளர்சியடைந்த ஒன்றாக இருந்தது. அதன் கட்டிடக் கலை வளர்ச்சிக்கு அநுராதபுரம், பொலன்னறுவைக் கட்டிடங்கள் இன்றும் சான்று பகர்கின்றன. மன்னர்களும் அதன் வளர்ச்சியில் கவனம் செலுத்தி வந்துள்ளதை வரலாற்றுச் சான்றுகள் காட்டுகின்றன. ஆனால், பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயப் பாடத்திட்டங்கள் அதற்கு எந்த வித ஊக்குவிப்பையும் வழங்கவில்லை. தொழில்நுட்ப வளர்ச்சியும், கைத்தொழில் வளர்ச்சியும அழிந்து போக விடப்பட்டன.

ஆங்கிலக் கல்வியினூடாக ஆங்கில நிர்வாக முறைக்கு தயார்படுத்துதல் என்ற பிரித்தானியரின் நோக்கத்தைப் பொறுத்த வரை அதுவே ஆங்கிலக் கல்வி அறிமுகத்தின் பிரதான இலக்காகவும் இருந்தது. இதனூடாகத் தங்களுக்கு விசுவாசமாகச் சேவை செய்யக் கூடிய தங்களுக்குத் துதி பாடுகின்ற ஊழியப் பரம்பரை ஒன்றை அவர்கள் உருவாக்கினர். இவர்களினூடாகத் தங்களினுடைய நிர்வாக முறையே உலகிலுள்ள நிர்வாக முறைகளில் சிறந்தது என்ற கருத்துருவாக்கத்தையும் ஏற்படச் செய்தனர். இவ்வூழியர் குழாம் சமுதாயத்தின் மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்ததாகவும் இருந்ததினால் அவர்கள் சமுதாயத்தின் மேல் ஆதிக்கமு செலுத்தக்கூடிய நிலையையும் தோற்றுவித்தனர். இதன் பின்னர் இவ்வூழியர் குழாம் அரசியல் நிர்வாகத்துறையில் பலம்வாய்ந்ததாக ஆகிய போது சாதாரண மக்களின் பிரச்சினைகளில் அக்கறை கொள்ளாது தங்களது நலன்களில் மட்டும் அக்கறை செலுத்தக் கூடிய வகையில் தீர்மானங்களை எடுத்தது. 1931ம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டத்தின் மூலம் சர்வஜன வாக்குரிமையை அறிமுகப்படுத்த டொனமூர் குழுவினர் முன்வந்த போது இவ்வுயர் குழாமைச் சேர்ந்தவர்கள் அதனை எதிர்த்தமை இதற்கு நல்ல உதாரணமாகும்.

ஆங்கிலக் கலாசாரத்தைப் பரப்புதல் என்ற நோக்கத்தைப் பொறுத்தவரை ஆங்கிலேய அரசு சிறந்த வெற்றியை ஈட்டியுள்ளது என்றே கூற வேண்டும். இன்று இலங்கையரின் ஆடைகள் தொடக்கம் கொண்டாட்டங்கள் வரை அக்கலாசாரம் ஊடுருவி உள்ளதை அவதானிக்க முடியும். அவர்கள் விரும்பினால் கூட கழட்டி விட முடியாத அளவுக்கு அவர்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒன்றாக ஆங்கிலக் கலாசாரம் ஊடுருவி உள்ளது. ஆங்கிலம் தெரிந்தவர்கள் ஆங்கிலக் கலாசாரத்தைப் பின்பற்றுபவர்கள் உயர்ந்த மனிதர்கள் என்ற எண்ணக் கரு மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிய விடப்பட்டுள்ளது.

ஆங்கிலம் படித்த அரச அலுவலர்களுக்கும் கால்சட்டை போட்டவர்களுக்கும் கிராமப்புறங்களில் கொடுக்கும் மரியாதை இதனையே காட்டுகின்றது. சாதாரணத் தேசிய உடையுடன் செல்பவர்களைப் பார்க்கிலும் ஆங்கில உடையுடன் செல்பவர் உயர்ந்தோராக மதிக்கப்படுகின்றார்கள். சுயமொழிப் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரும் கூட ஆங்கில மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்களே சிறந்த கற்கையாளராக கருதப்படுகின்றார்கள். நேர்முகப் பரீட்சைகளில் ஆங்கிலத் தகைமை உடையவர்களுக்கே முதலிடம் கொடுக்கப்படுகின்றது. இந்த நிலைமை இன்றுவரை நிலவவே செய்கிறது.


ஆங்கிலத் தகைமை இல்லை என்பதற்காக பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்கு தனியார் கம்பனிகள் பல அரச சார்புக் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் வற்புறுத்தியும் கையை விரித்திருந்தன.

இதன் பிரதான விளைவு என்னவென்றால் இலங்கைச் சமூகத்தின் தேசிய தன்மைகள் சிதைக்கப்பட்டதேயாகும். இலங்கையின் பல்வேறு தேசிய இனங்களின் தேசியத் தன்மைகளும் சிதைக்கப்பட்டன. தேசிய இனங்களின் உயர் வர்க்கத் தலைமை இதனை நோக்கி முதலில் தள்ளப்பட்டது. இதனால் அவர்கள் மத்தியில் ஓர் மேல் நிலையாக்கப்பட்ட கலாசாரமாக இவ் ஆங்கில கலாசாரம் வளரத் தொடங்கியது. காலப் போக்கில் சாதாரண மக்களும் இதனை நோக்கித் தள்ளப்பட்டனர். அதன் பின்னர் சமூகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கலாசாரமாக இது மாறியது. தமிழ்த்தேசிய இனத்தைப் பொறுத்தவரை அதற்குத் தலைமை வகிப்பதற்கு கூட ஆங்கிலத் தகைமை அவசியம் என்ற ஒரு நிலை தோன்றியது. தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக்கட்சி, தமிழர்விடுதலைக்கூட்டணி என்பவற்றின் தலைவர்களாக இருப்பதற்கு பலர் ஆங்கிலம் படித்த சட்டத்தரணிகளாக இருப்பதே ஒரு தகமையாகக்கூட கருதப்பட்டது. (பட்டதாரியான முன்னாள் பா.உ.துரைரத்தினம் தன்னை ஒரு சட்டத்தரணியாக்கிக் கொண்டார்) தற்போது தமிழ் மக்களின் போராட்டம் பரிணமித்துள்ளதால் இந்நிலை சற்றுக் குறைந்திருந்தாலும் முற்றாக நீங்கியுள்ளது எனக் கூறமுடியாது. ஆங்கிலத்தில் கையொப்பமிடுவதை பெருமையாக இன்றும் தமிழர்களில் பலர் கருதுவது இதனை எடுத்துக்காட்டுகிறது.

மொழி என்பது ஒரு சமூகத்தின் உயிர்நாடி. அது ஒரு சமூகத்தை சமூகமாக இயங்கச் செய்கின்றது. சிந்தனையைச் சீராக்குகின்றது. இச்சீராக்கத்தின் வழி சமூகத்தின் உற்பத்தி ஆற்றலை வளர்க்கின்றது. ஆங்கில மொழியின் அறிமுகம் எமது சுதேசிய சமூகங்களை சீரழித்தது அதன் சிந்தனையாற்றலை சீரழித்தது. விளைவு எமது சமூகம் தனக்கான சுயம், சுயத்துக்கான தேடல் என்பவற்றில் நீண்டகாலம் பின்தங்கி விட்டது.

* * * *


சேர். பொன். அருணாசலம்



இது வரையான இதழ்களில் கோல்புறூக் அரசியற் திட்டத்தைப் பற்றியும், இனப்பிரச்சினையில் அதன் பாதிப்புப் பற்றியும் இலங்கையில் பேரினவாதத்திற்கான அடித்தளம் இவ்வரசியற் திட்டத்தின் மூலமே இடப்பட்டது என்பதையும் அவ்அடித்தளம் இலகுவில் குலையாத அளவுக்கு பலமானதாக இருந்தது என்பதையும் கவனித்தோம். தொடர்ந்து வந்த அரசியற் திட்டங்கள் அப்பேரினவாதத்தை வளர்க்கும் பணியில் ஈடுபட்டன. இவ்வளர்ச்சிப் போக்கில் ஒவ்வோர் அரசியல் திட்டமுமே தமது பங்களிப்பை வழங்கியிருந்தன. அப்பங்களிப்புகள் எவ்வாறு இருந்தன என்பதை அடுத்தடுத்த இதழ்களில் பார்ப்போம்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சுவிஸ் அரசியல் யாப்பை ஏன் கருத்தில் கொள்ளக்கூடாது?

**எஸ். சுந்தரலிங்கம்**

'அரசியல் யாப்பு சீர்திருத்தக் கழகம்' என்ற பெயரில், கனேடிய அரசாங்கத்தின் உதவியுடன் ஒரு கழகம் இயங்கி வருகின்றது. அரசியல் யாப்பு தொடர்பான கருத்தரங்குகளை மும்மொழிகளிலும் இக் கழகம் நடாத்தி வருவதாகக் கூறப்படுகின்றது. கடந்த 21.02.94 அன்று லங்கா ஒபரோய் ஹொட்டேலில் நடைபெற்ற 'இலங்கையின் அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கான ஓர் உருவரைவு' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பான சில குறிப்புகளை எழுதுவது அவசியம் என்று தோன்றுகிறது. ஜனாதிபதி அல்லது பாராளுமன்றம் தொடர்பான அம்சங்கள், நீதித்துறையும் மனித உரிமைகளும், வடக்குக் கிழக்குப் பிணக்கினை (?) தீர்த்து வைக்கக் கூடிய அரசியல் யாப்பு சீர்திருத்தமும் அரசியல் தீர்வும் பாராளுமன்றம் மற்றும் இரண்டாவது மன்றத்தின் உறுப்பினரது பங்கு என்ற நான்கு தலைப்புக்களில் இக் கருத்தரங்கு நடைபெற்றது. எந்த விதமான திட்டமிடலோ, பொறுப்புணர்வோ இன்றி அவசரக் கோலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை, தனித்தனியாகக் கவனிப்பது சிறப்பாக அமையும் என்று நினைக்கின்றேன்.

கருத்தரங்கில் முதலாவது அமர்வு ஏற்கனவே குறிப்பிட்டபடி 'ஜனாதிபதி அல்லது பாராளுமன்றம் தொடர்பான அம்சங்களாக' இருந்தது. இதற்கு கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பீடத் தலைவர் சொ. சந்திரசேகரன் தலைமை தாங்கினார்.

உரையாற்றுபவராக கொழும்பு பல்கலைக் கழக விரிவுரையாளர் கீத பொன்கலனின் பெயர் இடப்பட்டிருந்த போதும் அவர் வராததினால் பதில் உரையாற்ற வந்த 'மோர்ஜ்' செயலாளர் பாலகிருஷ்ணனே பிரதான உரையையும் ஆற்றினார்.

இவர் தனது உரையில் ''1978ம் ஆண்டு அரசியல் திட்டம் இலங்கை அரசியல் சக்திகளை ஜனாதிபதி முறையை ஆதரிப்போர், பாராளுமன்ற முறையை ஆதரிப்போர் என இரு சக்திகளாகப் பிரித்து விட்டது என்றும், ஆனால் இன்று அதுவல்ல பிரச்சினை இலங்கையின் பல்லினப்பாங்கையும், சமூக யதார்த்தங்களையும் புரிந்து கொள்ளக் கூடிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவதே இன்றுள்ள பிரதான பிரச்சினை என்றும் குறிப்பிட்டார்.

இதற்கு ''உருவாக்கப்படும் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் அதிகாரவாதத் தன்மையை மாற்றி ஜனநாயகத் தன்மையை வளர்த்தல், பேரினவாத கருத்தியல் நிலைப்பாட்டிலிருந்து விடுபடுதல் எனும் அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும்'' என்றும் குறிப்பிட்டார்.

''பல்லினத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், பேரினவாதத் தன்மையிலிருந்து விடுபடுவதற்கும், சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சமஷ்டி ஆட்சிமுறை உகந்ததாக இருக்கும்'' எனவும் குறிப்பிட்டார். உருவாக்கப்படும் அரசியலமைப்பில் சிறுபான்மையோருக்கு அவர்களது பிரச்சினை தொடர்பாக மறுப்பாணை அதிகாரம் (VETO POWER) இருக்க வேண்டும்'' எனவும் அவர் குறிப்பிட்டார்.

விடயம் கலந்துரையாடலுக்கு விடப்பட்ட போது கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஆசிரியர் ஜோதிலிங்கம் உரையாற்றுகையில் ''இன்று இலங்கை அரசியலில் சிங்கள பௌத்த பேரினவாதக் கருத்தியல் மேலாதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் நடைமுறையில் இருக்கும் ஜனாதிபதி முறையோ அல்லது ஏற்கனவே நடைமுறையில் இருந்த பாராளுமன்ற அரசாங்க முறையோ சிறுபான்மையோரைப் பொறுத்த வரையில் பயனளிக்கப் போவதில்லை என்றும், சிறுபான்மை இனங்களுக்கு அதிகாரங்களை பங்கிட்டு கொடுப்பதாக உள்ள, அதேவேளை அவ் அதிகாரங்களை மத்திய அரசாங்கம் பறிக்காமலும் இருக்கின்ற ஒரு அரசியல் யாப்பே சிறுபான்மையோரைப் பொறுத்தவரை பயனளிக்கக் கூடியதாக இருக்கும்'' என்றும் குறிப்பிட்டார். முன்னாள் கல்வி அதிகாரி முகமது சமீம் பேசுகையில் ''பெரும்பான்மை இனத்து இரு பிரதான கட்சிகளிடையேயும் இருக்கும் முரண்பாடுகளை சிறுபான்மை இனங்கள் பயன்படுத்துவதன் மூலம் தங்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம்'' என்றார். இக்கூற்றை மறுத்து ஆசிரியர் ஜோதிலிங்கம் கருத்து தெரிவிக்கையில் ''இன்று ஐக்கிய தேசியக் கட்சியோ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ ஆட்சி செய்யவில்லை. சிங்கள பௌத்த பேரினவாத கருத்தியலே ஆட்சியில் உள்ளது என்றும், இவ்விரு கட்சிகளும் அதற்கு அடிமைப்பட்டவர்களாக உள்ளமையினால் ஒரு எல்லைக்கு அப்பால் இவ்விரு கட்சிகளுக்கிடையேயுள்ள முரண்பாட்டை பயன்படுத்த முடியாது என்றும் இதனால் முரண்பாடுகளைப் பயன்படுத்துவதில் எவ்வித பயனும் இல்லை. அதிகார பங்கீட்டுடன் கூடிய அரசியல் யாப்பை வரைவதே ஒரே வழி என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய முகம்மது சமீம் ஆசிரியரது கருத்தோடு தான் உடன்படுவதாகவும் எனினும் பிரதான கட்சிகளிடையேயான முரண்பாடுகள் இலங்கை அரசியலில் சிறுபான்மை இனங்கள் செல்வாக்கு செலுத்த உதவுவதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

தலைமை வகித்துப் பேசிய சந்திர சேகரன் கருத்துத் தெரிவிக்கையில் ''ஒப்பீட்டு ரீதியில் ஜனாதிபதி முறை பேரம் பேசக் கூடிய சிறிய நலனை சிறுபான்மையினருக்கு அளிக்கின்றது'' எனக்குறிப்பிட்டார்.

கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர் என்.செல்வகுமாரன் கருத்துத் தெரிவிக்கையில் ''இரு முறைகளிலும் அதிகாரப் பகிர்வை வழங்கலாம் என்றும், ஆனால் இரண்டும் தான் தோன்றித்தனமாகச் செயற்படுவதை தடுப்பதற்கு கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும் என்றும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்புகளில் அவை இருக்கவில்லை'' என்றும் குறிப்பிட்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர் கோபாலகிருஷ்ணன் கருத்துத் தெரிவிக்கையில் ''ஜனாதிபதியை பதவி நீக்கும் முறையை இலகுவாக மாற்ற வேண்டும் என்றும், பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அவரிடமிருந்து நீக்கப்பட வேண்டும்'' என்றும் குறிப்பிட்டார்.

சரி இனி முதலாவது அமர்வில் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் பற்றிய எனது விமர்சனத்துக்கு வருகின்றேன்.

என்னுடைய அவதானிப்பின் படி முதலாவது அமர்வில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் இரு பிரதான குறைபாடுகளைக் கொண்டுள்ளன எனக் கருதுகின்றேன்.

1. முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் ஆழமானவையாகவோ, திட்டவட்டமானவையாகவோ இருக்கவில்லை. மாறாக மேலோட்டமானவையாக இருந்தன.

2. புதிய முறைகள் பற்றிச் சிந்திக்கப்படவில்லை. பழையமுறைகளை திருத்துவதிலேயே கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

தற்போதய நிலையில் இலங்கையின் மைய அரசியல் பிரச்சினை இனப் பிரச்சினையே. இவ்வினப்பிரச்சினை இலங்கையின் பல்லினத்தன்மையை மறுத்து பேரினவாதம் மேலாதிக்கம் செலுத்துவதால் ஏற்பட்டுள்ளது. எனவே உருவாக்கப்படும் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் எந்த விடயத்திலாயினும் பல்லினத்தன்மையை ஏற்றுக் கொண்டதாக இருக்க வேண்டும். இம் முடிவு திட்டவட்டமானதாக இருக்க வேண்டும். இம் முடிவினை அடிப்படையாக வைத்தே நடைமுறையில் இருந்த, நடைமுறையில் இருக்கின்ற அரசியல் யாப்புகள் பரிசீலிக்கப்பட்டிருக்க வேண்டும். அரசியல் யாப்புத் திருத்தம் தொடர்பான சிபார்சுகளை முன்வைத்திருக்க வேண்டும். அத்தோடு நாட்டின் துணைப்பிரச்சினையாக வளர்ந்துள்ள அதிகாரவாத தன்மையை மாற்றி ஜனநாயக தன்மையை ஏற்படுத்துதல் தொடர்பாக என்ன மாற்றங்களைச் செய்யலாம் என்பது பற்றிய கருத்துக்களையும் திட்டவட்டமாக கூறியிருக்க வேண்டும்.

கருத்தரங்கில் இவைபற்றிக் கூறப்பட்டிருந்தாலும் அவை மேலோட்டமானதாக இருந்ததே தவிர திட்டவட்டமானதாகவோ ஸ்தூலமானதாகவோ, கூறப்படவில்லை. இந்த வகையில் கருத்தரங்கு உரைகள் பின்வரும் விடயங்களை திட்டவட்டமாக கூறியிருக்க வேண்டும் எனக் கூறுகின்றேன்.

(1) இலங்கையின் தற்போதைய மைய அரசியல் பிரச்சினை இனப்பிரச்சினையே ஆகும் என்பது உறுதியாக்கப்பட வேண்டும்.

(2) அரசியல் யாப்புத் திருத்தம் பல்லினத் தன்மையை ஏற்றுக் கொண்டதாக இருக்க வேண்டும். அதற்கு தற்போதய அரசியல் யாப்பிலுள்ள பின்வரும் விடயங்கள் நீக்கப்பட வேண்டும்.

அ. இலங்கை ஓர் ஒற்றையாட்சி நாடு என்ற நிலை நீக்கப்பட வேண்டும்

ஆ. பௌத்த மதம் அரசமதம் என்பது நீக்கப்பட வேண்டும்.

இ. சிங்கள மொழியின் மேலான தன்மை நீக்கப்பட்டு சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும்.

ஈ. சிறுபான்மையோரின் தலைவிதியை பெரும்பான்மையினத்தை சேர்ந்தவர்கள் நிர்ணயிக்கும் அமைப்பு வடிவம் நீக்கப்பட வேண்டும்.

உ. சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே நாட்டின் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் வரலாம் என்கின்ற நிலை நீக்கப்பட வேண்டும்.

புதிய முறைகள் பற்றிச் சிந்திக்கப் படவில்லை என்ற குறைபாடு மிகுந்த கவனத்திற்கு எடுக்கவேண்டிய குறைபாடு என்று நினைக்கின்றேன். அரசியல் யாப்பு சீர்திருத்தம் பற்றிச் சிந்திப்பவர்கள் அனைவரும் பழைய முறைகளைப் பற்றிச் சிந்தித்து அதில் திருத்தம் காண்பதற்கு முயல்கின்றார்களே தவிர ஏன் புதிய முறைகளைப் பற்றிச் சிந்திக்கின்றார்கள் இல்லை என்பது பிரதானமான கேள்வி. இது தொடர்பாக சுவிஷ் அரசியல் யாப்பையும் சோவியத் யூனியனின் அரசியல் யாப்பில் காணப்பட்ட நல்ல அம்சங்களையும் ஏன் நாம் கவனத்தில் கொள்ளக்கூடாது?

சுவிஸ் அரசியல் யாப்பில் பிரதேசங்கள் தேசிய இனங்களின் சுய நிர்ணய அடிப்படையில் சுயாட்சி அரசுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் நிர்வாக அதிகாரம் 7 பேரைக் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிர்வாகக்குழுவில் அங்கு வாழும் எல்லாத் தேசிய இனங்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றனர். வருடத்திற்கு ஒருவராக 7 பேரும் மாறிமாறி நிர்வாகக்குழுவின் தலைவராக கடமையாற்றுகின்றனர். இதனால் மிகச் சிறிய வீதத்தில் வாழும் இத்தாலி மொழி பேசும், இனத்தின் பிரதிநிதி கூட நாட்டின் தலைவராக வரக்கூடிய நிலை உள்ளது. இம்முறையினை இலங்கையில் அறிமுகப்படுத்துவதுபற்றி ஏன் சிந்திக்கக்கூடாது? இலங்கையில் இதனை அறிமுகப்படுத்தின் இலங்கையில் நான்காவது இடத்தில் இருக்கும் இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர் கூட நாட்டின் ஜனாதிபதியாக வரலாம்.

தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை சோவியத் அரசியல் அமைப்பிலும் கூட நல்ல அம்சங்கள் காணப்படுகின்றன. அங்கு சிறிய சிறிய தேசிய இனங்கள் கூட தங்கள் நிர்வாகத்தைத் தாங்களே நடாத்தக் கூடிய வகையில் சுயாட்சி அமைப்புகள் சுயாட்சி உள்ளமைப்புகள் என்பன உருவாக்கப்பட்டுள்ளன. சட்ட ஆக்க சபையான சுப்ரீம் சோவியத்தின் இரண்டாவது சபை எல்லாத் தேசிய இனங்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே சோவியத்தின் இவ் அம்சங்களையும் இலங்கையின் அரசியல் யாப்பில் சேர்த்து இனப்பிரச்சினையை தீர்க்க ஏன் முற்படக்கூடாது.

ஒன்றை மாத்திரம் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். விருட்சமாக வளர்ச்சி பெற்றிருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அரசியல் யாப்பை உருவாக்க வேண்டுமே தவிர இருக்கின்ற அரசியல் யாப்புக்கு ஏற்ப இனப்பிரச்சினையைக் கொண்டுவர முடியாது விரலுக்கு ஏற்ற வகையில் மோதிரத்தை உருவாக்க வேண்டுமே தவிர விரலை வெட்ட முடியாது. இன்று அரசியல் யாப்பு திருத்த முயற்சியில் ஈடுபடுபவர்கள் எல்லாம் மோதிரத்துக்கு ஏற்ற வகையில் விரலை வெட்டுவதற்கான முயற்சிகளிலேயே ஈடுபடுகிறார்கள். இம்முயற்சியைத்தான் இவர்கள் தொடர்ச்சியாக செய்வார்களாயின் நீண்டகாலத்திற்கு இலங்கை ஒரு நாடாக இருக்கப் போவதில்லை விரைவில் அது பல நாடுகளாகிவிடும்.

(மீதி அடுத்த இதழில்)

## சூரியன் உச்சிக்கு ஒரு சாண் மேல்



ஆணியும் கயிறும் இல்லாமல்
சும்மா தொங்கிற நிலாப் பந்தும்
நானும்

ஒரு தாளில் சிறிது
உயிர் வைத்தனுப்பியிருக்கலாம் நீ

எதிரில் அசைகிற வாகைக் கந்துகள்
முட்பற்றைச் சவநிலம்
வானக் கறுப்பு ஒன்றும் தெரியுதில்லை
கண்களை உதிர்த்துப் போட்டிருக்கிறேன் உன்
தபால் வரும் திசையில்.

ஆனாலும் நெஞ்சழுத்தந்தான் உனக்கு

காகம் சிறகடிக்கின்ற இமைகளும்
செவியைச் சிலிர்த்தும் குரலொலியும்
விடாமல் அரிக்குது உள்ளே

புதைந்திட்ட கால்கள்
பால் தெறிக்கும் இக் குருத்து மணலில்
கடுக்காத சுட்டு விரல்
அலுத்திடாமல் உன்
பெயரெழுதித் தொடரும் என் அன்பே!

வாசல் படிக்கட்டருகில்
சோர்ந்திட்ட வெட்கங் கெட்ட ரோசாப்பூ
என் முகம்

சுவரில் சாய்கிறேன்
பிறவற்றில் லயித்திடா மனம்
மையப் புள்ளியாய் நீயிருக்கும்
ஆரையற்ற பரிதியில் சுழன்று சுழன்று.

இனியாகிலும் நாலுவரி
அல்லது
உன் பெயரை மட்டும்
எழுதிப் போடு
காய்ந்திட்ட என் தொண்டைக்குள் குளிர்நீர்
அது ஊற்றும்

என். ஆத்மா

# இவர்கள் இப்படிச் சொன்னார்கள்

இந்த அரசாங்கம் தேர்தல்களை கேலிக் கூத்தாக்கிவிட்டது. நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நீதி நியாயமாக நடைபெற்ற ஒரு தேர்தலாக ஏற்றுக் கொள்ள முடியாது. அந்தளவுக்கு தேர்தல் மோசடிகளும் வன்செயல்களும் நடைபெற்றுள்ளன.

**கேதீஸ்வரன்**

**ஈ.பி.ஆர்.எல்.எப்**

அரசும் ஆயுதப் படைகளும் பொலீசும் தேர்தல் முறைமைகளில் நேரடியாகவே தலையிடுவார்கள் என்று நாம் கொண்டிருந்த தகவலை வேட்பு மனுத் தாக்கல் மற்றும் வாக்களிப்பு முறைமைகளின் போதும் இடம்பெற்ற மிரட்டல் சம்பவங்கள் மற்றும் ஏனைய தேர்தல் துஸ்பிரயோக நடவடிக்கைகளின் போதும் ஊர்ஜிதம் செய்யக் கூடியதாயிருந்தது.

**ரீ.தங்கத்துரை**

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

அமைச்சர் சிறிசேன கூரே விடுத்துள்ள அறிக்கையில் சுயேட்சை தமிழ்க் குழுக்களாகப் போட்டியிட்டவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினுடைய ஆதரவாளர்கள் என்றும் ஆகையால் அக்குழுவுக்கு விழுந்த வாக்குகள் ஐ.தே.கட்சிக்கே விழுந்த வாக்குகளாகக் கணிக்க வேண்டும் என்றும கூறியிருக்கிறார். அமைச்சர் சிறிசேன கூரேயின் கூற்றுப்படி ஐக்கிய தேசியக் கட்சி என்ற மரத்தில் படரும் கொடிகள் தமிழ்க் குழுக்கள் என்பதை இத் தேர்தல் இனங் காட்டியுள்ளது என்றே கொள்ள வேண்டும்.

**குமார் பொன்னம்பலம்**

**தமிழ்க் காங்கிரஸ்**

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் நடைபெற்ற தேர்தல் முற்று முழுதான ஒரு மோசடியே. தமிழ்க் கட்சிகள் என்றழைக்கப்படும் அனேகமான அமைப்புகள் அரசாங்கத்திடமிருந்து ஆயுதங்களையுந் வேறு உதவிகளையும பெற்று வந்துள்ளன.

**வாசுதேவ நாணயக்கார**

**நவசமசமாஜக் கட்சி**

'இந்தத் தேர்தலில் அரசாங்கத்திற்கு எதிரான தங்கள் உணர்வுகளை மக்கள் தெளிவாகக் காட்டி உள்ளார்கள். எமது வெற்றியின் மூலம் மக்கள் தமது தலைமையை எம்மிடம் ஒப்படைத்துள்ளார்கள். எமது மண்ணில் எமது மக்களின் இன்ப, துன்பங்களில் பங்கு கொண்டு, எத்தகைய நெருக்கடிகள் ஏற்பட்டாலும் அவற்றை எதிர் கொண்டு, மக்களை வழி நடத்தி, அவற்றிற்குத்தகுந்த தீர்வு காண்போம்.''

**அ.செல்வம்**

**தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர்**

தமிழ் பேசும் மக்கள் பேரினவாதக் கட்சிகளை நிராகரித்திருக்கிறார்கள் என்பதையே நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. முஸ்லீம் காங்கிரஸ் தனது நோக்கத்தில் 70 சதவீதம் வெற்றி பெற்றுள்ளது.

**எம்.எச்.எம்.அஷ்ரப்**
**முஸ்லீம் காங்கிரஸ்**

ஐ.தே.க. அரசாங்கத்தின் இனப்பிரச்சினை தொடர்பான கொள்கைகளுக்கும் அணுகுமுறைகளுக்கும் எதிரான இவ்வெற்றியைத் தமிழ் மக்களுடைய வெற்றியாகவே கருகின்றோம்.

**சித்தார்த்தன்**

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்**

எமக்கு கிடைத்த வாக்குகள் ஒவ்வொன்றுமே வடக்கு-கிழக்கு இணைப்பைத் துண்டிப்பதற்கு எதிரானதே. அத்துடன் வடக்கு -கிழக்கில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சினை இல்லை, இனப்பிரச்சினையே என்பதை வெளிப்படுத்தும் வாக்குகளாகவும் அவை விளங்குகின்றன.

**சுதா மாஸ்டர் -**
**ஈரோஸ்**

பலர் தேர்தலை நடாத்துவதை எதிர்த்த போதும் அரசு தேர்தலை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளதென்பது அரசுக்குக் கிடைத்த வெற்றியே.

**ராஜாங்க அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன்.**

**ஐ.கே.கட்சி**

வவுனியாவிலும் கிழக்கிலும் பல இடையூறுகளுக்கு மத்தியில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடாத்தி முடித்திருப்பதே அரசாங்கத்திற்குப் பெரு வெற்றியாகும். கிழக்கு மாகாணத்தில் போட்டியிட சுயேட்சைக் குழுக்களும் ஐ.தே.க. அரசுக்கு ஆதரவானவையே. எனவே அவற்றுக்கு வாக்களித்தவர்களும் எமக்கு ஆதரவானவர்களே.

**அமைச்சர் சிறிசேனகூரே**
**ஐ.தே.க**

அதிப்படியான மக்களின் நம்பிக்கையைப் ஐ.தே.கட்சியே பெற்றுள்ளது. என்பதனை கிழக்கு மற்றும் வவுனியா பிரதேச மக்கள் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

**பிரதம மந்திரி ரணில்**

## கடல்...

என்பவற்றுக்குப் பலியாகியுள்ளனர். 60ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும், தெய்வாதீனமாகவும் உயிர் தப்பியிருந்தார்கள்.

மன்னார் தொடக்கம் திருகோணமலை வரையிலான கடற் பிரதேசத்தில் இந்த கடல் வல... ...டைச் சட்டம் நீக்கப்பட இருப்பதாகத் தெரிவித்து மார்ச் முதலாம் திகதி ...தொடக்கம் இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரண உலர் உணவு விநியோகமும், புனர்வாழ்வு அமைச்சின் பணிப்புரையை அடுத்து நிறுத்தப்பட்டது.

முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி( சுண்டிக்குளம்- பூனைத் தொடுவாய் பகுதி) மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் முதலாம் திகதி தொடக்கம் 10,12 மைல் தூரம் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடத் தொடங்கியுள்ளதாக மீன்பிடித்துறை சார்ந்த வடபகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால், வடபகுதியின் கடல் வலயத் தடைச் சட்டம் நீக்கப்படுவது குறித்து பாதுகாப்பு அமைச்சு இறுதித் தீர்மானம் எதனையும் இன்னும் மேற்கொள்ளவில்லை எனவும், இதனால் இந்தத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை எனவும் வெளியாகியுள்ள புதிய அரசு தரப்புத் தகவல் வடபகுதி மீனவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

நிவாரண உணவும் இல்லை. மீன்பிடித் தொழிலும் இல்லை என்ற நிலையில் இருதலைக் கொள்ளி எறும்பாக வடபகுதி மீனவர்கள் இப்போது தவிக்கின்றார்கள்.

## போடு புள்ளடி...

ஆதரவாளர் எனக் கைது செய்யப்படுவர் என அதிரடிப்படை பொறுப்பதிகாரி மக்களைப் பயமுறுத்தியுள்ளார். மேலும் ஒவ்வொருவரும் யாருக்கு வாக்களித்தார்கள் என்பது தமக்கு தெரியவரும் என்று மிரட்டியதால் அச்சத்தினால் மக்களில் பெரும்பாலானோர் ஐ.தே.க.வுக்கு வாக்களித்துள்ளனர்.

ஆரையம்பதியில் அமைந்த வாக்குச் சாவடியில் காவலுக்கு நின்ற பொலிஸாருக்கு ரெலோ சார்பு சுயேட்சைக்குழுவினர் சாராயம் வாங்கிக் கொடுத்து கள்ள வோட்டுப் போட்டுள்ளனர். அத்தோடு கடமையில் நின்ற தேர்தல் அதிகாரிகளும் கையில் மைபூசாமல் மீண்டும் மீண்டும் வாக்களிக்கத் தூண்டியுள்ளனர்.

வந்தாறுமூலையில் வாக்களிக்கச் சென்ற பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரை படையினர் வாக்களிக்க விடாமல் தடுத்ததுடன் அவரது வாக்கையும் அவர்களே போட்டுள்ளனர்.
ஆறுமுகத்தான் குடியிருப்பு, செங்கலடி ஆகிய இடங்களில் உள்ள்வாக்குச் சாவடிகளுக்கு சென்ற பொலிஸார் வாக்களிக்க நின்றவர்களை அடித்துக் கலைத்துவிட்டு வாக்களிப்பு நிலையத்துள் புகுந்து வாக்களிக்கும் தாளை பலவந்தமாகப் பதித்து எல்லாவற்றிலும் தாமே ஐ.தே.க.க்கு புள்ளடி போட்டுள்ளனர்.

''ரெலோ சார்பு சுயேட்சைக்குழு தலைமை வேட்பாளர் செழியன் பேரின்பநாயகம் வாக்களிப்புச் செய்துவிட்டு வெளியே வரும் போது 'இராணுவமும், பொலிஸாருமே தேர்தலை நடத்துகின்றனர். தேர்தல் தொடர்பாக ஏற்கனவே பிரிகேடியருடனும் அரசாங்க அதிபருடனும் கதைத்தவை பயனற்றுப் போய்விட்டன. இந்நிலையில் நாங்களும் நடைபெறும் தேர்தலில் நம்பிக்கை அற்றவர்களாகவே உள்ளோம்' எனக் கூறியிருந்தார்.''

வவுணதீவுப் பகுதியில் புளொட், ரெலோ சார்புக் குழுவினருக்கு வாக்களித்தார்கள் என்ற காரணத்தில் சிலர் தாக்கப்பட்டுள்ளனர். இவர்களைத் தாக்கியவர்கள் புளொட்டிலிருந்து விலகி தராசுசின்னத்தில் போட்டியிட்ட சுயேட்சைக்குழுவினர் எனத் தெரிய வந்துள்ளது. அடிபட்டவர்கள் புளொட்டிடம் முறையிட்டதனால் இப்போ இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொல்வதற்கு தடிபொல்லுகளுடன் உலாவி வருவதாக தெரிவருகிறது.

## இயக்க...

வெளியேறத் தொடங்கியதால் ஏற்பட்ட வேலையிழப்பு தொழிலாளர்களை மத்திய அரசுக்கு எதிராகத் திருப்பி விட்டது. இந்த அதிருப்தியாளர்களிலிருந்து எழுந்த முதல் இயக்கம் ELM (Eritrean Liberation movement) 1958 இல் சூடான் பக்கத் துறைமுகத்தில் வேலை செய்த சோமாலியத் தொழிலாளர்களைக் கவர்ந்திழுத்தது. நகரங்களில் எழுவர் கொண்ட குழுக்களை இது நிறுவியது. இவை மோசமாக நசுக்கப்படவே தலைவர் ஆயுதப் போராட்டத்தை நம்பத் தொடங்கினார். (1965)

ஆனால் இந்த முயற்சிக்குப் போட்டியாக வந்தது ELF . 1960 களில் அரபு நாடுகளிலிருந்த தொழிலாளர், மாணவர்கள் மத்தியிலே வளர்ந்திருந்த இந்த இயக்கம் நாசரின் அன்பையும் பெற்றிருந்தது. தன்னுடைய பரந்த அரபுவாதக் கொள்கைக்கு நல்ல ஆயுதமாக இதனைப் பாவிக்க நாசர் கருதியிருந்தார். பூரண ஆதரவும் இராணுவப் பயிற்சியும் ELFக்குக் கிடைத்தன. சூடானும் அயலவன் என்ற முறையில் ELFக்கு உதவ முன்வந்தது. ஆரம்பத்தில் ELF இன முகாம்கள் சூடானின் கரையோரம் அமைந்திருந்தன. இது தனது செயற்பாடுகளை ஐந்து வலயங்களாகப் பிரித்ததுடன் ஒவ்வொன்றுக்கும் குறிப்பிடப்பட்ட பணியையும் விதித்தது. இயக்கத்திற்குள் மதவாதமும் பிராந்திய, சுதேசியக் குழுவாதமும் நிலைத்து விட்டன. இரண்டு கிறிஸ்தவ போராட்டக் குழுத் தலைவர்கள் கொலையுண்டனர். இதையடுத்து கிறிஸ்தவ வீரர்கள் பலர் விலகி மத்திய அரசுடன் இணைந்தனர். சகோதரப் படுகொலைகள் ஆரம்பமாகின.

பிரிவினை இயக்கங்களுள் மிகப்பழையது ELF . இதன் தலைவராக 1982 வரை இருந்தவர் கியூபாவில் பயிற்சி பெற்ற அகமட் நாசர். ஆனால் இவர் எரிட்றிய இனத்தவரல்ல. சிறுபான்மை இனமான சாஹோ இனத்தவர். இவரது இயக்கமே பின்னர் இவரைத் தமது சூடானிலுள்ள முகாமில் தடுப்புக் காவலில் வைத்து விட்டுப் புதிய மிதவாத தலைமையைக் கொண்டு வந்தது. உட்கட்சிப் போராட்டமும் அன்றே ஆரம்பித்துவிட்டது.

எரிட்றியப் போராட்டத்துக்கான முதலாவது வேட்டு 1961 செப்டம்பர் முதலாந்திகதி தீர்க்கப்பட்டது. ஆனால் வெளிநாட்டு உதவி 1964 இல் வரத் தொடங்கியது. முதலாவது உதவி சிரியாவிலிருந்து 20 ரைபிள் வடிவத்தில் வந்தது. அப்போது ELF இன் இராணுவப்பலம் 250 உறுப்பினர்கள் மட்டுமே, கிராமப்புற இளைஞர்களை இது சேர்க்கத் தொடங்கியது. சூடான், எகிப்திலுள்ள இளைஞர்கள் சிலர் தமது எரிட்றியத் தொடர்பு காரணமாக உதவத் தொடங்கினர். ஆரம்பம் முதலே இதற்குத் திட்டவட்டமான அரசியற் கொள்கை இருக்கவில்லை. இயக்கத்தில் கட்டுப்பாடும் அவ்வளவாக இல்லை. 'இயக்கத்தை விடத் துப்பாக்கிக்கு முன்னுரிமை கொடுத்ததே எமது தவறென்' இதன் முன்னாள் தலைவரும் பின்னாள் எதிரியுமான ஓஸ்மான் சாலி சாபே முன்கூட்டியே கூறியிருந்தார்.

இயக்கத்தினுள் படித்தவர்களும் அரசியலறிவுள்ளவர்களும் சேரத் தொடங்கியதும் தலைமைக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகரித்தன. ஜனநாயகப்படுத்தல், கோட்பாட்டுரீதியில் போராட்டத்தை முன்னெடுத்தல் என்று பேசியவர்களை த்லைமை இம்சைப்படுத்தத் தொடங்கியது. பிராந்தியத் தளபதிகள் ஐவரிடையேயும் பிரதேச, மதரீதியில் முரண்பாடுகள் தோன்றிவிட்டன. எதியோப்பியாவின் முதலாவது பாரிய நடவடிக்கை 1967 இல் மேற்கொள்ளப்பட்டமைக்கு -இந்தப் பலவீனமே காரணமாகும் என முன்னணித் தலைவர்கள் கூறுகின்றனர். ஏராளமான மக்கள் சூடானில் அகதிகளாகப் போய்ச் சேர்ந்தனர். இரண்டு வருட சமரச முயற்சிகள் தோல்வியில் முடிவடைய இயக்கத்திலிருந்து 1969 இல் மூன்று பிரிவினர் வெளியேறி தனித்தனியாக குழுக்களை உருவாக்கினர். ஆனால் பிளவுக்கு கிறிஸ்தவ -முஸ்லீம்மதவாதம் அடிப்படையல்ல என்பது ஆரோக்கியமான விசயம்.

1970 இல் இந்த மூன்று குழுக்களுள் இரண்டு ஒன்றிணைந்து 'எரிட்றிய மக்கள் விடுதலை முன்னணி' (EPLF) என்பதை உருவாக்கின. மூன்றாவது குழுவும் காலப்போக்கில் EPLF உடன் சங்கமித்துவிட போட்டி ELF க்கும் EPLF க்குமிடையிலாகத் தீவிரமடைந்தது. ELF தனது தலைமைக்குழுவை ELF -புரட்சிச் சபை' என மாற்றிக் கொண்டது. 1972 -75 க்கு இடைப்பட்ட காலத்தில் இயக்க மோதல் தீவிரமடைந்தது. எரிட்றியா முழுமையாகக் குழப்பத்துக்குட்பட்டது. 1975 ஜனவரியில் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

## மட்டக்களப்பு...

இந்த ஐ.தே.க, ஈரோஸ் கூட்டமைப்பினை முன்னின்று நடத்தியவர்கள் உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளே எனத் தெரிய வருகிறது. இதன் மூலம் இந்தக் கூட்டமைப்பு அதிகாரத்தைக் கைப்பற்றினாலும் கூடப் பொலிசே அதிகாரத்தை செலுத்தும் பிரதான நிறுவனமாக விளங்கும் என்பது வெளிப்படை.

மேலும் முஸ்லீம் காங்கிரஸின் ஆதரவைப் பெற்று செழியன் தலைமையிலான குழுவினர் ஆட்சியைப் பிடிக்கும் நிலையும் உருவாகியதால் இச்சுயேட்சைக் குழுவில் உள்ளவர்களையும் எப்படியாவது விலைக்கு வாங்கி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஐ.தே.க. தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்ற நிலை செழியன் தலைமையிலான சுயேட்சைக் குழுவினருக்கும் ஏற்படப் போகிறது? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## அவ்வப்போது...

சிலர் கவிதையில் உயிரே இல்லாமல் 'சக்கை' யாகிப் போவதும் உண்டு. மற்றவர் கவிதையில் உயிர் சுடரிட்டுப் பிரகாசிப்பதனையும் காணலாம். பாலஸ்தீனக் கவிதைகள் இவ்வகையில் மிகச் சிறந்தது. இதற்குச் சில உதாரணங்கள் குறிப்பிடலாம். ஒரே கவிதை ஈழத்திலும், தமிழகத்திலும் மொழிமாற்றம் செய்யப்படும் போதே பாரிய வேறுபாட்டை நான் கண்டிருக்கிறேன். கவிதையின் வடிவம் தொடர்பாகக் கவிஞர்களிடம் இருந்த பிரக்ஞையும் இதற்குக் காரணமாகும்.

இத் தொகுப்பின் மிகச் சிறப்பான அம்சம் என்று நான் கருதுவது பல்வேறு பொருள்களைக் கொண்டமைவது. பெண்நிலைவாதக் கவிகள் அதிகம் இருக்கின்றன. ஸ்டாலின் காலத்து ஒடுக்குமுறைக்குள்ளான கவிஞர்களின் கவிதைகளும் உண்டு.

' உடைந்த நிலா' என்று ஒரு கவிதை உடலூனத்துடன் பிறந்து வளர்ச்சி குன்றிய மகளைப்பற்றிய கவிதை.

''பத்தாண்டுகளுக்கு முன்
அவளைத் தாலாட்டியவாறு
வானத்திலுள்ள வெள்ளிக்கீற்றை
அவளுக்குக் காட்டினேன்.
நிலா உடைந்தது' என்றாள் அவள்.''

இத்தொகுப்பின் குறைபாடு என்னவென்றால் உறுத்துகின்ற, இயல்பில்லாத அதன் தமிழாக்கம் தான். பல இடங்களில் வசன நடையாக உள்ளது.

ஆனால், இவ்வாறான தொகுப்பு எமக்கு அவசியம்.

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்

## வெள்ளை வான் வரும் என்கிறார் ஐ.தே.க. அமைப்பாளர்

26ம் திகதி தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை நிறுத்திவிட வேண்டுமென தேர்தல் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் ஐ.தே.க.வின் திருமலை எம்.பியான யோசப் மைக்கல் மற்றும் ஐ.தே.க அமைப்பாளர் திருமதி. ரஞ்சனி சேனசிங்க என்போர் தேர்தல் அன்று வரை (1ம் திகதி) பிரச்சாரங்களை நடத்தினர். உதாரணத்திற்கு 1ம் திகதி ஐ.தே.க. வேட்பாளரான சந்திரதாச விஜேசூரிய அவரது வாகனமான (31.ஸ்ரீ 2218) வெள்ளை நிற வானில் துண்டுப்பிரசுரம் விநியோகித்தல், சத்தம் போட்டு பிரச்சாரம் செய்தல் என்பவற்றில் ஈடுபட்டார். அதே வேளை 1ம் திகதி வாக்களிப்பு நிலையங்களின் அருகிலேயே ஐ.தே.க தம்பலகாமம் பிரதேசசபை வேட்பாளர் சந்திரசிறியின் கட் அவுட்கள் காணப்பட்டன. (உ+ம் அபேபுர, லவ்லேன் வாக்களிப்பு நிலையங்கள்) இவை வாக்காளர்களின் மனநிலை மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவை என பேசிக் கொள்ளப்பட்டது. மேலும் மேற்படி வேட்பாளர் தேர்தல் தினத்தன்று தங்களது ஆதரவாளர்களுக்கு பல வாக்காளர் அட்டைகளை விநியோகித்து வாக்களிக்க அனுப்பிய மோசடிகளை அப்பட்டமாகக் காணக்கூடியதாக இருந்தது.

ஐ.தே.கவின் அமைப்பாளரான திருமதி ரஞ்சனி ''இப்பிரதேச சபை மட்டுமல்ல எல்லா சபைகளையும் நாங்களே வெல்வோம். எமது அரசாங்கத்தின் ஊழியராக இருந்து கொண்டு ஐ.தே.கவுக்கு எதிராக போட்டியிடும் உங்களை தேர்தல் முடிந்ததும் விரட்டி விடுவோம். அதன்பின் வெள்ளை வானுக்கு பாரமளிப்போம்'' என மிரட்டியிருக்கிறார். (வெள்ளை வான் என்பதற்கு அர்த்தம் வாசகர்கள் அறிந்ததே)

தேர்தல் முடிந்ததன் பின் திருகோணமலை நகர சபையைக் கைப்பற்றிய சுயேட்சைக்குழு (2) (ஈரோஸ், ரெலோ) உறுப்பினர்களுக்கு ''உங்களால் இரண்டு மாதங்கள் மட்டுமே ஆட்சி நடத்த முடியும்'' என திருமதி. ரஞ்சனி கூறியுள்ளார்.

மூதூர் பிரதேச சபை வேட்பாளர் ஒருவர் தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது ''மீளக்குடியமர்த்தலுக்காக வழங்கப்படும் பணம் (2000 தொடக்கம் 5000 வரை) வழங்கப்பட வேண்டுமானால் ஐ.தே.க. வுக்கு வாக்களியுங்கள்'' எனக் கூறியுள்ளார்.

ஐ.தே.கவின் வேட்பாளர் டொக்டர் ஹேமச்சந்திர தனது வாக்குறுதிகளில் ஒன்றாக ''புலிகள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களை நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் விடுதலை செய்கிறோம்'' எனக் கூறியுள்ளார். அப்படியாயின் உண்மையில் கைது செய்யப்பட்டவர்கள். புலிகள் இல்லை என உறுதிசெய்யப்பட்டால் இன்னும் அவர்கள் என்ன தேவைகளுக்குக்காக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்?

## பொலிஸார் போட்ட வோட்டுக்கள்

ஐ.தே.க.தேர்தல் வெற்றிக்கு பொலிஸ் மற்றும் படையினர் அதிகம் உழைத்தனர். மூதூர், நிலாவெளி மேற்பகுதி கப்பற்றுறை, தோப்பூர், கும்புறுப்பிட்டி இன்னும் பல இடங்களில் உள்ள தபால் நிலையங்களுக்கு பொலிஸார் சென்று வாக்காளர் அட்டைகள் சேகரித்துள்ளனர்.

திருகோணமலை மாவட்ட 'தேர்தல் ஆணையாளர் சுரேஷ் மொகமட் மேற்படி பொலிஸாரிடம் ''இந்நடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால் புகார் செய்வேன்'' எனக் கூறிய போது பொலிஸார் ''தபால் ஊழியர்கள் ஒழுங்காக விநியோகிக்கவில்லை. ஆகவே நாங்கள் விநியோகித்தோம் எனக் கூறியுள்ளனர். ஆணையாளர் அதற்கு பதிலாக ''அது உங்கள் வேலை இல்லையே'' எனக் கூறியுள்ளார்.

காவல், கண்காணிப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வாக்களிப்பு நிலையங்களுக்கு முன் நின்று ''ஐ.தே.க.வுக்கு வாக்களியுங்கள் எனக் கூறியுள்ளனர்''.

பொலிஸார் ஐ.தே.க.வுக்கு எதிரான போட்டியாளர்களை கைது செய்வதில் கொண்ட அக்கறையை ஐ.தே.க.வின் மோசடிகளில் கண்டுகொள்ளவில்லை.

இறக்கக்கண்டி மேற்பகுதியில் வேட்பாளர்கள் பலர் அகதி முகாம்களிலும், முல்லைத்தீவு, இந்தியா போன்ற இடங்களுக்கு குடிபெயர்ந்தும் உள்ளார்கள் பெருமளவு வாக்காளர்கள் அப்பிரதேசங்களில் இல்லாத நிலையில் இருந்த போதும் தேர்தல் முடிவுகளின் படி அங்கு அதிகமாக வாக்களிக்கப்பட்டுள்ளது, அவ்வாறாயின் அங்கு வாக்களித்தது யார்?

குச்சவெளி, மரங்கடவல, சேருவில போன்ற பிரதேச சபைகளிற்கு வாக்களிப்பு நிலையம் ஒன்றாக இருந்தது. இவ்வாறு ஒரு இடத்தில் இருந்தமையால் தூர இடங்களிலிருந்து மக்கள் வாக்களிக்கச் செல்ல முடியாத நிலை காணப்பட்டது. வாக்களிப்புக்காக சென்றவர்களிலும் பெண்கள், அல்லது முதியோரே காணப்பட்டனர். இளைஞர்களைக் காண்பது குறைவாகவே இருந்தது. இந்நிலையில் அங்கு வாக்களித்தவர்கள் யார்?

## கள்ளவோட்டை எதிர்த்தவர் கடத்தப்பட்டார்

சுயேட்சைக்குழு-2 என்ற பெயரில் திருகோணமலையில் போட்டியிட்ட ஈரோஸ், ரெலோ குழுவினரிற்கு தேர்தல் வெற்றிக்குப் பிறகு ஒரு புதிய பிரச்சினை ஒன்று உருவாகியுள்ளதும் நகரசபைத் தலைவருக்கு (chairman) பொருத்தமான ஒருவரை கண்டுபிடிப்பதற்கு அவர்கள் ஓடித்திரிவதாகத் தெரியவருகிறது. இப்பதவிக்கு அனுபவமும் முதிர்ச்சியும் வாய்த்த ஒருவர் அவசியம் என்று அவர்கள் கருதுவதால் வெளியிலிருந்தாவது ஒருவரை போட்டுவிட எடுத்த முயற்சியும் கைகூடவில்லையாம். இக்குழுவின் தலைவராகப் போட்டியிட்ட பெ.சூரியமூர்த்தி விருப்பவாக்குகளின்படி ஐந்தாமிடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

முதலாமிடத்தைப் பெற்றுள்ள நந்தகுமார் ஒரு ஆசிரியர் என்ற போதும், இவருக்கு முன் அனுபவம் இல்லாதது ஒரு குறையாகப் பேசப்படுகிறது.

இதேவேளை சுயேட்சைக் குழு 3 இல், கணிசமான விருப்ப வாக்குகளை பெற்றுள்ள மாயன் நாதன் என்பவர் நகர சுத்தி தொழிலாளர்கள் மத்தியிலிருந்து திருகோணமலை மாநகரசபை வரலாற்றிலேயே முதல்முதலாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஒருவர் என்றும், அவர் வெற்றி பெற்றதுதான் இந்த தேர்தலின் முக்கியமான அம்சம் என்றும் கருத்து தெரிவிக்கிறார் ஒரு முன்னை நாள் நகர சபை உறுப்பினர்.

தேர்தலின் போது,
கட்டை பறிச்சான், சம்பூர், சேனையூர் போன்ற பகுதிகளில் மக்களை வாக்களிக்கப் போகுமாறு இராணுவத்தினர் விரட்டினார்கள் என்றும், சாம்பல் தீவில் கள்ள வோட் போடவென லொறியொன்றில் இராணுவத்தால் ஆட்கள் கொண்டுவரப்பட்டதை எதிர்த்த சுயேட்சை வேட்பாளர் மகாலிங்கம் இராணுவத்தால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகிறது.

வாக்காளர்கட்கு அரிசி, பருப்பு சீனி என்பன சில இடங்களில் யூ.என்.பி. வேட்பாளர்களால் விநியோகிக்கப்பட்டும் உள்ளன.

## குழிபறிக்கிற கூட்டம்

சுயேட்சைக் குழுக்களாக போட்டியிட்ட தமிழ் குழுக்களான ஈரோஸ், ரெலோ, ஈ.பி.டி.பி. என்பவை ஒன்றுக்கொன்று குழிபறிக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தன.

புலிகளின் துண்டுப்பிரசுரங்களை, போஸ்டர்கள் சில இடங்களில் காணக்கூடியதாக இருந்தது. மக்கள் அதற்கு விளக்கம் அளிக்கும் போது அது ஈ.பி.டி.பி.யினரால் நிறுத்தப்பட்ட சுயேட்சைக்குழு தயாரித்தவை என்று எங்களுக்கு தெரியும் எனக் கூறினர்.

ஈ.பி.டி.பி யின் சுயேட்சைக்குழுவின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் என்பவர் இரு கள்ள வாக்குகள் போட்டு ஈரோஸ் குழுவினரிடம் அகப்பட்டதன் பின்னர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

பெப்.27ம் திகதி ஐ.தே.க வேட்பாளர் எம்.ஏ.ஹயாத் மொகம்மட்டுக்கும் முஸ்லீம் காங்கிரஸ் வேட்பாளர் அபுபக்கருக்கும் இடையில் நடந்த பலத்த வாக்கு வாதத்தின் போது அவர்களது ஆதரவாளர்கள் அடிதடியில் ஈடுபட்டுள்ளனர். மோதல் தொடர்கிறது.

## நாட்குறிப்பு

### பெப் -12

பதுளை றோட்டில் உள்ள மரப்பாலம் என்ற இடத்தில் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர் என்று சொல்லப் படும் தேவேந்திரராஜா சுட்டுக் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

பேசாலை கடற்கரைப்பகுதியில் இனந்தெரியாத படகு எனக்கூறி, கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில், இரு படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. இப்படகுகள் அப்பகுதி வாழ் மீனவருடையது எனத் தெரிய வருகிறது.

வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் இயக்குனரான நல்லதம்பி ஆறுமுகம் என்பவர் இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் ஐ.தே.கட்சிக்கு உதவி செய்தார் என்ற பெயரில் புலிகளாலேயே கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### பெப் -14

யாழ்மாவட்டத்தில் அரிசி, மா,சீனிக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு கடற்பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவரின் படகு கடற்படையினரால் தாக்கப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

### பெப் -15

செட்டிக்குளம் ஊர்காவல் பாதுகாப்பு அரணில் காவலுக்கு நின்ற படையினர் ஒருவர் புலிகளின் 'சினைப்பர்' சூட்டுக்கு இலக்காகி இறந்துள்ளதாக வவுனியா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆறுமாத கால இடைவெளியில் தேங்கியிருந்த 700 தபால் பொதிகள் அண்மையில் யாழ்ப்பாணத்திக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இவற்றில் இருந்த வெளிநாட்டுக் கடிதங்கள் யாவும் உடைக்கப்பட்டு இருந்ததுடன் பல கடிதங்கள் வெவ்வேறு உறைகளில் மாற்றி வைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

தெல்லிப்பளை, மல்லாகம், கட்டுவன் பகுதிகளில் விமானக்குண்டுவீச்சில் 5 பேர் பலி. 10 பேர் காயம்.

### பெப் -16

கிழக்கு மாகாண, வவுனியா மாவட்ட தேர்தல்களை கண்காணிக்க 4500ற்கு மேற்பட்ட பொலிஸார் அப்பிரதேசங்களில் குவிக்கப்பட்டுள்ளனர்.

காலியில் நாகலிங்கம், செல்லையா, குமாரசாமி, நவரட்ணம், ராஜலிங்கம் ஆகிய நால்வரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கரடியனாறு தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 19 வயது மாணவன் சி.கோபிகரன் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாக இராணுவட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

### பெப் -17

கடந்தவாரப் பிற்பகுதியில் பலாலி, மாதகல், மண்டைதீவு இராணுவ முகாம்களில் இருந்து பொதுமக்கள் வாழும் குடிமனைகளை நோக்கி ஷெல் வீச்சுக்கள் இடம் பெற்றுள்ளன.

ஓட்டமாவடியில் ஐ.தே.கட்சியினருக்கும் முஸ்லீம் காங்கிரசிற்கும் இடையில் கோஷ்டி மோதல். பலருக்கு காயம். தேர்தல் பிரச்சார 'பனர்கள்' இரவோடு இரவாக மாயம்.

### பெப் -18

யாழ். தெல்லிப்பழையில் பெப். 08 ம் திகதி நடாத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டு 9 பேர் காயமடைந்தனர்.

அதே தினத்தன்று கிளிநொச்சி நாச்சிக் குடாவில் வீசப்பட்ட குண்டினால் 3 பேர் மரணமாகி 9 பேர் காயமடைந்துள்ளனர்.

எயார்கொமடோர் என்சலன் பீரிஸ், ரஷ்ய எம்.ஐ. 8 விமானங்களைக் கொள்வனவு செய்ய ரஷ்யா சென்றுள்ளார்.

### பெப். -20

புத்தளம் மாவட்டத்தில் உள்ள உடப்பு, ஆண்டிமுனை முந்தல், கருங்காலச்சோலை, பூனைப்பிட்டி முதலிய கிராமங்களில் வாழும் தமிழர் விபரங்கள். பொலிஸாரால் திரட்டப்படுகின்றன.

### பெப். -21

நாச்சிக்குடா கடற்பகுதியில் இரண்டு மீனவரின் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.

### பெப். -22

சிங்களவரின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பொறுப்பைச் சிறுபான்மையினரிடம் ஒப்படைக்க முடியாது தேர்தல் முடிந்தபின் வடக்குக் கிழக்கைப் பிரிப்பேன். மொனராகலை ஐ.தே.க.கூட்டத்தில் ஜனாதிபதி பேச்சு.

### பெப்-23

வெலிஓயாவில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் மறைந்திருந்து நடாத்திய தாக்குதலில் 4 படையினரும் 15 புலிகளும் மரணமானதாகவும் புலிகளின் றொக்கட் தாக்குதலுக்கு இராணுவத்தை ஏற்றிவந்த கவசவாகனம் நாசமாக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவிப்பு.

மட்டக்களப்பு பொலிஸ் இராணுவ முகாம்களில் ஏற்பட்ட தீவிபத்தில் 1800 ரி -56 தோட்டாக்கள், ரி-56 தன்னியக்க றைபிள்கள் உட்பட பல சுற்று தோட்டாக்கள் நாசமாகியதாகத் தெரியவருகிறது.

### பெப்-24

அடையாள அட்டை வழங்குவதில் சிங்களவர்- தமிழர் என்ற பேதம் காட்டப்படுவதாக பதுளை மாவட்ட எம்.பி.டி.வி சென்னன் பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டு.

சப்ரகமுவா மாகாணசபை உறுப்பினர் ராஜனின் மகன் அடையாள அட்டை காட்டிய போதும் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டார்.

### பெப்-24

நான்கு வருட காலமாக புலிகளின் சிறையிலுள்ள பொலிஸில் இருவர் விடுவிப்பு.

### பெப் -28

கிளாலிக் கடலேரியில் குண்டுவீச்சு விமானம் ஒன்றும், இரண்டும் ஹெலிகொப்டர்களும் நடத்திய தாக்குதலில் படகுகள் காணாமல் போனதாகவும் ஏறத்தாழ 30 பேருக்கு என்ன நடந்தது ன்த் தெரியாது எனவும் கூறப்படுகிறது.

10/03/1994

சரிநிகர் மாதமிருமுறை இதழ். இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334 காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.